Follow us:

# தமிழன்

THAMILAN தமிலன்

தமிழ் பேசும் மக்களின் கருத்துரிமைக் காவலன்

மலர் : 02, இதழ் : 499 பிலவ வருடம், பங்குனி மாதம் 29ஆம் திகதி செவ்வாய்க்கிழமை (12.04.2022) ஹிஜ்ரி - 1443, ரமழான் - 10 , 0115886187 - பக்கங்கள் 12

விலை ரூ.30

# மக்களின் துயர் அறிவேன்: பொறுமையாக செயற்படுங்கள்!



## நாட்டு மக்களுக்கான உரையில் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ

நாட்டு மக்கள் படும் வேதனைகளை தாம் அறிவதாகவும், இக்கட்டான இந்தத் தருணத்தில் பொறுமையாக செயற்படுமாறும் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ மக்களிடம் வேண்டுகோள் விடுத்துள்ளார். நேற்று நாட்டு மக்களுக்கு உரையாற்றிய அவர் மேலும் கூறியதாவது,

இந்த நாட்டில் மிக முக்கியமான தருணத்தில் நான் உங்களிடம் பேச வேண்டும். எனது ஐம்பதாண்டுகால அரசியல் வாழ்க்கையில் நான் பல தீர்க்கமான அரசியல் மைல்கற்களை கடந்துள்ளேன் என்றுதான் சொல்லவேண்டும். ஆனால், இவை எல்லாவற்றையும் விட இது ஒரு நெருக்கடி என்பதை நான் அறிவேன்.

கொரோனா தொற்றுநோய்க்குப் பிறகு நாம் எதிர்கொண்டுள்ள பொருளாதார நெருக்கடியை இந்நாட்டு மக்கள் நன்கு அறிவார்கள் என்று நான் நம்புகிறேன். கொரோனா தொற்றிலிருந்து மக்களின் உயிரைக் காப்பாற்ற முடியும் என்றாலும், நம் நாடு இப்போது பெரும்... 02 பக்கம்

# பிறந்த குழந்தைகளுக்கான சிகிச்சை மருந்துகளுக்கும் பாரிய தட்டுப்பாடு

## வெளிநாடுகளிடம் அவசர உதவி கோரும் நிபுணர்கள்



02 பக்கம்

# இடைக்கால அரசு பரிசீலனை புஸ்வானமானது!

## பிரதமர் மஹிந்த தலைமையில் புதிய அமைச்சரவை அடுத்தவாரம் அமையும்

யோ.தர்மராஜ்

அரசுக்குள் உக்கிரமடைந்துள்ள அரசியல் நெருக்கடியால் இடைக்கால அரசாங்கம் அமைக்கும் யோசனையை ஆராய்வதை ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ பிற்போட்டுள்ளதாக ஆளுந்தரப்பு முக்கியஸ்தர் ஒருவர் 'தமிழன்' நாளிதழிடம் நேற்று தெரிவித்தார்.

பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவை மாற்றாமல் இடைக்கால அரசாங்கத்தை அமைப்பதற்கு ஜனாதிபதி முற்படுவதால் ஏனைய தரப்புகளும் இந்த யோசனைக்கு... 02 பக்கம்




ஒரு பக்கம் மழை, மறுபக்கம் மண்ணெண்ணெய் வரிசை, இன்னொரு பக்கம் பொருளாதார சுமைகளை அனுபவிக்கும் மக்கள் இவர்கள்...

# காபந்து அரசு கால்பந்து ஆட்சியாகிவிடும்: ஜனாதிபதியின் அதிகாரங்களை பறிக்கவேண்டும்!

## எம்.பிக்களை மனசாட்சிப்படி வாக்களிக்க கோரவேண்டும் என்கிறார் மனோ எம்.பி.



02 பக்கம்







# கோல்பேசில் உருவான கோட்டா கோ கிராமம்

காலிமுகத்திடல் மற்றும் ஜனாதிபதி செயலக முன்றலில் கடந்த இரண்டு நாட்களாக பல்வேறு தரப்பினராலும் இணைந்து முன்னெடுக்கப்பட்டு வரும் ஆர்ப்பாட்டம் நேற்று மூன்றாவது நாளாகவும் தொடர்ந்தவண்ணம் உள்ளது.

கடந்த பல மாதங்களாக காலிமுகத்திடல் பகுதியில் ஆர்ப்பாட்டங்களை மேற்கொள்வதற்கு ஆர்ப்பாட்ட இடம் என பெயர்ப்பலகை காட்சிப்படுத்தப்பட்டிருந்தது.

இந்நிலையில், தற்போது ஆர்ப்பாட்டக் காரர்களால் காலிமுக ஆர்ப்பாட்டத்தின் அந்த இடத்திற்கு 'கோட்டாகோகம' என்று பெயரிடப்பட்டதுடன், அவர்கள் அதை கூகுள் மெப்பிலும் இணைத்துள்ளனர்.

## கமெண்ட் கந்தர்..



மனோ எம்.பி, ரி .ராஜேந்தர் ரசிகரா இருப்பாரோ?

# புத்தாண்டுக் காலத்தில் மின்வெட்டு இல்லை

புத்தாண்டுக் காலத்தில் மின்வெட்டு நடைமுறைப்படுத்தப்படமாட்டாது என அறிவிக்கப்பட்டுள்ளது

இதன்படி, எதிர்வரும் 13, 14 மற்றும் 15ஆம் திகதிகளில் மின்வெட்டு நடைமுறைப்படுத்தப்படமாட்டாது என பொதுப் பயன்பாடுகள் ஆணைக் குழு குறிப்பிட்டுள்ளது.

மேலும், 16 மற்றும் 17ஆம் திகதிகளில் காலை 8 மணிமுதல் மாலை 5 மணிவரையான காலப் பகுதியில் 2 மணித்தியாலம் 15 நிமிடங்கள் மாத்திரமே மின்வெட்டு நடைமுறைப்படுத்தப்படும் எனவும் ஆணைக்குழு குறிப்பிடப்பட்டுள்ளது.

# எரிபொருள் வரிசையில் நின்ற மேலுமொருவர் பலி



கணவரை கட்டியணைத்து கதறும் மணைவி...

எரிபொருள் பெற்றுக்கொள்வதற்காக ஹினிதும, தவலம எரிபொருள் நிரப்பு நிலையத்துக்கு அருகில் வரிசையில் காத்திருந்த மேலுமொரு நபர் நேற்று (11) காலை சாரதி ஆசனத்தில் இருந்த நிலையிலேயே உயிரிழந்துள்ளதாக ஹினிதும பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

ஹபரகம, தவலம, பதுவத்த பிரதேசத்தைச் சேர்ந்த 43 வயதுடைய சந்தகொட பத்திரணகே திலக் குமார என்பவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

இதுதொடர்பில் மேலும் தெரியவருவதாவது, 02 பக்கம்

# ஜனாதிபதிக்கு ஆதரவான குழுவைத் தாக்கிய கோ ஹோம் கோட்டா அணி




## சிலாபத்தில் நேற்று களேபரம்

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவுக்கு ஆதரவளித்து சிலாபம் நகரில் ஆர்ப்பாட்டமொன்று நேற்று (11) முன்னெடுக்கப்பட்டது. இதன்போது ஆர்ப்பாட்டக் காரர்களுக்கும் இன்னுமொரு தரப்பிரனருக்கு இடையில் மோதல் நிலை ஏற்பட்டது.

இந்த மோதல் நிலை தீவிரமடைந்ததால் நிலைமையை கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவர... 02 பக்கம்

## உஷ்



மஹிந்த ராஜபக்சவை பிரதமர் பதவியில் இருந்து அகற்ற வேண்டுமென சுயாதீன எம்.பிக்களில் சிலர் ஜனாதிபதியிடம் கூறினாலும் இடைக்கால அரசு வருமாயின் அதில் பிரதமராக யார் வருவது என்பதில் கடும் போட்டி நிலவுகிறதாம்.

மைத்ரி, ஹர்ஷ டி சில்வா, விமல், சம்பிக்க, சஜித், அனுரகுமார உட்பட்ட பலரின் பெயர்கள் அடிபடுகிறதாம்.இந்த அடிபாடுகளுக்குள் புதிய பிரதமர் நியமனம் தேவைதானா என்று யோசிக்கிறாராம் ஜனாதிபதி.

# ஜூலை, ஓகஸ்ட் மாதங்களில் வாழ முடியாத நிலை ஏற்படும்

## ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் சுட்டிக்காட்டு

எதிர்வரும் ஓகஸ்ட் மாதமளவில் வாழகூட முடியாத நிலைமை ஏற்படும் என முன்னாள் பிரதமர் ரணில் விக்ரமசிங்க தெரிவித்துள்ளார். இளைஞர், யுவதிகளின் பிரச்சினைகள் சிலவற்றுக்கு பதிலளித்து ரணில் விக்ரமசிங்க இதனைக் கூறியுள்ளார்.

ஐக்கிய தேசியக் கட்சியின் ஊடகப் பிரிவு அக்கட்சியின் தலைவர் ரணில் விக்ரமசிங்கவின் உரை அடங்கிய காணொளி ஒன்றை வெளியிட்டுள்ளது.



இளைஞர்களின் போராட்டமானது இலங்கையின் தற்போதைய அரசியல் வரலாற்றில் மிகப்பெரிய அரசியல் புரட்சி. கூடிய கூட்டத்தைப் பாருங்கள் பாரியளவில் கூடியுள்ளனர். அரசியல் கட்சிகள் அதிகளவில் மக்களை அழைத்து வந்துள்ளனர். அண்மைய காலத்தில் நாம் கண்ட மிகப்பெரிய மக்கள் கூட்டம். 02 பக்கம்

# கலன்களில் எரிபொருள் விநியோகிக்கும் செயற்பாடு 3 நாட்களுக்கு இடைநிறுத்தம்!



02 பக்கம்

# அரச ஆதரவாளர்களுக்கு புல், புண்ணாக்கு படையல்




## அநுராதபுரத்தில் சம்பவம்

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவுக்கு ஆதரவாக அநுராதபுரம் நகரில் நேற்று (11) ஏற்பாடுசெய்யப்பட்டிருந்த பேரணியில் கலந்துகொண்டவர்கள் மீது கல்வீச்சு தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது. 02 பக்கம்

# டொலரின் பெறுமதி மேலும் அதிகரித்தது

## கடும் வீழ்ச்சியை சந்தித்தது ரூபா

அமெரிக்க டொலருக்கு நிகரான இலங்கை ரூபாவின் பெறுமதி கடும் வீழ்ச்சியடைந்துள்ளது. இந்நிலையில், இலங்கையில் உரிமம் பெற்ற வணிக வங்கிகளில் நேற்றைய தினம் டொலர் ஒன்றின் விற்பனை பெறுமதி 330 ரூபாவாக பதிவாகியுள்ளது. இதன்படி, இலங்கையில் உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகளில் டொலர் ஒன்றின் பெறுமதி இவ்வாறு பதிவாகியுள்ளது.

## அரச ஆதரவாளர்களுக்கு ...

இந்தச் சம்பவத்துடன் தொடர்புடைய சந்தேகநபரொருவர் அநுராதபுரம் பொலிஸாரினால் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

இதுதொடர்பில் மேலும் தெரியவருவதாவது,

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவுக்கு ஆதரவளித்து ஆர்ப்பாட்டம் மற்றும் பேரணி என்பன வடமத்திய மாகாண சபையின் முன்னாள் அமைச்சர் எஸ்.எம்.ரஞ்சித் சமரக்கோன் உள்ளிட்டோரினால் அநுராதபுரத்தில் நேற்று ஏற்பாடுசெய்யப்பட்டிருந்தது.

இந்த ஆர்ப்பாட்டம் அநுராதபுரம் புதிய நகர் வங்கி இடத்தில் அமைந்துள்ள பொதுஜன பெரமுன மாவட்ட அலுவலகத்தின் முன்னால் இடம்பெற்றது. ஆர்ப்பாட்டத்தை தொடர்ந்து கடிகார கோபுரத்தை நோக்கிய பேரணியாக பயணித்துக்கொண்டிருந்தபோது, அதனருகிலிருந்த ஒசுசல மருந்தகத்தின் முன்னால் நபரொருவர் பேரணி மீது கல்தாக்குதல் நடத்தியுள்ளார்.

தாக்குதலை நடத்திய நபர் குறித்த இடத்தில் வைத்தே பொலிஸாரினால் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

இதனிடையே, இந்தப் பேரணி பயணித்துக்கொண்டிருந்தபோது இடையில் வீதியில் சில குழுவினரால் புல் மற்றும் புண்ணாக்கு வைக்கப்பட்டிருந்ததையும் அவதானிக்கக் கூடியதாக இருந்துள்ளது.

இந்த எதிர்ப்பு ஆர்ப்பாட்டப் பேரணியில் பொதுஜன பெரமுனவின் ஆதரவாளர்கள் உள்ளிட்ட பிரதேச அரசியவாதிகள் சிலரும் கலந்துகொண்டமை குறிப்பிடத்தக்கது.

## கலன்களில் எரிபொருள் ...

நாளைமுதல் எதிர்வரும் 14ஆம் திகதிவரையில் கேன்கள் மற்றும் பீப்பாய்களுக்கு எரிபொருள் விநியோகிப்பதை இடைநிறுத்துவதற்கு தீர்மானித்துள்ளதாக இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் அறிவித்துள்ளது.

இது தொடர்பில் நேற்று ஊடகங்களுக்கு கருத்து வெளியிடும்போதே இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத் தலைவர் சுமித் விஜேசிங்க இதனைத் தெரிவித்தார்.

இதன்படி, குறித்த சட்டத்தை மீறும் எரிபொருள் விநியோகஸ்தர்கள் தொடர்பில் நடவடிக்கை எடுப்பதற்கு இலங்கை பொலிஸ் திணைக்களத்துக்கு அறிவித்தல் விடுத்துள்ளதாகவும் எரிபொருள் விநியோகிப்பவர்களுக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

மண்ணெண்ணெய் விநியோகம் சீராக இடம்பெறுமென அறிவிக்கப்பட்டுள்ளது.

## எரிபொருள் வரிசையில் ...

உயிரிழந்த நபர் நேற்று காலை 4.30 மணியளவில் தனது வாகனத்தில் வந்து குறித்த எரிபொருள் வரிசையில் இணைந்து கொண்டுள்ளார்.

வரிசையில் காத்திருந்த வாகனங்கள் முன்னால் சென்றுகொண்டிருந்தபோது உயிரிழந்த நபர் இருந்த வாகனம் முன்னால் செல்லாமையினால், காலை 6.30 மணியளவில் பின்னால் இருந்த வாகன சாரதிகள் வாகனத்தை பரிசோதித்துள்ளனர். அதன்போது குறித்த நபர் உயிரிழந்திருந்ததை அவதானித்துள்ளனர் .

அதன்பின்னர் இதுபற்றி பொலிஸாருக்கு அறிவிக்கப்பட்டுள்ளதுடன், பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

## பிறந்த குழந்தைகளுக்கான...

முன்னெப்போதும் இல்லாத வகையில் பொருளாதார நெருக்கடியுடன் போராடிவரும் இலங்கையில் புதிதாகப் பிறந்த குழந்தைகளுக்கு சிகிச்சையளிப்பதற்கும் காப்பாற்றுவதற்கும் அவசர மருத்துவப் பொருட்கள் தேவை என்று இலங்கையின் குழந்தை நிபுணர்கள் அழைப்பு விடுத்துள்ளனர்.

இதன்படி முக்கியமான மருந்துகள் மற்றும் மருத்துவ உபகரணங்களுடன், எண்டோட்ராயல் (ET) குழாய்கள் போன்ற உடனடி நன்கொடைகளை அவர்கள் எதிர்பார்ப்பதாக தெரிவிக்கப்படுகிறது. வெளிநாட்டிலுள்ள தமது சகாக்களுக்கு இந்த முக்கியமான செய்தியை அவர்கள் அனுப்பியுள்ளனர்.

இலங்கையின் மருத்துவமனை அமைப்பில் பல விடயங்கள் குறைவாக உள்ளன, இதில் குறிப்பாக புதிதாகப் பிறந்த குழந்தைகளை காற்றோட்டம் செய்ய எண்டோட்ராயல் குழாய்களின் பற்றாக்குறை குறித்து குழந்தை மருத்துவ நிபுணர்கள் கவலை வெளியிட்டுள்ளனர்.

தற்போது மருத்துவமனைகளில் இருக்கும் கையிருப்பு மிக விரைவில் தீர்ந்துவிடும் என்று அரச துறையில் சேவையாற்றும் சிரேஷ்ட குழந்தை மருத்துவ நிபுணர் சமன் குமார கூறியுள்ளார்.

நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை இது தொடர்பில் யூடியூப் செய்தி ஒன்றை வெளியிட்டுள்ள அவர்,

பிறந்த குழந்தை பராமரிப்புக்கான பொருட்களை அனுப்ப வெளிநாட்டிலுள்ள தமது நண்பர்களிடம் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

பற்றாக்குறை காரணமாக ET குழாய்களை மீண்டும் பயன்படுத்தும் நிலைக்கு வந்துவிட்டதாக தெரிவித்துள்ள சமன் குமார, நிலைமையை மோசமானது என்று விவரித்துள்ளார்.

தமிழன் தமிழன் ஜூனியர்

கொழும்பு 01 முதல் 15 வரையிலான பகுதிகளில் தமிழன் (தினசரி, வாரஇதழ்), ஜூனியர் பத்திரிகை வீடுகளுக்கே விநியோகம் செய்யப்படும்.

தொடர்பு - சந்திரகுமார்
0777983308

மரண அறிவித்தல், நினைவஞ்சலி, மற்றும் பிறந்தநாள் விளம்பரங்களை குறைந்த கட்டணத்தில் பிரசுரிக்க வெறும் 1000/= மட்டுமே...

அழையுங்கள்
0761393805




## இடைக்கால அரசு...

ஆதரவளிக்க முடியாதென அறிவித்துள்ளதாகவும் அறியமுடிந்தது.

அரசாங்கத்திற்கு எதிரான எதிர்ப்புகள் வலுப்பெற்றுள்ளதால் அமைச்சரவை கலைக்கப்பட்டு நான்கு அமைச்சர்களால் நாட்டின் செயற்பாடுகள் முன்னெடுக்கப்படுகின்றன. இது நாட்டின் நெருக்கடியை மேலும் மேலும் உக்கிரமடையச் செய்வதால் இதற்கு உடனடியாக மாற்று நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என அனைத்து தரப்பினரும் வலியுறுத்தி வருகின்றனர்.

எனினும், இடைக்கால அரசாங்கத்திற்கு எதிர்த்தரப்புகள் ஒத்துழைப்பு வழங்காதமையினால் அரசாங்கத்திருலிருந்து வெளியேறி சுயாதீனமாக செயற்படும் தரப்புடன் இடைக்கால அரசாங்கத்தை அமைப்பதற்கு ஜனாதிபதியிடம் யோசனை முன்வைக்கப்பட்டது.

இதனையடுத்து, ஜனாதிபதிக்கும் சுயாதீன குழுக்களுக்கிடையிலான பேச்சுவார்த்தையின் போது இந்த யோசனை தீவிரமாக ஆராயப்பட்டுள்ளது. இதன்போது, சுயாதீன குழுக்கள் கூறுவதுபோன்று இடைக்கால அரசாங்கத்தை அமைப்பதற்கு ஜனாதிபதி இணக்கம் தெரிவித்துள்ளபோதிலும், பிரதமரை மாற்ற முடியாது என ஜனாதிபதி அறிவித்துள்ளார்.

இதேவேளை, பிரதமரை பதவி விலக வேண்டாம் என ஆளுந்தரப்பு அமைச்சர்களும் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவிடம் வலியுறுத்தியுள்ளதுடன், பிரதமரை நீக்கினால் அது அரசுக்கு பெரும் பாதிப்பை ஏற்படுத்துவதுடன், ஜனாதிபதிக்கு எதிரான குற்றவியல் பிரேரணையை கொண்டுவருவதற்கு இலகுவானதாக இருக்கும் எனவும் ஆளுந்தரப்பு உறுப்பினர்கள் ஜனாதிபதியிடம் அறிவித்துள்ளனர்.

இதனால், பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ தலைமையிலேயே இடைக்கால அரசாங்கத்தை அமைக்க முடியும் என ஜனாதிபதி உறுதியாக இருப்பதால் சுயாதீன குழுக்கள் இதற்கு இணக்கம் தெரிவிக்க முடியாது எனவும் தெரிவித்துள்ளனர்.

பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவை நீக்கி புதிய பிரதமர் தலைமையில் இடைக்கால அரசாங்கம் ஒன்றை அமைக்காத பட்சத்தில் நாங்களும் அரசுக்கு ஆதரவளிக்க முடியாது என சுயாதீன குழுக்கள் தெரிவித்துள்ளன.

இதனால், இடைக்கால அரசாங்கம் அமைக்கும் முயற்சியை ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ பிற்போட்டுள்ளதாக அறிய முடிந்தது. எனவே, புத்தாண்டுக்கு பின்னரே அமைச்சரவையும் அரசாங்கத்தின் அடுத்தகட்ட நகர்வுகளும் முன்னெடுக்கப்படும் என அறியமுடிந்தது.

## ஜனாதிபதிக்கு ஆதரவான...

பொலிஸார் மற்றும் இராணுவத்தினர் கடமைக்கு அமர்த்தப்பட்டுள்ளனர். பாதுகாப்புப் பிரிவினர்கள் இணைந்து நிலைமையை கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவர நடவடிக்கை எடுத்துள்ளனர்.

இந்தச் சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது,

இராஜாங்க அமைச்சர் சனத் நிஷாந்த உள்ளிட்ட அரசாங்கத்துக்கு ஆதரவானவர்கள் சிலர் புத்தளம் நகரில் ஆர்ப்பாட்டமொன்றில் ஈடுபட்டு பேரணியாக சென்றுள்ளனர். இதன்போது ஐக்கிய தேசியக் கட்சி மற்றும் மேலும் எதிர்ப்பு ஆர்ப்பாட்டத்தில் பங்குபற்றியவர்களுக்கும் இடையில் அமைதியற்ற நிலை ஏற்பட்டுள்ளது.

இதேவேளை, பொதுஜன பெரமுன தரப்பினரின் ஆர்ப்பாட்டத்தின் மீது கல் வீச்சும் நடத்தப்பட்டுள்ளது. அதனைத் தொடர்ந்தே மோதல் நிலை தீவிரமடைந்துள்ளது. இந்த மோதல் சம்பவத்தினால் இரு வாகனங்களுக்கு சேதம் ஏற்பட்டுள்ளது.

இந்தச் சம்பவம் தொடர்பில் மேலதிக விசாரணைகளை பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர்.

## ஜூலை, ஓகஸ்ட்...

பஸங்கள், பாரவூர்திகள் இன்றி ஒரு செய்தி மூலம் இளைஞர்கள் ஒன்றுதிரண்டுள்ளனர். எவரும் மது அருந்தி இருக்கவில்லை, சத்தமிடவில்லை. பட்டாசு கொளுத்தவில்லை. மிகவும் அமைதியாக செய்தியொன்றை வழங்க இந்த இடத்திற்கு வந்தனர்.

கண்டியிலும் வேறு இடங்களிலும் இளைஞர், யுவதிகள் ஒன்றுகூடினர். இளைஞர், யுவதிகள் தமது பலத்தை உறுதிப்படுத்தியுள்ளனர். நாடாளுமன்றம், அரசியல் கட்சி மற்றும் சிவில் அமைப்புகளுடன் ஒப்பிடும்போது இளைஞர்களின் அணியே முன்னோக்கி வந்துள்ளது.

ஏன் முன்னோக்கி வந்துள்ளனர்? ஜனாதிபதியை பதவி விலகுமாறு கோரினர். இதற்கு வழங்கப்பட்ட பதில் தொடர்பில் அவர்கள் திருப்தியடையவில்லை. நாடாளுமன்றத்தின் செயற்பாடுகள் தொடர்பிலும் திருப்தியடையவில்லை. இதனால், இளைஞர், யுவதிகள் தமது பலத்தில் முன்னோக்கி வந்துள்ளனர்.

அனைவரும் இளைஞர்கள். நடுத்தர வகுப்பு மக்களுடன் இந்த எழுச்சி ஆரம்பமானது. எனினும், இளைய தலைமுறையினரே முன்னோக்கி வந்தனர். அவர்களே அடையாளமாக மாறினர். விவசாயிகள், முச்சக்கரவண்டி ஓட்டுநர்கள், சிறிய வியாபாரங்கள் செய்வோர் மற்றும் அரச ஊழியர்கள் இருக்கின்றனர்.

இளைஞர்கள் தமக்கான எதிர்காலத்தை உருவாக்கிக் கொடுக்குமாறு கோருகின்றனர். உங்களால் முடியாதென்றால், நாங்கள் அதனை செய்கிறோம் என இந்த ஆர்ப்பாட்டங்கள் மூலமாக இளைஞர்கள் அரசியல் அதிகாரத்திற்கு செய்தியை வழங்கியுள்ளனர்.

கோட்டா வீட்டுக்கு போங்கள் என்றே இளைஞர்கள் கூறுகின்றனர். கோட்டா இன்னும் வீட்டுக்கு செல்லவில்லை. என்னை மாத்திரமே வீட்டுக்கு அனுப்பியுள்ளனர். இவை குறித்து சிந்தித்துப் பார்க்க எனக்கு சந்தர்ப்பம் கிடைத்தது.

புதிய அதிகாரம் மையம் உருவாகியுள்ளது. ஏனைய அதிகார மையங்கள் பலவீனமடைந்துள்ளன. இதனை சம்பிரதாயபூர்வமான அரசியல்வாதிகள் உணரவேண்டும். நாட்டில் என்ன நடக்கின்றது என்பதை உணரவேண்டும். இதனை உணரவில்லை என்றால், எம்மால் முன்னோக்கி செல்ல முடியாது.

அரசியல் தலைவர்கள், தொழிற்சங்கத் தலைவர்கள், வர்த்தகத் தலைவர்கள், சமயத் தலைவர்கள் இவர்கள் எவரையும் இளைஞர்கள் கவனத்திற்கொள்வதில்லை. தமக்கான எதிர்காலத்தை கோருகின்றனர். தம்மை பாதுகாத்து தருமாறு நடுத்தர வகுப்பினர் கோருகின்றனர்.

இது பொருளாதார நெருக்கடியின் ஆரம்பம் மட்டுமே. பணவீக்கம் மேலும் அதிகரிக்கும். பணவீக்கம் என்ற பிரச்சினை உடனடியாக தீராது, மேல் நோக்கி சென்றே கீழ் நோக்கி வரும்.

ஜூலை, ஓகஸ்ட் மாதங்களில் பலருக்கு வாழவும் கஷ்டம் ஏற்படும். பணம் அச்சிடுவது நிறுத்தப்பட்டாலும் பிரச்சினைகள் ஏற்படும். மத்திய வங்கி வட்டி வீதத்தை அதிகரித்தது, இதன் காரணமாக சிறிய வர்த்தகங்கள் பாதிக்கப்படும் என ரணில் விக்ரமசிங்க மேலும் தெரிவித்துள்ளார்.

## மக்களின் துயர் அறிவேன்:

பாதாளத்தில் விழுந்துகொண்டிருக்கிறது என்றே சொல்லவேண்டும். நாடு மூடப்பட்டதால், அந்நியச் செலாவணி வருகை தடைப்பட்டது மற்றும் அந்நிய கையிருப்பு வறண்டு போனது என்பதைச் சொல்லத் தேவையில்லை. இன்று கடலில் எண்ணெய்க் கப்பல்கள் தோன்றினாலும் அதை இறக்குவதற்கு பணம் இல்லாததால் மக்களை இருளில் தள்ளவேண்டியுள்ளது.

2010ஆம் ஆண்டு ஜனாதிபதித் தேர்தலில் போரில் வெற்றிபெற்றபோது மக்களுக்கு ஆற்றிய உரையை இந்தத் தருணத்தில் நினைவுபடுத்துகின்றேன். எதிர்காலத்தில் மின்வெட்டு இல்லாத நாட்டை உருவாக்குவோம் எனக் கூறினேன் என்றார். இதற்காக நாம் மின் உற்பத்தி நிலையங்களை நிர்மாணித்த போதும் அந்த எதிர்பார்ப்புகளை நிறைவேற்ற முடியவில்லை.அதுதான் உண்மை.

யார் பணியை தவறவிட்டாலும், ஆட்சியில் உள்ள அரசுதான் இறுதி பொறுப்பை ஏற்க வேண்டும். எண்ணெய் வரிசைகளில் பல நாட்களாக வரிசையில் நிற்கும் மக்களின் சோர்வு எனக்குப் புரிகிறது. எரிவாயுவுக்காக வரிசையில் நிற்கும் பெண்களின் துயரத்தை என்னால் புரிந்துகொள்ள முடிகிறது.

நாட்டு மக்களிடையே இருந்த மரண பயத்தை ஒழித்து 30 வருடகால பயங்கரவாத அச்சுறுத்தலை முடிவுக்கு நாம் கொண்டுவந்தது இவ்வாறானதொரு விதியையும் வலியையும் மக்களுக்கு ஏற்படுத்துவதற்கு அல்ல. நாங்கள் நெடுஞ்சாலைகளை அமைத்தோம், நவீன சாலைகளை உருவாக்கினோம். அந்த சாலைகளில் வரிசையில் மக்களை நிறுத்துவதற்காக அல்ல. நாங்கள் துறைமுகங்களை கட்டினோம், எண்ணெய்க் கப்பல்கள் பணம் செலுத்தமுடியாமல் துறைமுகங்களில் தரித்துவைக்கவல்ல.

பிற நாடுகளில் கொரோனா தொற்றால் ஆயிரக்கணக்கானோர் இறந்தபோது, அனைத்து வசதிகளுடன் கூடிய கொரோனா மையங்கள் அமைக்கப்பட்டு, உணவும் மருந்தும் வழங்கப்பட்டு, ஒரு கோப்பை கொத்தமல்லி வழங்கி தடுப்பூசி ஊசி போட்டு மக்களின் உயிர் காக்கப்பட்டது. இந்த நாட்டின் ஒவ்வொரு பிரச்சினையிலும் மக்களைக் காக்க அதிகபட்ச தியாகங்களைச் செய்த வரலாறு எமக்குண்டு.

இந்த நெருக்கடியிலிருந்து மீள அனைத்து முயற்சிகளையும் மேற்கொண்டோம்.

மக்களுடன் துணிச்சலுடன் பணியாற்றவும், இலங்கையை கடன் இல்லாத நாடாக மாற்றவும் அரசாங்கம் வெளிநாட்டிலிருந்து கடன் வாங்குவதைத் தடைசெய்தது. மிகவும் கடினமான சூழ்நிலையிலும், வெளிநாட்டிலிருந்து உதவியை நாடும்போது நாட்டின் சுதந்திரத்தை பாதுகாக்க நாங்கள் எப்போதும் முயற்சி செய்தோம். அவ்வாறான சமயங்களில் மக்கள் உணர்வுகளுக்கு மதிப்பளித்து இலங்கைக்கு பாரிய முதலீடுகளை கொண்டுவரும் வாய்ப்புகளை விலக்கிக் கொண்டோம். ஆனால், பாதிக்கப்பட்டது மக்கள் தானே.

இந்த நேரத்தில் மக்களின் நிகழ்ச்சி நிரல் மாறிவிட்டது என்பதை நான் அறிவேன். குடும்ப ஆட்சிதான் பிரச்சினை என்றால், அதைக் கைவிடுவதற்கான ஏற்பாடுகளை ஏற்கனவே செய்துவிட்டோம். மக்களின் எதிர்ப்பைக் கேட்டு ஒட்டுமொத்த அமைச்சரவையும் தானாக முன்வந்து ராஜினாமா செய்தது. எனக்கும் ஜனாதிபதிக்கும் ராஜினாமா செய்வது கடினம் அல்ல. ஆனால், ஜனநாயகக் கட்டமைப்பை சீர்குலைக்காத முடிவை எடுக்க, மக்களின் இறையாண்மையை நிலைநாட்டுவது நமது பொறுப்பு. அதை மட்டும் மனதில்கொண்டு தொடர்ந்து பணியாற்றுவோம். அரசியலில் நாம் விட்டுக்கொடுப்பதற்கும், தோல்விக்கும் பழக்கப்பட்டவர்கள்.

நாடாளுமன்றத்தில் 225 பேரும் வேண்டாம் என்ற கோஷம் இப்போது கேட்கிறது. இந்த ஜனநாயக அமைப்பை நிராகரிக்க வேண்டும் என்றால், அதன் ஆபத்தை வரலாற்றைப் பார்த்து புரிந்துகொள்ள வேண்டும். நாடாளுமன்றம் மீது குண்டு வீசி, முழு நாடாளுமன்றையும் அழிக்கும் முயற்சியின் பேரழிவை நாங்கள் கண்டோம். அப்போது நாடாளுமன்ற ஜனநாயகத்தை நிராகரித்ததால் இளம் இரத்தம் தெருக்களில் பாய்ந்தது. ஆயிரக்கணக்கான இளைஞர்கள் உயிருடன் ரயர்களில் எரிக்கப்பட்டும், அவர்களைக் காப்பாற்ற படகில் பயணித்த அன்றைய காலகட்டத்தில் இளைஞர்களின் உயிரைக் காப்பாற்றும் கடின உழைப்பை நாம் அறிவோம்.

வடக்கிலும் தெற்கிலும் உள்ள இளைஞர்களுக்கு இது குறித்து நினைவூட்ட விரும்புகின்றேன். 1970 மற்றும் 1980களில் நாடாளுமன்றம் வேண்டாம், தேர்தல் வேண்டாம் என்று வடக்கின் இளைஞர்கள் வீதியில் இறங்கியபோதே மக்கள் பிரதிநிதிகள் கொல்லப்பட ஆரம்பித்தார்கள். வடபகுதியில் ஆரம்பித்த இந்த இயக்கத்தினால் முப்பது வருடங்களாக மக்கள் பாதிக்கப்பட்டுள்ளனர். கண்ணிவெடிகள் மற்றும் தோட்டாக்களால் பல்லாயிரக்கணக்கானோர் கொல்லப்பட்டனர். அவர்கள் தங்கள் இடங்களை இழந்தனர். முதலில் பாடசாலை மாணவர்களை வீதிக்கு இழுத்து போராட்டம் நடத்தப்பட்டது. அடுத்தகட்டமாக பாடசாலை சிறுவர்களை வலுக்கட்டாயமாக போருக்கு இழுத்தது. அதனால்தான் நாடாளுமன்றம் வேண்டாம் என்று சொல்ல ஆரம்பிக்கப்பட்டது. நீங்கள் பிறந்த தாய்நாட்டை அந்த இருண்ட கடந்த காலத்துக்குள் கொண்டுசென்று வாழ வேண்டாம் என்று எனது அன்பு மகன்களையும் மகள்களையும் கேட்டுக்கொள்கிறேன்.

நீங்கள் அனைவரும் உங்கள் தாய்நாட்டை மிகவும் நேசிக்கிறீர்கள் என்பதை நான் அறிவேன். போராட்டத்தில் ஈடுபட்ட இளைஞர்களில் ஏற்கனவே சுவர்களில் வர்ணம் பூசி, தரிசு நிலங்களில் பயிரிட்ட இளைஞர்களும் உள்ளனர். இப்படிப்பட்ட இளைஞர்களின் எதிர்ப்பை நம்மால் புரிந்துகொள்ள முடிகிறது. நீங்கள் தீவிரமான அழிவுச் செயல்களில் ஈடுபடாமல், உடமைகளுக்கும் உயிர்களுக்கும் சேதம் விளைவிக்காமல் எதிர்ப்புத் தெரிவிக்கும் வரை உங்களுக்கு எந்த ஆபத்தும் ஏற்படாது.

எனக்கும் எனது குடும்பத்துக்கும் இதுவரை இழைக்கப்பட்ட அவமானங்களும் சாபங்களும் அதிகம். ஆனால், நாட்டின் சார்பாக இராணுவம் மற்றும் காவல்துறையில் பணியாற்றுபவர்களை துன்புறுத்தவோ, அவமதிக்கவோ கூடாது. இன்று மக்களை காக்க சீருடையில் இருக்கும் பொலிஸாரும் இராணுவ அதிகாரிகளும் நாட்டுக்காக உயிரைத் தியாகம் செய்து வீதியில் இறங்கிப் போராட்டம் நடத்த அனுமதித்த மாவீரர்கள். மேலும், கொரோனா தொற்றிலிருந்து உங்களைக் காப்பாற்ற பெரும் தியாகங்களைச் செய்த மாவீரர்கள் என்பதை நினைவில் கொள்ளுங்கள்.

போராட்டத்தின்போது உங்கள் கையில் தேசியக் கொடி அசைவதை நான் காண்கிறேன். அந்தக் கொடி நாம் பிறந்த மண்ணில் எங்கும் பறக்கும் நாட்டை உருவாக்கினோம். அந்தத் தேசியக் கொடிக்கு பலம் தந்த நாங்கள், உங்களுக்கு மரியாதையுடன் இந்த அழைப்பை விடுக்கலாம். எண்பதுகளில் சிந்திய இரத்தம் மீண்டும் சிந்தப்படாமல் இருக்குமாறு பணிவுடன் கேட்டுக்கொள்கிறேன். நாம் பிறந்த மண்ணுக்கு இந்த இக்கட்டான சூழ்நிலையில் பொறுமையாக செயலாற்றுவோம்.

## காபந்து அரசு கால்பந்து

ஜனாதிபதிக்கு அதீத அதிகாரங்களை வழங்கும் 20ஆம் திருத்தத்தை அகற்றி, நாடாளுமன்றத்துக்கு அதிகாரங்களை மீளப்பெறும் 19ஆம் திருத்தத்தை உள்வாங்கி, ஜனாதிபதியின் அதிகாரங்களை பிடுங்கும் 21ஆம் திருத்தத்தை நாடாளுமன்றத்தில் வாக்கெடுப்புக்கு விடுவோம். இதற்கான வாக்கெடுப்பில் கட்சி பேதங்களுக்கு அப்பால் சென்று நாடாளுமன்ற உறுப்பினர்களை வாக்களிக்க கோருவோம். 225 எம்.பிக்களில் மனசாட்சிப்படி வாக்களிக்கும் எம்.பிக்கள் யார், மனசாட்சியை மறந்துவிட்டு வாக்களிப்பவர்கள் யார் என்பதை அவர்களுக்கு வாக்களித்த மக்களும், வெளியே போராடும் மக்களும் அறிந்துகொள்ளலாம்.

முதலில் இவரது அதிகாரங்களைப் பிடுங்க வேண்டும். அதைவிடுத்து இவருக்கு கீழே "காபந்து" அரசு அமைத்தால், அது "கால்பந்து" அரசாகவே அமையும் என தமிழ் முற்போக்கு கூட்டணி தலைவர் மனோ கணேசன் தனது ட்வீட்டர் தளத்தில் கூறியுள்ளார்.

இதுபற்றி மனோ கணேசன் மேலும் கூறியுள்ளதாவது,

நம்பிக்கையில்லாப் பிரேரணையை விட இதுதான் ஜனாதிபதியை நெருக்கடிக்கு உள்ளாக்கும். ஜனாதிபதியை வீட்டுக்கு அனுப்ப கோரும் கோஷத்தின் அடிப்படை இதுதான். எமது கட்சி உட்பட இந்நாட்டில் எதிரணி அரசியல் கட்சிகள் கோருவது இதைத்தான். சமூக சிவில் அமைப்புகள் கோருவது இதைத்தான். வெளியே தெருக்களில் போராடும் மக்கள் கோருவதும் இதைத்தான்.

நம்பிக்கையில்லாப் பிரேரணையிலும் கையெழுத்திடுவோம். அதையும் கொண்டு வருவோம். ஆனால், அதைவிட 21ஆம் திருத்தத்தை பிரதானமாக கொண்டுவருவோம்.

நம்பிக்கையில்லாப் பிரேரணை என்பது ஜனாதிபதியின் அரசாங்கத்துக்கு எதிரானது. அது வெற்றிபெற்றால், புதிய அமைச்சரவை இந்த ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவின் கீழேயே அமைய வேண்டும். அதை செய்ய முடியாது. அது நடைமுறை சாத்தியமற்றது.

ஏனெனில், ஜனாதிபதியின் சொந்த பொதுஜன முன்னணி கட்சி அமைச்சரவையே இவருக்கு கீழே செயற்பட முடியாவிட்டால், எதிரணியும் பங்குபற்றும் காபந்து அரசாங்கம் எப்படி இவருக்கு கீழே செயற்பட முடியும்? அப்படியானால், அது "காபந்து" அரசாங்கமாக இருக்காது, "கால்பந்து" அரசாங்கமாகவே இருக்கும்.

ஜனாதிபதியின் அதிகாரங்களை பிடுங்கும் 21ஆம் திருத்தத்தை ஆதரிக்காமல், தமது மனசாட்சியை மறந்துவிட்டு நாடாளுமன்றத்தில் எதிர்த்து வாக்களிக்கும் எம்.பிக்களை அவர்களுக்கு வாக்களித்த மக்கள் அடையாளம் கண்டுகொள்ளலாம். வெளியே போராடும் மக்களும் அடையாளம் கண்டுகொள்ளலாம்.

இந்த ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ பதவி விலகி வீட்டுக்கு போக வேண்டும் என்பதுதான் ஒட்டுமொத்த இலங்கை மக்களின் கோரிக்கை. ஆகவே, அவர் வீட்டுக்குப் போகும்போது, 21ஆம் திருத்தத்தை, தமது மனசாட்சியை மறந்துவிட்டு எதிர்த்து வாக்களிக்கும் எம்.பிக்களையும் அவருடன் துணைக்கு அனுப்பி வைக்கலாம் - என்று குறிப்பிட்டுள்ளார் மனோ.

# வைத்தியசாலைகளில் தங்கி சிகிச்சை பெறும் நோயாளர்களுக்கான மருந்துகளுக்குத் தட்டுப்பாடு



வைத்தியசாலைகளில் தங்கியிருந்து சிகிச்சை பெறும் நோயாளர்களுக்கு தேவையான மருந்துகளை, ஒரே நேரத்தில் இரு மாதங்களுக்கு இடைநிறுத்தியமையினால் எதிர்காலத்தில் ஒரு மாதத்துக்கு மாத்திரம் மருந்துகளை விநியோகிக்குமாறும், அவசர சத்திரசிகிச்சை மற்றும் அவசர சிகிச்சைகளை மாத்திரம் செய்யுமாறும் மருந்துகள் விநியோகம், ஒழுங்குப்படுத்தல் மற்றும் பகிர்ந்தளிக்கும் இராஜாங்க அமைச்சு வைத்தியசாலைகளுக்கு ஆலோசனை வழங்கியுள்ளது.

வைத்தியசாலைகளில் தற்போது 140 வகையான மருந்துகளுக்கு தட்டுப்பாடு காணப்பட்டாலும், இந்த தட்டுப்பாட்டை படிப்படியாக மட்டுப்படுத்தவதற்காக தேவையான மருந்துகளை கொள்வனவு செய்யும் நடவடிக்கைகள் தற்போது ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக இராஜாங்க அமைச்சின் செயலாளர் வைத்தியர் சமன் ரத்நாயக்க தெரிவித்துள்ளார்.

மருந்துகளை இறக்குமதி செய்வதற்காக இதுரையில் 14 மில்லியன் அமெரிக்க டொலர் கிடைக்கப்பெற்றுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

நாட்டில் ஏற்பட்டுள்ள நெருக்கடி நிலைமையின் மத்தியில் அரச பணியாளர்கள், அரசியல் இல்லாமல் தமது கடமைகளை சரியாக முன்னெடுப்பது மிகவும் முக்கியமாக விடயமாகும். அதற்கு, மருந்து விநியோக ஒழுங்குபடுத்தல் மற்றும் பகிர்ந்தளிக்கும் நடவடிக்கைகளை முன்னெடுக்க ஒத்துழைப்பு வழங்குமாறும் செயலாளர் வைத்தியசாலை நிர்வாகங்களிடம் கோரியுள்ளார்.

## மன்னாரில் கடும் மழை; இயல்புநிலை பாதிப்பு





(மன்னார் நிருபர்)

நாட்டில் ஏற்பட்டுள்ள சீரற்ற காலநிலை காரணமாக மன்னார் மாவட்டத்தில் தொடர்ச்சியாகப் பெய்து வரும் கடும் மழை காரணமாக மக்களின் இயல்புநிலை பாதிக்கப்பட்டுள்ளது.

நேற்று முதல் தொடர்ச்சியாகப் பெய்து வரும் இந்த கடும் மழை காரணமாக மக்களின் இயல்பு வாழ்க்கை பாதிக்கப்பட்டுள்ளது.

மக்கள் வீடுகளை விட்டு வெளியில் செல்ல முடியாத நிலையும் காணப்பட்டது. மேலும், பல வீதிகள் நீரில் மூழ்கியுள்ளதோடு,பல வீடுகளிலும் வெள்ளநீர் தேங்கியுள்ளது.

இந்நிலையில், மன்னார் மக்களின் இயல்புநிலை பாதிக்கப்பட்டுள்ளது.

## பெண்ணொருவர் அடித்துக்கொலை செய்யப்பட்ட சம்பவம்; சந்தேகநபர் போதைப்பொருளுக்கு அடிமையானவர்

### பொலிஸ் விசாரணைகளில் தகவல்

(யாழ். நிருபர்)

அரியாலை மணியந்தோட்டத்தில் குடும்பப்பெண் ஒருவர் அடித்துக் கொலை செய்யப்பட்டு புதைக்கப்பட்ட சம்பவத்தை நிகழ்த்திய இளைஞன் ஹெரோயின் போதைப்பொருள் பாவனைக்கு அடிமைப்பட்டவர் என்பது விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

பணக் கொடுக்கல் வாங்கல் பிரச்சினையில் குடும்பப்பெண்ணை அடித்துக் கொலை செய்து புதைப்பதற்கு இளைஞனின் தாயின் சகோதரி தூண்டியுள்ளார் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த மார்ச் 2ஆம் திகதி காணாமற்போன குடும்பப் பெண் ஒருவரின் சடலம் கடந்த வாரம் மணியந்தோட்டம் பகுதியில் உள்ள வீடொன்றின் வளாகத்தில் புதைக்கப்பட்ட நிலையில் மீட்கப்பட்டது.

யாழ்ப்பாணம் மணியந்தோட்டத்தைச் சேர்ந்த பி.யசிந்தா (வயது 44) என்பவரே கொலை செய்யப்பட்டார்.

சம்பவம் தொடர்பில் சடலம் மீட்கப்பட்ட வீட்டில் வசித்த கணவன், மனைவி மற்றும் அவர்களது உறவுமுறையான 20 வயதுடைய இளைஞன் ஆகிய மூவர் யாழ்ப்பாணம் தலைமையகப் பொலிஸ் நிலைய குற்றத்தடுப்புப் பிரிவினரால் கைதுசெய்யப்பட்டனர்.

சந்தேக நபர்களிடம் முன்னெடுக்கப்பட்ட பொலிஸ் மற்றும் நிபுணத்துவ விசாரணைகளில் இந்தக் கொலை தொடர்பில் கிடைக்கப்பெற்ற தகவல்கள் வருமாறு;

சம்பவத்தில் கைதுசெய்யப்பட்ட குடும்பத்துக்கு கடற்றொழில் உபகரணங்கள் கொள்வனவு செய்வதற்காக மாதம் 25 சதவீத மீற்றர் வட்டிக்கு 3 இலட்சம் ரூபாய் மீளச் செலுத்த வேண்டும் என்ற அடிப்படையில் 2 இலட்சத்து 25 ஆயிரம் ரூபா பணத்தை கொல்லப்பட்ட பெண் வழங்கியுள்ளார்.

அந்தப் பணம் மீள வசூலிப்பதற்காக குடும்பப் பெண் பல தடவைகள் அவர்களது வீட்டுக்குச் சென்றுள்ளார். எனினும், பணத்தை உரிய தவணையில் செலுத்துமாறு அவர்கள் கேட்டுள்ளனர்.

இந்நிலையில், வட்டிக்குப் பணம் வழங்கிய பெண்ணை கொலை செய்யப் பணம் வாங்கிய பெண், தனது சகோதரியின் மகனுடன் திட்டமிட்டுள்ளார். அதற்காக இளைஞனுக்கு ஹெரோயின் வாங்குவதற்கு பணம் வழங்கியுள்ளார்.

கடந்த மார்ச் 2ஆம் திகதி அந்த வீட்டுக்கு பணத்தை வசூலிக்க பெண் சென்றுள்ளார். அங்கு குடும்பத்தலைவர் கடற்றொழிலுக்குச் சென்ற நிலையில், அவரது மனைவியும் மனைவியின் சகோதரியின் மகனும் இருந்துள்ளனர்.

பணம் கேட்டுச் சென்ற குடும்பப் பெண்ணின் தலையில் இளைஞன் இரண்டு தடவைகள் மொட்டையான ஆயுதத்தினால் தாக்கியுள்ளார். அதனால் அந்தப் பெண் சரிந்து நிலத்தில் வீழ்ந்துள்ளார். அதன் பின்னர் சிறிய தாயாரும் இளைஞனும் சேர்ந்து தலையணையை முகத்தில் அமர்த்தி பெண்ணைக் கொலை செய்துள்ளனர்.

கடற்றொழிலுக்குச் சென்று வீடு திரும்பிய குடும்பத்தலைவர் வீட்டுக்குள் கொல்லப்பட்ட பெண்ணின் சடலத்தைக் கண்டு முரண்பட்டுள்ளார். அதனையடுத்து வீட்டு வளாகத்துக்குள் பள்ளம் தோண்டி பெண்ணின் சடலத்தைப் புதைத்துள்ளனர்.

எனினும், கொல்லப்பட்ட பெண் பயணித்த மோட்டார் சைக்கிள் வீட்டு வளாகத்துக்குள் நின்றுள்ளது. மறுநாள் அதனைப் புதைப்பதற்கு தொழிலாளி ஒருவரை அழைத்து குப்பை கொட்டுவதற்கு என பள்ளம் தோண்டியுள்ளனர். அதற்குள் மோட்டார் சைக்கிளைப் புதைத்துள்ளனர்.


இந்நிலையிலேயே இளைஞனுக்கு ஹெரோயின் வாங்க பணம் கொடுக்க அவரது சிறிய தாயார் சில நாள்களாக மறுத்துவந்துள்ளார். அதனால் மற்றொரு வட்டிக்கொடுக்கும் நபரிடம் சென்ற இளைஞன், “வட்டி அக்காவை கொலை செய்து புதைத்துள்ளேன், பணம் தராவிடின் யாரையும் அப்பிடிதான் செய்வேன்” என்று கூறியுள்ளார்.

இளைஞன் போதையில் புலம்புவதாக அந்த நபர் விட்டுள்ளார். எனினும், காணாமற்போன பெண் தொடர்பில் பேசப்பட்டதால் இளைஞன் தன்னிடம் கூறியதை அந்த நபர் பொலிஸாருக்கு தெரிவித்துள்ளார்.

அதனையடுத்தே பொலிஸார் விசாரணைகளை ஆரம்பித்தனர். கணவன், மனைவி மற்றும் உறவுமுறை இளைஞனை பொலிஸார் கைது செய்து விசாரணைகளை முன்னெடுத்ததன் அடிப்படையில் அவர்களது வீட்டு வளாகத்தில் புதைக்கப்பட்டிருந்த பெண்ணின் சடலம் மற்றும் மோட்டார் சைக்கிளை பொலிஸார் மீட்டனர்.

## உயிர்த்த ஞாயிறு தின தாக்குதலில் பலியானோரின் உறவுகள் வத்திக்கானுக்கு

### பாப்பரசரை சந்திக்க வாய்ப்பு





ஈஸ்டர் ஞாயிறு தின குண்டுத் தாக்குதலில் கொல்லப்பட்டவர்களின் இலங்கையை சேர்ந்த 35 குடும்பங்களின் உறவினர்கள் புனித பாப்பரசர் பிரான்ஸிஸை சந்திக்க வத்திக்கான் சந்தர்ப்பத்தை ஏற்படுத்திக் கொடுத்துள்ளது.

இதனடிப்படையில் எதிர்வரும் மே மாதம் முதல் வாரம் இந்த குடும்பங்களின் உறவினர்கள் பாப்பரசரை சந்திக்க சந்தர்ப்பம் கிடைக்கும் எனக் கூறப்படுகிறது.

இவர்கள் பாப்பரசரை சந்தித்த பின்னர் இத்தாலியின் பாதுவா நகரில் மிகப் பெரிய ஆர்ப்பாட்டம் ஒன்றை நடத்த இத்தாலியில் வாழும் இலங்கையர்கள் ஏற்பாடுகளை செய்துள்ளனர்.

## ராஜபக்ஷவினரின் அரசியல் விரைவில் முடிவுக்கு வரும்

### முன்னாள் ஆஸ்தான ஜோதிடர் பரபரப்பு கருத்து



ராஜபக்ஷவினரின் அரசியல் முடிவுக்கு வரும் என ராஜபக்ஷ குடும்பத்தின் முன்னாள் ஆஸ்தான ஜோதிடர் சுமணதாச அபேகுணவர்தன தெரிவித்துள்ளார். தனது பேஸ்புக் பக்கத்தில் அவர் இதனைக் கூறியுள்ளார். அவர் மேலும் கூறியுள்ளதாவது,

அரசியல்வாதிகள் அனைவருக்கும் கட்டாயம் தோல்வி என்பது உண்டு. மகிந்த ராஜபக்ஷ 1977 ஆம் ஆண்டு ஜூலை 21 ஆம் திகதி தேர்தலில், டி.பி.அத்தபத்துவிடம் தோல்வியடைந்து 12 ஆண்டுகளாக வீட்டில் இருந்தார்.

1989 ஆம் ஆண்டு பெப்ரவரி 15 ஆம் திகதி நடைபெற்ற தேர்தலில் வெற்றி பெற்றார். மகிந்த ராஜபக்ஷவின் தந்தை டி.ஏ.ராஜபக்ஷ 1965 ஆம் ஆண்டு தோல்வியடைந்து, நாடாளுமன்ற உறுப்பினர் பதவியை இழந்து, சாதாரண பொதுமகனாக இறந்து போனார்.

2015 ஆம் ஆண்டு ராஜபக்ஷவினர் தோல்விடைந்தனர். அண்ணன் தோல்வியடைந்ததால், அவரை பிரதானமாக கொண்ட ராஜபக்ஷவினர் தோல்வியடைந்தனர்.

எமது உன்னதமான பஞ்சீலக் கொள்கைகளை மீறியதே இதற்கு காரணம். அப்படி நடந்தால், எனக்கு மட்டுமல்ல, பிரம்மாவினாலும் வெற்றியை பெற்றுத் தர முடியாது. நான் அவர்களுடன் இருந்ததால், அப்போது வாக்குகளாவது கிடைத்தது.

அநுராதபுரம் ஞானக்காவிடம் சேவையை பெற்றுக்கொண்டதன் காரணமாக 1936 ஆம் ஆண்டு டி.எம். ராஜபக்ஷ சட்டவாக்க சபை உறுப்பினராக ஆரம்பித்த ராஜபக்ஷவினரின் 86 ஆண்டு கால அரசியல் இம்முறை முடிவுக்கு வந்து விடும் என்பது மிகத் தெளிவாகத் தெரியக் கூடியதாக இருக்கின்றது. 1982 ஆம் ஆண்டு முதல் மகிந்த ராஜபக்ஷ 21 ஆம் நூற்றாண்டின் முதல் தசாப்தத்தில் நாட்டின் அரச தலைவராக பதவிக்கு வருவார் என அனைத்து ஊடகங்களிலும் ஜோதிட எதிர்வுகளை கூறிய ஒரே ஜோதிடன் நான்தான்.

இது தாய்நாட்டு மக்களுக்கு நன்றாக நினைவிருக்கும். அதேபோல் அவர்களின் அரசியல் பயணமும் கட்டாயம் முடிவுக்கு வரும் என நானே கூறுவது விதி என நான் நினைக்கின்றேன் என சுமணதாச அபேகுணவர்தன தெரிவித்துள்ளார்.

சுமணதாச அபேகுணவர்தன தனது பேஸ்புக் பக்கத்தில் இட்ட இந்த பதிவு தற்போது அதில் இருந்து அகற்றப்பட்டுள்ளது. எனினும், சில சிங்கள ஊடகங்கள் அதனை முன்கூடியே பிரதி எடுத்து செய்திகளை வெளியிட்டுள்ளன.

## உலர் உணவுப்பொதி வழங்கிவைப்பு



(வவுனியா நிருபர்)

வவுனியாவில், புதுவருடத்தை முன்னிட்டு வறுமைக்கோட்டின் கீழ் தவிக்கும் மக்களுக்கு வழங்கும் செயற்றிட்டத் துக்கமைய நாட்டில் ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடி காரணமாக பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கான உலர் உணவுப்பொருட்கள் விநியோகம் ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளது.

இந்நிகழ்வு நேற்று திங்கட்கிழமை சர்வோதய மாவட்ட அலுவலகத்தில் இடம்பெற்றது. டயலொக், ஹேமாஸ் ஆகிய நிறுவனங்களின் நிதியுதவியின் கீழ் சர்வோதயாவின் ஏற்பாட்டில் மேற்படி உலர் உணவுப்பொருட்கள் வழங்கி வைக்கப்பட்டன.

## மருந்துகளை கொள்வனவு செய்வதற்கு தூதுவர்களின் உதவியை நாடத் தீர்மானம்

நாட்டுக்கு தேவையான 273 அத்தியாவசிய மருந்துகளை வெளிநாட்டு தூதுவர்களினூடாக விரைவாக பெற்றுக்கொள்ள தலையீடு செய்யுமாறு கோரி மருந்து உற்பத்தி, விநியோக மற்றும் ஒழுங்குபடுத்தல் இராஜாங்க அமைச்சு, வெளிநாட்டுத் தூதுவர் காரியாலங்களிடம் கோரியுள்ளது.

வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சின் செயலாளர் பேராசிரியர் ஜயநாத் கொலம்பகேவினூடாக இந்த கோரிக்கை முன்வைக்கப்பட்டுள்ளதாக மருந்து உற்பத்தி, விநியோக மற்றும் ஒழுங்குப்படுத்தல் இராஜாங்க அமைச்சர் பேராசிரியர் சன்ன ஜயசுமன தெரிவித்துள்ளார்.

நாட்டுக்கு தேவையான மருந்து வகைகளை பெற்றுக்கொள்வதற்கு உலக சுகாதார ஸ்தாபனம், சர்வதேச செஞ்சிலுவை அமைப்பு ஆகியன தலையிட்டுள்ளதாக தெரிவித்துள்ள இராஜாங்க அமைச்சர் உலக வங்கி மருந்து வகைகளை கொள்வனவு செய்வதற்கு கடன் கடிதங்களை வெனியிடுவதற்கு உதவவுள்ளதாகவும் குறிப்பிட்டுள்ளார்.

இந்தியாவின் கடனுதவி வேலைத்திட்டதுக்கமைய மருந்துகளை கொள்வனவு செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் இராஜாங்க அமைச்சர் சன்ன ஜயசுமன தெரிவித்துள்ளார்.







ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ உள்ளிட்ட அரசாங்கம் உடனடியாகப் பதவி விலக வேண்டுமென வலியுறுத்தி, ஜனாதிபதி செயலகத்துக்கு முன்பாக மக்களினால் ஆரம்பிக்கப்பட்டுள்ள எதிர்ப்பு ஆர்ப்பாட்டம் தொடர்ச்சியாக மூன்றாவது நாளான நேற்றும் (11) இடம்பெற்றது. (படப்பிடிப்பு: எஷான் தசநாயக்க)

தமிழன்
THAMILAN
தமிழ் பேசும் மக்களின் கருத்துரிமைக் காவலன்
இல. 91, விஜேராம மாவத்தை, கொழும்பு 07.
தொலைநகல் : 0112 67 34 42,
தொலைபேசி : 0115 200 900/ 0115 88 61 87
விளம்பரம் : 077 172 1880
மின்னஞ்சல் : thamilaneditorial@gmail.com/ thamilaneditor@gmail.com
2022, ஏப்ரல் 12ஆம் திகதி, செவ்வாய்க்கிழமை

# நிறைவேற்றதிகார ஒழிப்பினை நிறைவேற்றுமா அரசு?

நிறைவேற்று அதிகார ஜனாதிபதி பதவியை ஒழிப்பதற்கு சட்டமூலம் ஒன்றை வரைவதற்கான நடவடிக்கைகள் விரைவில் முன்னெடுக்கப்படும் என்று அறியவருகிறது. எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாசவே அந்த சட்டமூலத்தை ஒரு தனிநபர் பிரேரணையாக நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கக்கூடிய சாத்தியமும் பெரும்பாலும் இருக்கிறது.

நிறைவேற்று அதிகார ஜனாதிபதி பதவியை ஒழிக்கவேண்டுமானால் சட்டமூலம் நாடாளுமன்றத்தில் மூன்றில் இரண்டு பெரும்பான்மை ஆதரவுடன் நிறைவேற்றப்படவேண்டும் என்பதுடன், நாடளாவிய சர்வஜன வாக்கெடுப்பொன்றில் மக்களின் அங்கீகாரமும் பெறப்படவேண்டும்.

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன தலைமையிலான அரசாங்கம் நிலைகுலைந்துகொண்டு போகின்ற வேகத்தையும் தற்போதைய நிறைவேற்று அதிகார ஜனாதிபதியின்கீழ் நாடு சீரழிவுக்குள்ளாகியிருக்கிறது என்ற புரிதலையும் அடிப்படையாகக் கொண்டு நோக்குகையில், சட்டமூலம் நாடாளுமன்றத்தில் மூன்றில் இரண்டு பெரும்பான்மை ஆதரவுடன் நிறைவேற்றப்படுவதுடன், சர்வஜன வாக்கெடுப்பில் மக்களின் அங்கீகாரத்தையும் பெறும் என்ற பெருமளவு நம்பிக்கை எதிர்பார்ப்பு இருக்கிறது. நிறைவேற்று அதிகார ஜனாதிபதி பதவி ஒழிப்பு இறுதியில் சாத்தியமாகக்கூடும். சட்டமூலத்தை எதிர்க்கட்சித் தலைவர் தானாகவே சபையில் சமர்ப்பிப்பார் என்பது அந்த செயற்பாட்டுக்கு பெரும் முக்கியத்துவத்தையும் கனதியையும் கொடுக்கும்.

நிறைவேற்று அதிகார ஜனாதிபதி ஆட்சிமுறைமையை அறிமுகப் படுத்துவதில் ஜே.ஆர். ஜெயவர்தனவுடன் நெருக்கமாக ஒத்துழைத்துச் செயற்பட்ட ரணசிங்க பிரேமதாசவின் மகன் சஜித் இதைச் செய் கிறார் என்பது முக்கியமாக கவனிக்கத்தக்கதாகும். ஆனால், இது சாத்தியப்படுமா என்ற ஐயப்பாடு ஏற்பட்டுள்ளது. அரசியலில் ஏற்பட்டுள்ள இழுபறி நிலைமை இதற்கு இடம்கொடுக்குமா என்ற ஐயப்பாடு எழுந்துள்ளது.

தற்போது நாட்டில் ஏற்பட்டுள்ள நெருக்கடி நிலைமை தொடர்பில் பிரதான தமிழ்க் கட்சிகளின் ஐந்து தலைவர்கள் அண்மையில் யாழ்ப்பாணத்தில் கூடி ஆராய்ந்தனர். அதன்பின்னர், இந்த நெருக்கடிக்குத் தீர்வு காண்பதற்கு நிறைவேற்று அதிகார ஜனாதிபதி ஆட்சிமுறைமை ஒழிக்கப்பட வேண்டும் என்ற ஒற்றை கோரிக்கையை தமிழர் தரப்பின் நிலைப்பாடாக முன்வைக்க வேண்டும் என்ற இணக்கம் அவர்கள் மத்தியில் ஏற்பட்ட து.

தமிழீழ விடுதலை இயக்கத்தின் (ரெலோ) தலைவர் செல்வம் அடைக்கலநாதன் எம்.பி., தமிழீழ மக்கள் விடுதலைக் கழகத்தின் (புளொட்) தலைவர் த.சித்தார்த்தன் எம்.பி., தமிழ் மக்கள் கூட்டணியின் தலைவர் நீதியரசர் சி.வி.விக்னேஸ்வரன் எம்.பி., தமிழ்த் தேசியக் கட்சியின் தலைவர் சட்டத்தரணி என்.சிறிகாந்தா, ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் (ஈ.பி.ஆர்.எல்.எவ்.) தலைவர் சுரேஷ் பிரேமச்சந்திரன் ஆகியோர் கடந்த வாரம் யாழ்ப்பாணம் திண்ணை ஹோட்டலில் ஒன்றுகூடி தற்போதைய அரசியல் நிலைமை குறித்து ஆராய்ந்தனர்.

இந்தக் கூட்டத்திற்கு இலங்கைத் தமிழரசுக் கட்சியின் தலைவர் மாவை சேனாதிராசாவும் அழைக்கப்பட்டிருந்தபோதிலும் அவர் கூட்டத்தில் பங்குபற்றவில்லை. நிறைவேற்று அதிகார ஜனாதிபதி ஆட்சிமுறைமையால்தான் நாட்டுக்கு இத்தகைய பல்வேறு நெருக்கடிகளும் ஏற்பட்டுள்ளன. தமிழர்களுக்கு ஏற்பட்ட துன்பங்களுக்கும் எதேச்சாதிகார வலிமையுடன் நிறைவேற்று அதிகார ஜனாதிபதி ஆட்சிமுறைமை நீடித்தமையே காரணம் என்று இந்தக் கூட்டத்தில் சுட்டிக்காட்டப்பட்டது.

ஆகவே, இந்த நெருக்கடி நிலையில், "ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ வீட்டுக்குப் போ'' என்று கோருவதைவிட நிறைவேற்று அதிகார ஆட்சிமுறைமை ஒழிக்கப்பட வேண்டும் என்பதே முக்கிய கோரிக்கையாக இருக்கவேண்டுமென்று தமிழ்க் கட்சித் தலைவர்கள் தீர்மானித்தார்கள்.

நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறைமை ஒழிப்புக்கு இந்த சந்தர்ப்பம் மிகவும் அருமையாக அமைந்திருக்கிறது. கிட்டத்தட்ட எல்லா கட்சிகளும் இதற்கு ஒப்புதல் தெரிவிக்கும் நிலைமை உருவாகியிருக்கிறது. ஆளுங்கட்சிக்கும் இதுவொரு நல்ல வாய்ப்பு. மக்கள் மத்தியில் சரிந்துபோயுள்ள செல்வாக்கை தூக்கி நிலைநிறுத்த இது உதவக்கூடும். செய்யுமா அரசு ?

# உள்ளக் கசடுகளை நீக்கலே உண்மைக் கல்வி!...

**கிருங்கை சேதுபதி**

கொரோனா வைரஸ் தொற்றின் காரணமாக நீண்டகாலமாக மூடப்பட்டிருந்த பாடசாலைகள் ஒருவழியாக திறக்கப்பட்டுவிட்டன. கொரோனா தீநுண்மிக் காலத்தில் இல்லத்தில் இருந்தபடி கைபேசி வழியாகப் பாடம் படித்து, எழுதி, பிள்ளைகள் பட்ட பாடு பெரும்பாடு. ஒன்றுக்கும் மேற்பட்ட பிள்ளைகள் இருக்கும் வீட்டில் ஒரேயொரு கைபேசியை வைத்துக்கொண்டு பெற்றவர்கள் பட்ட சிரமமும் சொல்லி மாளாது.

பாடசாலைகள் திறந்துவிட்டன என்று நிம்மதிகொள்ள முடியாத நிலையில் இன்னும் சில சிக்கல்கள் நீடிக்கத்தான் செய்கின்றன. "இதுநாள்வரையில் கைபேசி வாயிலாகவே அனைத்தையும் பார்த்து, கேட்டு, படித்து பொழுதைக் கழித்த பிள்ளைகளுக்கு, அந்தக் கருவியிடமிருந்து முற்றாக விடைபெற முடியவில்லை. இவர்களின் கவனத்தை ஈர்த்துப் பாடங்களைப் புரியவைப்பதற்குள் படாதபாடுபடவேண்டியிருக்கிறது என்கின்றனர் ஆசிரியர்கள்.

எவ்வளவுதான் கண்காணித்துப் பாடம் நடத்திக்கொண்டிருந்தாலும், புத்தகத்துக்குள்ளோ, நோட்டுக்குள்ளோ கைபேசியைப் பதுக்கிவைத்துக்கொண்டு பார்க்கிற பிள்ளைகளைக் கண்டுபிடித்து, ஒழுங்குபடுத்துவது சிக்கலாக இருக்கிறது. அப்போது அவர்களிடம் ஒருவித பதற்றமும், எதையோ இழந்ததுபோன்ற படபடப்பும், அடுத்து என்ன செய்யப்போகிறோம் என்று தெரியாத நிலையில் வெறித்தனமான ஓர் எதிர்ப்புணர்வும் அவர்களிடமிருந்து வெளிப்பட்டுவிடுகிறது.

அந்தநேரத்தில், அவர்களைச் சரியாகக் கையாளத் தெரியாவிடில் அவர்கள் எந்தச் செயலுக்கும் இறங்கிவிடுவார்கள் என்றே தோன்றுகிறது. காரணம், பழக்கம் அவர்களை அக்கருவிக்கு அடிமையாக்கி வைத்திருக்கிறது. சிறியவர்கள் என்ன பெரியவர்களே கூட, காலையில் எழுந்ததும் கைபேசியை எடுத்து இரவு வந்த செய்திகள் என்ன என்பதைப் பார்க்காமல் இருக்க முடிகிறதா, என்ன?

உலகத்தோடு உறவுகொள்ளத்தக்க ஊடகமாக அது ஆகிவிட்டபின், அதில் அனைத்தும் வந்து நிரம்பிவிடுகின்றன. தக்கன எவை, தகாதன எவை என்று கண்டு தேர்வதற்குப் பெரியவர்களாலேயே முடியாதபோது பிள்ளைகள் என்ன செய்வார்கள்?

இவையெல்லாம் காலத்தால் வந்து எய்தும் கட்டாயங்கள். இவற்றையும் கடந்து தன்னை நிலைநிறுத்திக்கொள்ளத்தக்க ஆளுமைகளாகப் பிள்ளைகளை உருவாக்குவது இன்றியமையாத சவாலாக இருக்கிறது.

காலந்தோறும் தேவைக்கேற்ப புதுப்புதுக் கருவிகள் வந்துகொண்டுதான் இருக்கும். அவற்றில் நல்லனவும் இருக்கும்; அல்லனவும் இருக்கும். அல்லவை போக்கி, நல்லன ஆக்கிக்கொள்ளும் ஆளுமையை வளர்த்துக் கொள்வதுதான் அறிவுடைமை. அந்தத் திசைநோக்கி, பிள்ளைகளை வழிநடத்தப் பெற்றோரும் ஆசிரியப் பெருமக்களும் இணைந்து செயற்படவேண்டியது இன்றியமையாதது.

சமூக ஊடகங்களது நம்பகத்தன்மையின் விகிதத்தையும், அவற்றை நாம் பயன்படுத்துவதால் ஏற்படும் சாதக பாதகங்களையும் விளக்கி, உளவியல் ரீதியான ஒரு தெளிவை அவர்களுக்கு அளிக்க வேண்டிய கட்டாயத்தில் நாம் இருக்கிறோம். "ஒருகாலத்தில் தொலைக்காட்சிப் பெட்டியின் வரவு இத்தகு சிக்கல்களை உண்டாக்கி இருந்தது. இன்று அதைக் கடந்து வரப் பழகியிருக்கிறோமே. அதுபோல்தான் இதுவும் என்று நினைக்க முடியாது. அது ஒருவழி இயக்கம்; இது பலமுனைத் தாக்கத்தை ஏற்படுத்த வல்லது. என்னதான் நவீனக் கருவிகள் வந்து வாழ்க்கைப் போக்கை மாற்றிவிட்டாலும், நம் கல்வி, புத்தகங்களோடு தொடர்புடையது; வாசித்தல், படித்தல், கற்றல் ஆகிய படிநிலைகளை உள்ளடக்கியது. வாசித்தல் (ரீடிங்) என்பது கண் முன் விரிந்த புத்தகத்தின் வாசகங்கள் உதட்டசைவில் உயிர்பெற்று, செவிப்புலன்களில் பதிவாகிச் சிந்தையில் நிறைவது; படித்தல் (ஸ்டடிங்) என்பது, தனக்குத்தானே வாசித்து, மனம் கொண்ட செய்திகள் படிப்படியாகப் பதிவுறும்வண்ணம் செயல்படுவது; இவ்விரண்டுக்கும் அடுத்த நிலையில் அமைவதுதான் கற்றல் (லேனிங்); இது உறுதிப்பாடு மிக்கது.

"கல் என்னும் சொல்லை அடியாகக்கொண்டு பிறந்தது கல்வி. கல்லுதல் என்ற சொல்லுக்குத் தோண்டுதல் என்று பொருள்.

தனக்குள் படிப்படியாக இறங்கும் வாசகங்களின் பொருள் கூர்மை, மனத்தைத் தோண்ட வேண்டும். அப்போது அங்கிருந்து வெளிப்படுவன கசடுகள். அவை முற்றாக நீங்கும்வரை கட்டாயம் தோண்டும் பணி தொடர்ந்தாக வேண்டும். பின்னரே, சிந்தனையின் ஊற்றுக்கண் திறக்கும்; அது அறிவின் வெளிப்பாடாய்ப் புறத்தே விளங்கும்; அதற்குப் பின்னரே அனைத்தும் நிகழும்.''

இதைத்தான், "தொட்டனைத்தூறும் மணற்கேணி'' என்ற குறளை எடுத்துக் காட்டித் திருவள்ளுவர் விளக்குகிறார். "மாந்தர்க்குக் கற்றனைத் தூறும் அறிவு'' என்று முடிகிற இக்குறளில், தொட்டனைத்து ஊறுவது எது என்று அவர் சொல்லவே இல்லை. அதுபோல், அறிவின் ஊற்றைத் தோற்றுவிக்கக் கற்க வேண்டியவை எவையென்றும் சொல்லவில்லை. முன்னது நீர் என்றும் பின்னது நூல் என்றும் நமது அனுபவ அறிவால் நாம் புரிந்துகொள்கிறோம். நீரின் தேவை எவ்வளவு இன்றியமையாததோ அதுபோல் அறிவின் தேவை மிக மிக இன்றியமையாததது என்று அழுத்தமாகத் திருவள்ளுவர் இந்தக் குறள் வழியாக மக்களுக்கு எடுத்துரைத்திருக்கிறார்.

அதற்கான வாயில்கள்தான் கல்வி நிலையங்கள். அங்கே கற்க வருபவர்கள் வயதால் வேண்டுமானால் ஒத்திருக்கலாம். வாழ்க்கைத் தரத்தால், சமூகப் பின்புலத்தால், மனப்பாங்குகளால் வெவ்வேறு நிலைப்பாடு உடையவர்கள். அவர்களை ஒருமுகப்படுத்தி, கல்வியின்பால் நாட்டமுடையவர்களாக ஆக்குவது அருஞ்செயல்.

"எழுத்தறிவித்தவன் இறைவனாகும்'' என்றார் அதிவீரராம பாண்டியர். எளிவந்த நிலையில், கற்பிக்கும் ஆசிரியர்கள் இறங்கி வந்தாலும், அவர்கள் இறைவன் நிகர்த்தவர்கள்; அதற்கான தகுதிப்பாட்டைத் தன்வயப்படுத்திய பீடத்தில் அமரத்தக்கவர்கள். அவர்களுக்கான பணியை இன்னும் மேன்மைப்படுத்தி அதிவீரராமர் சொன்னார்: "கல்விக்கு அழகு கசடு அற மொழிதல்''. தன்னளவில் கசடுகள் இல்லாமல், தன்னிடம் பயில வருவோரின் கசடுகள் அறும்படியாக மொழிதல் ஆசிரியர்களின் கடப்பாடு.

உள்ளக் கசடுகளும் உலகக் கசடுகளும் நிரம்பிக் கிடக்கும் மனங்களைத் தூர்வாருதல் கல்வியின் முதற்பணி. அப்படித் தோண்டுகிறபோதெல்லாம் வெளிவருவன கசடுகளே. அதனால்தான், "கற்க கசடு அற'' என்று கட்டளையிட்டார் வள்ளுவர். ஆசிரியர், கசடு அற மொழிதலைக் கேட்டு, தான் கசடு அறக் கற்றலே நன்மாணாக்கரின் செயல். அதற்கான களம், கல்வி நிலையத்து வகுப்பறை. அது நான்கு சுவர்களுக்கு நடுவில் இருக்கும் ஒரு வெற்றிடம் அல்ல; நாலாதிசைகளிலும் பரந்து விரிந்த அனுபவங்களைக் குறுகச் சொல்லிப் பயிற்றுவிக்கும் கலைக்கூடம். நின்று, நடந்து, இருந்து, எழுதி, சொல்லி திறம்பட மொழியும் ஆசிரியர்களால் அந்தக் கசடுகள் நீங்க வேண்டும்.



"கசடு என்பதற்கு, குறைபாடு, குற்றம், ஐயம் என்றெல்லாம் பொருள் உண்டு. இளம்பருவத்தினர் தவறு செய்யும் இயல்பினர். தவறுகள் இவையென்று அவர்களுக்குக் காட்டி, அவர்களை அவற்றினின்றும் விடுவிப்பவர்கள் ஆசிரியர்கள். ஆசு+இரியர் ஆகிய இருபெயர்க்கூட்டே, ஆசிரியர் என்னும் அழகிய பெயராகியது. ஆசு - குற்றம். இரியர் -நீக்குபவர். தவறுகள் குற்றங்கள் ஆகிவிடாமல் அவர்களைப் பாதுகாக்கிற அறவாணர்கள் ஆசிரியர்கள்; அவர்களும் மனிதர்கள்தாம்; அவர்களுக்குள்ளும் குறைபாடுகள் உள்ளன.

''அரியகற்று ஆசுஅற்றார் கண்ணும்
தெரியுங்கால்
இன்மை அரிதே வெளிறு''
என்கிறார் திருவள்ளுவர்.

"கற்பதற்குரிய அறநூல்கள் பலவற்றையும் கற்று குற்றங்கள் அற்றவர்களிடத்திலும் நுட்பமாக ஆராய்ந்தால் அறியாமை முதலிய குற்றம் இல்லாமல் இருப்பது அரிது. அறிவு வளர வளர அறியாமை தென்படுதல் இயற்கை. ஆயினும், தேவைக்கேற்ற அறிவும் இன்றியமையாப் பண்புகளும் இருக்கின்றனவா என்று ஆய்வு செய்து எடுத்துக்கொள்ளலாம்'' என்பது கருத்து. முழுதும் அறிந்தவர்களையும் குற்றமே அற்றவர்களையும் காண்பதரிது என்பதறிக என்று இதற்கு விளக்கம் தருகிறார் தவத்திரு குன்றக்குடி அடிகளார்.

ஆக, தன் தவறு நீக்கித் தன் மாணாக்கர் குறை நீக்கிச் சமுதாயத் தொண்டாற்றும் தொடர்பணி, கல்விப்பணி.

இந்தச் செயற்பாடு, இடைப்பட வந்த நோய்த்தொற்றுத் தற்காப்புச் செயற்பாட்டால் ஒருவித முடக்கத்திற்கு ஆளாகிவிட்டிருக்கிறது. எவ்வளவுதான் அட்டவணையிட்டுப் பாடம் படித்தாலும், ஊடகங்களின் வாயிலாகப் பாடங்கள் கவனித்து, வீட்டுப்பாடங்கள் எழுதிப் பயின்றாலும், ஒருவித அசட்டை மனப்பான்மை பிள்ளைகளுக்குள் வந்து சேர்ந்துவிட்டது. அதனை முற்றாக நீக்க முடியாது; படிப்படியாக நீக்குவது இன்னொரு வகை சிரமம்.

பாடம் ஒன்றுதான்; நடத்துகிற ஆசிரியர் ஒருவர்தான்; ஆனால், பயிலும் மாணாக்கர்கள் பலர். ஒற்றை நிலைப்பாட்டில் கையாளக்கூடிய இயந்திரங்கள் அல்லர்; அவர்கள் இதயங்கள் உடைய உயிர்ப் பிஞ்சுகள்; வெம்பிவிடாமல், காய்த்துக் கனிந்து பயன்தருபவர்களாகப் பக்குவப்படுத்தப்பட வேண்டியவர்கள். ஒரு வகுப்பறைக்குள் நுழையும் ஒற்றை மனிதரான ஆசிரியர், அவ்வகுப்பறைக்குள் நிறைந்திருக்கும் ஒவ்வொரு மாணவர்க்குள்ளும் ஊடுருவி, கூடுவிட்டுக் கூடு பாய்ந்து தன் கருத்துகளை நிலைநிறுத்துகிற கலையே கல்வி.

கனிவும் கண்டிப்பும் மிகுதியாகத் தேவைப்படுகிற இடம் இது. கனிவு மிகுந்தால் சில சலனங்களும், கண்டிப்பு மிகுந்தால் கடும் எதிர்ப்புணர்வும் தோன்றக்கூடும். இருபால் ஆசிரியர்கள் கூடி, இருபால் மாணாக்கர்களைப் பயிற்றுவிக்கிற இடம் கல்வி நிலையம். இது தவச்சாலை.

பயிற்றுவிக்கிறவர்களின் பண்பும் அன்பும், பயில வருகிறவர்களிடத்தில் ஒருவித மரியாதையையும் பக்தியுணர்வையும் உண்டாக்க வேண்டும். வகுப்பறையில் பயின்று வாழ்க்கைத் தளத்தில் நின்று நிலைபெற உதவுவதே கல்வி.

இதற்கு, இவ்விருசாராரிடத்தில் மட்டும் இணக்கம் இருந்தால் போதாது; பெற்றோரின் உதவியும், மற்றோரின் அக்கறையும் துணைபுரிய வேண்டும்.

ஏனெனில், கல்வி என்பது வகுப்பறைக்குள் மட்டும் கிடைக்கும் கனி அல்ல; உலகத்தோடு ஒட்ட ஒழுகப் பயிலும் கலைப்பணி; உயர்பணி; ஏன், அது உயிர்ப்பணியும் கூட.

**நன்றி: தினமணி**

## தவக்கால சிந்தனை




### நீ மும்முறை என்னை மறுதலிக்குமுன் சேவல் கூவாது

உங்களுள் ஒருவன் என்னைக் காட்டிக்கொடுப்பான் என உறுதியாக உங்களுக்குச் சொல்கிறேன் என்று திட்டவட்டமாகக் கூறினார். யாரைப் பற்றி அவர் இப்படிக் கூறினார் என்று தெரியாமல் சீடர்கள் குழப்பமுற்று ஒருவரை ஒருவர் நோக்கினார்கள்.

இயேசுவின் சீடருள் ஒருவர் அவர் அருகில் மார்புப் பக்கமாய்ச் சாய்ந்திருந்தார். அவர் மேல் இயேசு அன்பு கொண்டிருந்தார். சீமோன் பேதுரு அவருக்குச் சைகை காட்டி யாரைப்பற்றிக் கூறுகிறார் எனக்கேள் என்றார். இயேசுவின் அருகில் மார்புப் பக்கமாய்ச் சாய்ந்திருந்த அவர் ஆண்டவரே அவன் யார்? என்று கேட்டார். இயேசு மறுமொழியாக நான் யாருக்கு அப்பத் துண்டைத் தோய்த்துக் கொடுக்கிறேனோ அவன்தான் எனச் சொல்லி அப்பத் துண்டைத் தோய்த்துச் சீமோன் இஸ்காரியோத்தின் மகனாகிய யூதாசுக்குக் கொடுத்தார். அவன் அப்பத் துண்டைப் பெற்றதும் சாத்தான் அவனுக்குள் நுழைந்தான். இயேசு அவனிடம் நீ செய்யவிருப்பதை விரைவில் செய் என்றார்.

இயேசு ஏன் அவனிடம் இப்படிக் கூறினார் என்பதைப் பந்தியில் அமர்ந்திருந்தோர் யாரும் புரிந்து கொள்ளவில்லை. பணப்பை யூதாசிடம் இருந்ததால் திருவிழாவுக்குத் தேவையானதை வாங்கவோ ஏழைகளுக்கு ஏதாவது கொடுக்கவோ இயேசு அவனிடம் கூறியிருக்கலாம் என்று சிலர் நினைத்துக்கொண்டனர். யூதாசு அப்பத் துண்டைப் பெற்றுக்கொண்டவுடன் வெளியே போனான்.

அது இரவு நேரம்.சீமோன் பேதுரு இயேசுவிடம் ஆண்டவரே நீர் எங்கே போகிறீர்? என்று கேட்டார். இயேசு மறுமொழியாக நான் போகுமிடத்திற்கு என்னைப் பின்தொடர்ந்து வர இப்போது உன்னால் இயலாது; பின்னரே என்னைப் பின்தொடர்வாய் என்றார். பேதுரு அவரிடம் ஆண்டவரே ஏன் இப்போது நான் உம்மைப் பின்தொடர இயலாது? உமக்காக என் உயிரையும் கொடுப்பேன் என்றார். இயேசு அவரைப் பார்த்து எனக்காக உயிரையும் கொடுப்பாயோ? நீ மும்முறை என்னை மறுதலிக்குமுன் சேவல் கூவாது என உறுதியாக உனக்குச் சொல்கிறேன் என்றார்.

## நக்கல் நமசிவாயம்

அரசாங்கத்துக்கு ஆதரவா ஊர்வலம் நடத்துற ஆம்பிளையளின்ர மனுசிக்காரியளவ கேட்டா அரசாங்கத்தைப் பத்தி உண்மையை சொல்லுவாளவ....



## இன்றைய நாளில்...

- ★ 1832 – இலங்கையில் கட்டாய அரச சேவையை ஒழிக்கும் ஆணையை பிரித்தானிய அரசர் பிறப்பித்தார்.
- ★ 1877 – ஐக்கிய இராச்சியம் திரான்சுவால் மாநிலத்தை தென்னாபிரிக்காவுடன் இணைத்தது.
- ★ 1955 – யோனாஸ் சால்க் கண்டுபிடித்த போலியோ தடுப்பூசி பாதுகாப்பானதென அறிவிக்கப்பட்டது.
- ★ 1961 – பனிப்போர்: விண்வெளிப் போட்டி: சோவியத் விண்ணோடி யூரி ககாரின் விண்வெளிக்கு சென்ற முதல் மனிதர் என்ற பெருமையைப் பெற்றார்.
- ★ 1981 – முதலாவது விண்ணோடம் கொலம்பியா ஏவப்பட்டது.
- ★ 1983 – பிரித்தானியத் திரைப்படமான காந்தி எட்டு ஒஸ்கார் விருதுகளை வென்றது.

# அரசாங்கத்துக்கு எதிராக லிந்துலை இளைஞர் யுவதிகள் ஆர்ப்பாட்டம்





**(தலவாக்கலை நிருபர்)**

லிந்துலை, சென்கூம்ஸ் தோட்ட இளைஞர், யுவதிகள் அரசுக்கு எதிராகவும் நேற்று (11) ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

மக்கள் எதிர்நோக்கும் அத்தியாவசியப் பொருட்களின் தட்டுப்பாடு, விலை அதிகரிப்பு உள்ளிட்ட பல்வேறு பிரச்சினைகளை கண்டித்து சென்கூம்ஸ் தோட்ட இளைஞர் யுவதிகள் இந்த ஆர்ப்பாட்டத்தை முன்னெடுத்திருந்தனர்.

சென்கூம்ஸ் தோட்ட காரியாலயத்திற்கு அருகாமையில் ஆரம்பமான இப்பேரணி மட்டுக்கலை சந்தி வரை பேரணியாக சென்று அரசுக்கு எதிரான ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

## எரிவாயு கசிவினால் உணவகத்தில் தீப்பரவல்



**(தலவாக்கலை நிருபர்)**

நுவரெலியா புதிய கடை வீதியில் அமைந்துள்ள உணவகமொன்றில் நேற்று (11) தீப்பரவல் ஏற்பட்டுள்ளது.

இந்தச் சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது,

இந்த சம்பவம் நேற்று மதியம் இடம்பெற்றுள்ளது. சமையல் எரிவாயு சிலிண்டரில் ஏற்பட்ட கசிவினால் இந்த தீப்பரவல் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

தீ ஏற்பட்டதையடுத்து, சம்பவ இடத்துக்கு விரைந்து வந்த நுவரெலியா மாநகரசபை தீயணைப்புப் படையினர் தீயை கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்தனர்.

இத் தீவிபத்தினால் பாரிய சேதம் ஏதும் ஏற்படவில்லை. பகுதியளவிலேயே பொருட்கள் சேதமடைந்துள்ளதாக உணவக ஊழியர்கள் தெரிவித்துள்ளனர்.

## மாத்தறை – கொழும்பு வீதியை மறித்து காலியில் மக்கள் ஆர்ப்பாட்டம்



எரிபொருளை விரைவாக பெற்றுக்கொடுக்க கோரி மாத்தறை – கொழும்பு வீதியை மறித்து காலி சமுத்திர வீதியின் இடையில் நேற்று மக்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டதால் வீதியில் போக்குவரத்துக்கு கடும் பாதிப்பு ஏற்பட்டிருந்தது.

எரிபொருளை பெற்றுக்கொள்வதற்காக நேற்று முன்தினம் இரவு எரிபொருள் கிடைக்காமையினால் அங்கிருந்த சிலரே இவ்வாறு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டுள்ளனர்.

இதன் காரணமாக அந்த வீதியினூடாக பயணிக்கும் வாகனங்கள் மாற்று வீதியை பயன்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது.

## மக்களின் கோரிக்கைகளுக்கு முன்னுரிமையளித்து எம்.பிக்கள் மனசாட்சியுடன் செயற்பட வேண்டும்

### வடிவேல் சுரேஷ் எம்.பி. கோரிக்கை



அரசாங்கத்திற்கு எதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணையிலும் ஜனாதிபதிக்கு எதிரான குற்றப் பிரேரணையிலும் மக்களின் கோரிக்கைகளுக்கு முன்னுரிமையளித்து நாடாளுமன்ற உறுப்பினர்கள் மனசாட்சியுடன் இவ்விரு பிரேரணைகளுக்கும் கையெழுத்திட வேண்டுமென நாடாளுமன்ற உறுப்பினரும் இலங்கை தேசிய தோட்டத் தொழிலாளர் சங்கத்தின் பொதுச் செயலாளருமான வடிவேல் சுரேஷ் தெரிவித்தார்.

ராஜகிரியவில் நடைபெற்ற ஊடக சந்திப்பில் கருத்து தெரிவித்தபோதே அவர் மேற்கண்டவாறு கருத்துரைத்தார்.

இதுதொடர்பில் அவர் மேலும் குறிப்பிடுகையில்,

சமகால அரசியல் நிலைப்பாடு தொடர்பாக ஐக்கிய மக்கள் சக்தியினால் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த விசேட கூட்டத்தில் கலந்து கொண்டபோது மலையக மக்களை பிரதிநிதித்துவப்படுத்தும் நாடாளுமன்ற உறுப்பினர் என்ற வகையில் என்னால் ஒரு சில கோரிக்கைகள் முன்மொழியப்பட்டிருந்தன.

விசேடமாக இடைக்கால அரசு என்பது "புலியிடம் பறித்து நரியிடம் கொடுப்பதைப் போன்ற ஒரு செயற்பாடாகும்". இதற்கும் நாங்கள் உடன்பாடு இல்லை. மேலும் 20 கண்டிப்பாக இல்லாதொழிக்கப்படல் வேண்டும். ஒரு நாட்டினுடைய முக்கியமான முடிவுகளை தன்னிச்சையாக ஒருவர் மேற்கொள்வதற்கு இடமளிக்க முடியாது.

இன்று இந்த நாடு எதிர்கொண்டிருக்கின்ற அனைத்து பிரச்சினைக்கும் மிக முக்கிய காரணம் 20ஆவது சீர்திருத்தமே. ஆகவே 20ஆவது அரசியல் சீர்திருத்தத்தை இல்லாதொழித்து ஒரு சில மாற்றங்களுடன் 19ஆவது அரசியல் சீர்திருத்தம் நடைமுறைப்படுத்தப்பட வேண்டும்.

கடும் மழையில் இனம், மதம், மொழி பேதமின்றி முழு நாடுமே உரக்கக்கூறும் ஓர் விடயத்திற்கு நாடாளுமன்ற உறுப்பினர்கள் மிக முக்கியமாக மலையகத்தை பிரதிநிதித்துவப் படுத்தும் நாடாளுமன்ற உறுப்பினர்கள் செவிசாய்த்து அரசாங்கத்திற்கு எதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணையிலும் ஜனாதிபதிக்கு எதிரான குற்றப் பிரேரணையிலும் கையெழுத்திட வேண்டும் என்றார்.

## பிரித்தானியாவின் மாநகர சபைத் தேர்தலில் போட்டியிடும் தமிழர்கள் சார்பாக பரப்புரை




**(வவுனியா நிருபர்)**

பிரித்தானியாவின் பழமைவாதக் கட்சி சார்பில் உள்ளூர் மாநகரசபைத் தேர்தலில் 6 தமிழர்கள் போட்டியிடுகிறார்கள். அவர்களுக்கு சார்பான தேர்தல் பரப்புரை நடவடிக்கைகள் தமிழ் செயற்பாட்டாளர்களால் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.

லண்டனின் ரெய்னர்ஸ் லேன் நிலையத்திற்கு முன்னால் ஆரம்பிக்கப்பட்ட குறித்த தேர்தல் பரப்புரையானது, பல்வேறு பகுதிகளிலும் முன்னெடுக்கப்பட்டது. இதில் புலம்பெயர் செயற்பாட்டாளர்கள் பலரும் கலந்து கொண்டனர்.







**கொழும்பிலுள்ள எரி பொருள் நிரப்பு நிலையமொன்றில், எரிபொருள் பெற்றுக்கொள்வதற்காக நேற்று (11) மக்கள் காத்திருந்தனர். (படப்பிடிப்பு : பிரதீப் தம்பரகே)**

ஸ்ரீ லංකා මහ බැංකුව
இலங்கை மத்திய வங்கி
CENTRAL BANK OF SRI LANKA

### 11.04.2022 நாணய மாற்று வீதம்

| நாணயம் | கொள்வனவு வீதம் | விற்பனை வீதம் |
|---|---|---|
| அவுஸ்திரேலியன் டொலர் | 123 2 00 | 134 0123 |
| கனேடியன் டொலர் | 14 8842 | 150 4327 |
| சீன யுவான் (ரென்மின்பி) | 38 5083 | 40 7184 |
| யூரோ | 236 7454 | 248 4404 |
| ஜப்பான் யென் | 1 4285 | 1 5322 |
| சிங்கப்பூர் டொலர் | 121 7070 | 130 1811 |
| ஸ்ரேலிங் பவுன் | 302 220 | 316 8002 |
| சுவிஸ் பிராங்க் | 227 571 | 241 688 |
| ஐ.அ.டொலர் | 205 684 | 216 3888 |

| நாடு | நாணயம் | விற்பனை வீதம் |
|---|---|---|
| பஹ்ரைன் | பஹ்ரைன் தினார் | 715 5363 |
| குவைட் | குவைட் தினார் | 0, 11 417 |
| ஓமான் | ஓமான் றியால் | 7 8 4238 |
| கட்டார் | கட்டார் றியால் | 74 4 3 |
| சவூதி அரேபியா | சவூதி அரேபிய றியால் | 72 0 56 |
| ஐக்கிய அரபு இராச்சியம் | ஐக்கிய அரபு இராச்சிய திர்ஹம் | 73 7434 |

## கார் - மோட்டார் சைக்கிள் நேரெதிரே மோதி விபத்து

### இருவர் உயிரிழப்பு




**(ஏ.ஏ.எம்.பாயிஸ்)**

கார் மற்றும் மோட்டார் சைக்கிள் என்பன நேரில் மோதி விபத்துக்குள்ளாகியுள்ளன. இந்த விபத்தில் மோட்டார் சைக்கிளில் பயணித்த இருவர் உயிரிழந்துள்ளதாக பெல்மதுளை பொலிஸார் தெரிவித்தனர்.

இரத்தினபுரி - பெல்மதுளை வீதியில் நில்ஹேன என்ற இடத்தில் நேற்று (11) இந்த விபத்துச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

பெல்மதுளை பகுதியை நோக்கிச் சென்று கொண்டிருந்த பவுசர் ஒன்றை முந்திச் செல்ல முற்பட்டபோது எதிரே வந்த மோட்டார் காரில் இந்த மோட்டார் சைக்கிள் எதிரெதிரே மோதியதால் இந்த விபத்து ஏற்பட்டுள்ளதாக விசாரணை மேற்கொண்டுவரும் பெல்மதுளை பொலிஸார் தெரிவித்தனர்.

இவர்களில் ஒருவர் ஸ்தலத்திலேயே மரணித்துள்ளதுடன் மற்றையவர் வைத்திய சாலைக்கு எடுத்துச் செல்லும் வழியில் மரணித்துள்ளார்.

தெரணியகல, கொலன்னாவ ஆகிய பிரதேசங்களைச் சேர்ந்த இருவரே இவ்வாறு உயிரிழந்துள்ளதாக பொலிஸார் மேலும் குறிப்பிட்டுள்ளனர்.

## சட்டவிரோத துப்பாக்கியுடன் ஒருவர் கைது

**(அநுராதபுரம் செய்தியாளர்)**

உள்நாட்டில் தயாரித்த துப்பாக்கியொன்றினை சட்டவிரோதமான முறையில் வைத்திருந்த சந்தேகநபர் ஒருவரை திறப்பனை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

பொலிஸாருக்கு கிடைத்த இரகசிய தகவலொன்றுக்கமைய நேற்று முன்தினம் மாலை திறப்பனை பேதிஸ்ரம்பாவ பகுதி வீடொன்றில் நடத்திய சுற்றிவளைப்பின்போது சந்தேக நபர் ஒருவரை கைது செய்துள்ளதுடன் துப்பாக்கியொன்றினையும் திறப்பனை பொலிஸ் நிலைய குற்றத்தடுப்பு பிரிவு பொலிஸார் கைப்பற்றியுள்ளனர்.

கைது செய்யப்பட்டவர் 59 வயதுடைய மரதன்கடவள பகுதியை வசிப்பிடமாக கொண்டவர் என்பது ஆரம்பகட்ட பொலிஸ் விசாரணைகளில் இருந்து தெரியவந்துள்ளது.

துப்பாக்கியினை பயன்படுத்தி சந்தேக நபர் குற்றச்செயல்களில் ஈடுபட்டுள்ளாரா என்பதனை அறிந்து கொள்வதற்காக வேண்டி பொலிஸார் பல கோணங்களிலும் தீவிர விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர். விசாரணைகளின் பின்னர் சந்தேக நபர் அநுராதபுரம் நீதிமன்றில் ஆஜர்படுத் தப்படவுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

## துப்பாக்கிச் சூடு நடத்திய கொள்ளையர் ஒருவர் கைது

ஹொரணை, கொரளஹிம பிரதேசத்திலுள்ள வர்களை கூரிய ஆயுதத்தால் தாக்கி திருட்டுச் சம்பவங்களில் ஈடுபட்ட அண்ணன், தம்பி இருவரை கைதுசெய்யச் சென்ற பொலிஸ் அதிகாரியொருவரும் கூரிய ஆயுதத்தால் தாக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

அதன் பின்னர் மொரகஹஹேன பொலிஸ் குழுவினரால் திருடர்களான அண்ணன் மற்றும் தம்பி இருவரும் தப்பித்துச் சென்றபோது ஹாலபிட்டிய பிரதேசத்தில் வைத்து துப்பாக்கிச் சூடு நடத்தி ஒருவர் கைதுசெய்யப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

மற்றையவரை கைதுசெய்வதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளதுடன் கைதுசெய்யப்பட்டுள்ள நபரை நீதிமன்றத்தில் ஆஜர்படுத்த பொலிஸார் நடவடிக்கை எடுத்துள்ளனர்.

# எரிபொருள் தாங்கி மீது புகையிரதம் மோதி விபத்து:

## பெருமளவு டீசல் கசிவு







ரம்புக்கனை புகையிரத நிலையத்தில் நிறுத்திவைக்கப்பட்டிருந்த எரிபொருள் போக்குவரத்து தாங்கியின் மீது புகையிரதம் மோதி விபத்துக்குள்ளாகியுள்ளது.

இந்தச் சம்பவம் நேற்று (11) காலை 4 மணியளவில் இடம்பெற்றுள்ளது.

இதுதொடர்பில் மேலும் தெரியவருவதாவது,

புகையிரத தரிப்பிடத்தில் நிறுத்திவைக்கப்பட்டிருந்த பிரயாணிகள் போக்குவரத்து புகையிரதம் சாரதி இல்லாமல், ரயிலில் ஏற்பட்ட தொழில்நுட்பக் கோளாறின் காரணமாக அவ்விடத்தில் நிறுத்திவைக்கப்பட்டிருந்த எரிபொருள் போக்குவரத்துத் தாங்கியின் மீது மோதியுள்ளது.

இதனால், குறித்த எரிபொருள் தாங்கி நகர்ந்து சென்று ரம்புக்கனை புகையிரத நிலையத்தின் கட்டடமொன்றுடன் மோதியுள்ளது.

இந்த விபத்தினால் எரிபொருள் தாங்கி சேதமடைந்துள்ளதுடன், பெருமளவு எரிபொருள் கசிவடைந்துள்ளது. புகையிரத நிலையத்தின் கட்டடத்துக்கும் சேதம் ஏற்பட்டுள்ளது.

குறித்த எரிபொருள் தாங்கியிலிருந்த எரிபொருள், பேராதெனிய எரிபொருள் களஞ்சியத்துக்கு எடுத்துச்செல்வதற்காக தயார்நிலையில் இருந்ததாக புகையிரத நிலைய அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

50 ஆயிரம் லீற்றர் சுப்பர் டீசல் எடுத்துச்செலும் எரிபொருள் தாங்கியே இவ்வாறு விபத்துக்குள்ளாகியுள்ளது.

இந்நிலையில் எரிபொருள் கசிவை நிறுத்த புகையிரத நிலைய அதிகாரிகள் நடவடிக்கை எடுத்துள்ளனர்.

# படகிலிருந்து தவறி விழுந்த மீனவர் மாயம்:

## தேடும் பணிகள் தீவிரம்

(மன்னார் நகர் நிருபர்)

ராமநாதபுரம் மாவட்டம் ராமேஸ்வரம் அடுத்த சேராங்கோட்டை கடற்கரையிலிருந்து கடந்த சனிக்கிழமை (9) மாலை 12 மீனவர்கள் நாட்டுப்படகில் மீன்பிடிக்க கடலுக்குச் சென்றுள்ளனர்.

மீனவர்கள் தனுஷ்கோடி அருகே மீன் பிடித்துக்கொண்டிருக்கும்போது அந்தப் படகில் இருந்த மீனவர் முனியராஜ் கடலில் தவறி விழுந்து காணாமல்போயுள்ளதாக மீனவர்கள் தெரிவித்துள்ளனர்.

இதுதொடர்பில் மேலும் தெரியவருவதாவது,

நடுக்கடலில் தவறி விழுந்து மாயமான மீனவரை தொடர்ந்து கடந்த சனிக்கிழமை (9) இரவு வரை சக மீனவர்கள் தேடிவந்த நிலையில் கடலில் விழுந்து காணாமல்போன மீனவர் குறித்து தகவல் ஏதும் கிடைக்கவில்லை.

இதனையடுத்து நேற்று முன்தினம் (10) காலை மீன்வளத்துறை அதிகாரிகள், மெரைன் பொலிஸ் மற்றும் இந்திய கடலோர காவல்படை அதிகாரி ஆகியோரிடம் கடலில் மாயமான மீனவரை மீட்டு தரக் கோரி மீனவர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

அதனடிப்படையில் நேற்று முன்தினம் (10) காலைமுதல் தொடர் மழைக்கு மத்தியில் மீன்வளத்துறை, ராமேஸ்வரம் மெரைன் பொலிஸ், மற்றும் மண்டபம் கடலோர காவல் படைக்கு சொந்தமான ரோந்து படகுகளின் உதவியுடன் தொடர்ந்து கடலில் தவறி விழுந்து மாயமான மீனவரை நடுக்கடலில் தேடி வருகின்றனர்.

நடுக்கடலில் தவறி விழுந்து மாயமான மீனவரை மீட்பதில் தாமதம் ஏற்பட்டுள்ளதால் ஹெலிகொப்டரை பயன்படுத்தி விரைவில் மாயமான மீனவரை மீட்கவேண்டும் என மாயமான மீனவரின் உறவினர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

# குறுகிய காலத்தில் சமையல் எரிவாயு தட்டுப்பாட்டுக்குத் தீர்வு

நாட்டுக்கு கொண்டுவரப்பட்டுள்ள 3 ஆயிரத்து 900 மெற்றிக்தொன் சமையல் எரிவாயு கப்பலிலுள்ள எரிவாயுவை தரையிறக்கும் நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக லிட்ரோ கேஸ் நிறுவனம் அறிவித்துள்ளது.

கடந்த மூன்று தினங்களில் நாளாந்தம் ஒரு இலட்சம் எரிவாயு சிலிண்டர்கள் சந்தைக்கு விநியோகிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக அதன் தலைவர் தேசர ஜயசிங்க தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் குறிப்பிட்டுள்ளதாவது,

நாளைய தினம் (இன்றைய தினம்) மேலுமொரு சமையல் எரிவாயு கொண்ட கப்பல் நாட்டை வந்தடையவுள்ளது. எனவே, எதிர்காலத்தில் எரிவாயு விநியோக நடவடிக்கைகள் சீராகும் என எதிர்பார்க்கிறோம்.

புத்தாண்டு காலப்பகுதியில் சமையல் எரிவாயு விநியோகத்தை சீராக முன்னெடுக்கவும் எதிர்பார்ப்பதாக அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

# தென்கடல் பிரதேசத்தில் படகு விபத்து: ஒருவர் மாயம்; நால்வர் மீட்பு!







பின்னர் அங்கிருந்த இன்னுமொரு நீண்டநாள் மீன்பிடிப் படகினூடாக விபத்துக்குள்ளான மீன்பிடிப் படகிலிருந்த மீனவர்கள் நால்வரை மீட்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதுடன், மீனவரொருவர் காணாமல்போயுள்ளார்.

இதுதொடர்பில் மேலும் தெரியவருவதாவது,

இந்தச் சம்பவம் தொடர்பில் கடந்த 09ஆம் திகதி இரவு கடற்றொழில் மற்றும் நீரியல் வள திணைக்களத்தினால் கடற்படை தலைமையகத்தினால் மீனவர்களை மீட்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

விபத்துக்குள்ளான மீன்பிடிப் படகிலிருந்த மீனவர்கள் நால்வரை மீட்டு காலி துறைமுகத்துக்கு அழைத்துச் சென்று அவர்களை சிகிச்சைக்காக கராபிட்டிய வைத்தியசாலையில் சேர்க்க கடற்படையினர் நடவடிக்கை எடுத்துள்ளனர்.

காணாமலாக்கப்பட்ட மீனவரை தேடிக் கண்டுபிடிக்கும் நடவடிக்கைகளை கடற்படையினர் முன்னெடுத்து வருகின்றனர்.

தென் கடல் பிரதேசத்தில் விபத்துக்குள்ளான மீன்பிடிப் படகிலிருந்த மீனவர்கள் பாதுகாப்பாக கரைக்கு அழைத்துவரப்பட்டு, சிகிச்சைக்காக வைத்தியசாலையில் சேர்க்க நேற்று முன்தினம் கடற்படையினர் நடவடிக்கை எடுத்துள்ளனர்.

காலி மீன்பிடித் துறைமுகத்திலிருந்து கடந்த 7ஆம் திகதி மீன்பிடி நடவடிக்கைக்காக புறப்பட்டுச் சென்ற மீனவர்களின் மீன்பிடிப் படகு காலிக்கு அருகில் 74 கிலோமீற்றர் தூரம் கொண்ட ஆழ்கடல் பிரதேசத்தில் விபத்துக்குள்ளாகியுள்ளது. இந்த விபத்தினால் கவிழ்ந்த மீனவர்களும் விபத்துக்குள்ளாகியுள்ளனர்.

# மதுபானசாலைகளுக்கு இரு நாட்கள் பூட்டு

நாடு முழுவதுமுள்ள அனைத்து மதுபான சாலைகளும் எதிர்வரும் 13 மற்றும் 14ஆம் திகதிகளில் மூடப்படும் என மதுவரித் திணைக்களம் தெரிவித்துள்ளது.

தமிழ் - சிங்களப் புத்தாண்டை முன்னிட்டு இவ்வாறு அனைத்து மதுபானசாலைகளும் முடப்படவுள்ளதாக மதுவரித் திணைக்களம் குறிப்பிட்டுள்ளது.

இது தொடர்பில் அனைத்து மதுபானசாலைகள் உரிமையாளர்களுக்கும் ஏற்கனவே அறிவிக்கப்பட்டுள்ளதாகவும், இந்த உத்தரவை மீறுபவர்களுக்கு எதிராக கடுமையான சட்ட நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்றும் மதுவரித் திணைக்களம் அறிவித்துள்ளது.

සුරා බදු දෙපාර්තමේන්තුව
ஸ்ரீ லங்கா மதுவரித் திணைக்களம
Department of Excise

# கீழே விழுந்து வெளிநாட்டு இளைஞரொருவர் உயிரிழப்பு

கொம்பனித்தெரு, கொழும்பு 02 பிரதேசத்திலுள்ள வீடொன்றில் தற்காலிகமாக தங்கியிருந்த இந்தியப் பிரஜையொருவர் உயிரிழந்துள்ளார்.


உயிரிழந்த இளைஞர் தான் தங்கியிருந்த வீட்டின் கூரையை சரிசெய்துகொண்டிருந்தபோது கீழே விழுந்து படுகாயங்களுக்குள்ளாகிய நிலையிலேயே இவ்வாறு உயிரிழந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இதுதொடர்பில் மேலும் தெரியவருவதாவது,

குறித்த நபர் காயங்களுக்குள்ளான நிலையில் கொழும்பு தேசிய வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டதன் பின்னர் உயிரிழந்துள்ளதாக கொம்பனித்தெரு பொலிஸாருக்கு கிடைத்த தகவலுக்கமைய விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. 22 வயதான இந்தியப் பிரஜையொருவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

இவர் கொழும்பு - 02 பிரதேசத்தில் அமைந்துள்ள தொழிற்சாலையொன்றில் தொழில் புரிந்துவந்துள்ளமை பொலிஸ் விசாரணைகளில் தெரியவந்துள்ளது. இந்தச் சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை கொம்பனித்தெரு பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர்.

# எட்டு மில்லியன் ரூபா பெறுமதியான ஐஸ் போதைப்பொருளுடன் மூவர் கைது








யாழ்ப்பாணத்தை அண்மித்த கடற்பரப்பில் நேற்றுக் காலை கடற்படையினரால் முன்னெடுக்கப்பட்ட விசேட சுற்றிவளைப்பு நடவடிக்கைகளின்போது 01 கிலோ ஐஸ் போதைப் பொருளுடன் சந்தேகநபர்கள் மூவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இதுதொடர்பில் மேலும் தெரியவருவதாவது,

இந்த சுற்றிவளைப்பு நடவடிக்கையின்போது யாழ்ப்பாணம், டெல்பீட் தீவை அண்மித்த கடற்பரப்பில் சந்தேகத்துக்கிடமான முறையில் பயணித்துக்கொண்டிருந்த டிங்கி படகொன்று பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டுள்ளது.

இதன்போது குறித்த டிங்கி படகில் சூட்சுமமான முறையில் மறைத்து எடுத்துச்செல்லப்பட்ட ஒரு கிலோ ஐஸ் போதைப் பொருளுடன் சந்தேகநபர்கள் மூவர் கைதுசெய்யப்பட்டுள்ளதுடன், குறித்த படகும் கடற்படையினரால் கைபபற்றப்பட்டுள்ளது.

இந்த ஐஸ் போதைப்பொருளின் சந்தை பெறுமதி 08 மில்லியன் ரூபா என கடற்படை அதிகாரிகள் மேலும் தெரிவித்துள்ளனர்.

பூநகரி மற்றும் மன்னார் ஆகிய பிரதேசங்களைச் சேர்ந்த 23 – 36 வயதுக்கிடைப்பட்ட மூவரே இவ்வாறு கைதுசெய்யப்பட்டுள்ளனர். சந்தேகநபர்கள் மூவரும் மேலதிக விசாரணைகளுக்காக போதைப்பொருள் மற்றும் படகுடன் டெல்பிட் பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளனர்.

# சூதாட்டத்தில் ஈடுபட்ட எண்மர் கைது

ஒக்கம்பிட்டிய பொலிஸாருக்குக் கிடைத்த தகவலுக்கமைய நேற்று முன்தினம் (10) முன்னெடுக்கப்பட்ட சுற்றிவளைப்பு நடவடிக்கையின்போது பணத்துக்கு சூதாட்டத்தில் ஈடுபட்ட எட்டு பேர் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

ஒக்கம்பிட்டிய, ரத்வத்த மாவத்தையில் அமைந்துள்ள வீடொன்றில் பின்னால் சூதாட்டத்தில் ஈடுபட்டிருந்த சிலரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளனர்.

சந்தேகநபர்களை பொலிஸார் பிணையில் விடுதலைசெய்துள்ளதுடன், சந்தேகநபர்களுக்கு எதிராக வெல்லவாய நீதவான் நீதிமன்றத்தில் வழக்குத் தொடரவும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

ஒக்கம்பிட்டிய பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி ஜே.சீ.ஏ. பிரேசில் குமாரவின் உள்ளிட்ட அதிகாரிகள் குழுவினரே சந்தேகநபர்களை கைது செய்துள்ளனர்.

# இளைஞர் நாடாளுமன்றத்தின் வெளிவிவகார பிரதியமைச்சர் அவுஸ்திரேலியா உயர்ஸ்தானிக செயலாளர் சந்திப்பு



இளைஞர் நாடாளுமன்றத்தின் வெளிவிவகார பிரதியமைச்சர் அஹ்மத் ஸாதிக் அவுஸ்திரேலியா உயர்ஸ்தானிக செயலாளரை சந்தித்தார்.

இளைஞர் நாடாளுமன்றத்தின் வெளிவிவகாரம் மற்றும் இராஜதந்திர உறவுகளின் பிரதி அமைச்சர் அஹ்மத் ஸாதிக், இளைஞர் நாடாளுமன்ற உறுப்பினர் மொஹமட் முப்தி ஆகியோர் அவுஸ்திரேலியா

உயர்ஸ்தானிக இரண்டாம் செயலாளர் திருமதி லாரா செவய்ன்சனுடனான சந்திப்பொன்று அண்மையில் இடம்பெற்றது.

இச்சந்திப்பில், உயர் கல்வி, வேலைவாய்ப்பு, வெளிவிவகாரம் மற்றும் சுற்றுலாத்துறை போன்றவற்றில் இளைஞர்களின் நிலைப்பாடு தொடர்பாகவும் மேலும் அதிலுள்ள குறைகள் குறித்தும் மேலும் இத்துறைகளில் அவுஸ்திரேலியா நாட்டின் இளைஞர்களின் நிலைப்பாடு குறித்தும் கலந்துரையாடப்பட்டது.

கலந்துரையாடலின் பின்னர், இலங்கையின் வேலைவாய்ப்பு, உயர்கற்கை வீதம் / உயர்கற்கை சலுகைகள், வெளியுறவுத்துறை மற்றும் சுற்றுலாத்துறை மேலும் வளர்வதற்கான தேவைப்பாடுகள் குறித்தும் விசேடமாக இலங்கை, அவுஸ்திரேலியா இளைஞர்களின் உறவுகளை வலுப்படுத்தும் செயற்றிட்டங்களுக்கான ஆதரவினை எதிர்காலங்களில் வழங்குமாறும் கேட்கப்பட்டது.

மேலும் இரு நாடுகளினதும் உறவு இளைஞர்களின் ஊடாகவும் வலுப்படுத்த சிறந்த நடவடிக்கைகள் எதிர்காலங்களில் எடுக்கப்படும் என்றும் குறிப்பிடப்பட்டது.

# ஸேம் ரிபாய் ஹாஜியார் தேசிய பாடசாலையின் அதிபர் ஆற்றிய பணிகள் அளப்பரியவை

## மர்ஜான் பளீல் எம்.பி. அனுதாபம்

(பேருவளை)

களுத்துறை மாவட்டத்தில் உலக கல்வி மற்றும் ஆன்மீக கல்வி மேம்பாட்டிற்காக மறைந்த பேருவளை மாளிகாஹேனை ஸேம் ரிபாய் ஹாஜியார் தேசிய பாடசாலையின் அதிபர் எம்.எவ்.எம்.நழ்ரி ஆற்றிய சேவைகள் அளப்பரியவை - என நாடாளுமன்ற உறுப்பினர் மர்ஜான் பளீல் விடுத்துள்ள அனுதாபச் செய்தியில் குறிப்பிட்டுள்ளார்.

மர்ஜான் பளீல் எம்.பி. கூறியுள்ளதாவது,

மறைந்த அதிபர் மர்ஹூம் எம்.எவ்.எம்.நழ்ரி வரலாற்றுப் பிரசித்திபெற்ற மாளிகாஹேனை ஸேம் ரிபாய் ஹாஜியார் தேசிய பாடசாலையை சகல துறைகளிலும் கட்டியெழுப்ப வேண்டும் என்ற தூயநோக்கோடு அயராது பாடுபட்டார். இப்பாடசாலையின் முன்னேற்றம் குறித்து அவர் என்னோடு அடிக்கடி தொடர்புகொண்டு குறைபாடுகளை கவனத்திற்கு கொண்டுவருவார்.

பிரதேச பரோபகாரிகள், பாடசாலை அபிவிருத்திச் சங்கம், பாடசாலை பழைய மாணவர் சங்கம், பெற்றோர்கள், பழைய மாணவர்கள், கல்வி அதிகாரிகள், அரசியல்வாதிகள் ஆகியோரின் முழுமையான பங்களிப்பைப்பெற்று ஸேம் ரிபாய் ஹாஜியார் தேசிய பாடசாலையை முன்னேற்ற உழைத்தார். எனது முயற்சியால் இப்பாடசாலை தேசிய பாடசாலையாக தரம் உயர்த்தப்பட்டதையும் இச்சந்தர்ப்பத்தில் ஞாபகமூட்டுகிறேன்.

ஸேம் ரிபாய் ஹாஜியார் தேசிய பாடசாலையை உயர்நிலைக்குக் கொண்டுவர அவர் இறுதி மூச்சு வரை கடுமையாக உழைத்தார். பல்வேறு சமூக நல அமைப்புகளில் அங்கம் வகித்து அதனூடாகவும் சமூகத்திற்கு தன்னாலான பணிகளை செய்தார்.

அன்னாரின் மறைவு எமது பிரதேசத்திற்கு ஒரு பேரிழப்பாகும். அன்னார் ஆற்றிய ஆன்மீக, உலக கல்வி மற்றும் சமூக நல பணிகளை அல்லாஹ் அங்கீகரித்து ஜன்னதுல் பிர்தௌஸ் எனும் சுவர்க்கம் கிடைக்கப் பிரார்த்திக்கின்றேன்.

# யாழில் பாரவூர்தி - மோட்டார்சைக்கிள் விபத்தில் சிறுவன் உயிரிழப்பு



(யாழ். நிருபர்)

யாழ். நகர்ப் பகுதியில் பாரவூர்தி - மோட்டார் சைக்கிள் விபத்தில் சிறுவன் ஒருவன் உயிரிழந்துள்ளான்.

யாழ்ப்பாணம் சத்திர சந்தி பகுதியில் நேற்று திங்கட்கிழமை காலை இவ்விபத்து இடம் பெற்றுள்ளது.

தாயும் மகனும் மோட்டார் சைக்கிளில் சென்றுகொண்டிருந்த வேளை பின்னால் சென்ற பாரவூர்தி மோதியதில், மோட்டார் சைக்கிளில் பின்னால் இருந்து பயணித்த சிறுவன், வீதியில் விழுந்து பாரவூர்தியின் சக்கரத்திற்குள் சிக்கி ஸ்தலத்திலேயே உயிரிழந்துள்ளான்.

சம்பவம் தொடர்பில் அறிந்த யாழ்ப்பாணப் பொலிஸார், சம்பவ இடத்திற்கு விரைந்து, பாரவூர்தி சாரதியை கைதுசெய்ததுடன், பாரவூர்தியையும் பொலிஸ் நிலையத்திற்கு எடுத்துச்சென்று மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

# பல்வேறு கோரிக்கைகளை முன்வைத்து தெல்லிப்பழையில் ஆர்ப்பாட்டம்




பல்வேறு கோரிக்கைகளை முன்வைத்து நேற்று யாழ்ப்பாணம் - தெல்லிப்பழையில் ஆர்ப்பாட்டம் ஒன்று இடம்பெற்றது.

வலிகாமம் வடக்கு மக்களின் ஏற்பாட்டில் தெல்லிப்பழை பிரதேச செயலகத்திற்கு அருகில் நேற்றுக் காலை 9.30 மணிக்கு குறித்த போராட்டம் இடம்பெற்றது.




"அத்தியாவசியப் பொருட்கள் எங்கே, வலிகாமம் வடக்கு மீள்குடியேற்றத்தை துரிதப்படுத்து, பயங்கரவாதத் தடைச் சட்டத்தை நீக்கு, வலிகாமம் வடக்கு மக்களின் காணிகளை உடனடியாக விடுவி" உள்ளிட்ட பல்வேறு கோரிக்கைகளை முன்வைத்து குறித்த போராட்டம் முன்னெடுக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# இனந்தெரியாதோரின் தாக்குதலுக்கு இலக்கான நபர் வைத்தியசாலையில்

(சாவகச்சேரி நிருபர்)

சாவகச்சேரி பொலிஸ் பிரிவிற்குட்பட்ட கைதடி பகுதியில் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை இரவு இனந்தெரியாத நபர்களின் தாக்குதலுக்கு இலக்கான இளைஞன் ஒருவர் படுகாயமடைந்துள்ளார்.

கைதடி சரஸ்வதி சனசமூக நிலையப் பகுதியைச் சேர்ந்த 32வயதான இளைஞன் ஒருவரே இவ்வாறு தாக்குதலுக்கு இலக்கான நிலையில் சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டு பின்னர் மேலதிக சிகிச்சைக்காக யாழ். போதனா வைத்தியசாலைக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளார்.

தாக்குதல் சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை சாவகச்சேரி பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர்.

வடக்கு செய்திகள்
thamilannorth@gmail.com

# யாழ். இளைஞனுக்கு மலேரியா!

(யாழ். நிருபர்)

யாழ். போதனா வைத்தியசாலையில் மலேரியா நோயாளி ஒருவர் இனங்காணப்பட்டுள்ளார்.

யாழ்ப்பாணம் தொண்டைமானாறு பகுதியை சேர்ந்த 29 வயதுடைய இளைஞன் ஒருவரே மலேரியா காய்ச்சலுடன் இனங்காணப்பட்டுள்ளார்.

குறித்த நபர் சில நாட்களுக்கு முன்னர் நைஜீரியாவிலிருந்து திரும்பி வந்ததாகவும், கடுமையான காய்ச்சலுக்கு உள்ளாகிய நிலையில் மந்திகை வைத்தியசாலையில் சிகிச்சைக்காக சேர்க்கப்பட்ட நிலையில் மேலதிக சிகிச்சைக்காக யாழ். போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளார்.

யாழ். போதனா வைத்தியசாலையில் மேற்கொள்ளப்பட்ட வைத்திய பரிசோதனையில் குறித்த இளைஞனுக்கு மலேரியா தொற்று உள்ளமை கண்டறியப்பட்டு, அதற்கான சிகிச்சை வழங்கப்பட்டு வருகின்றது.

வெளிநாட்டிலிருந்து வருவோர் காய்ச்சலுக்கு ஆளானால் உடனடியாக அருகிலுள்ள வைத்தியசாலைகளுக்கு சென்று சிகிச்சை பெறுமாறு வைத்தியர்கள் அறிவுறுத்தியுள்ளனர்.

அதேவேளை, மலேரியா அற்ற நாடுகளின் பட்டியலில் இலங்கை இடம்பெற்றுள்ளபோதிலும், வெளிநாடுகளிலிருந்து வருபவர்களினால் மலேரியா பரவல் அச்சம் ஏற்பட்டுள்ளது என்றும், மலேரியா எச்சரிக்கை விடுக்கப்பட்டிருக்கும் நாடுகளுக்குச் செல்பவர்கள் மலேரியா முன்னெச்சரிக்கை மருத்துவ வழிகாட்டுதல்களை தகுதி வாய்ந்த மருத்துவ அதிகாரிகளிடம் பெற்றுச்செல்லுமாறும் வைத்தியர்கள் அறிவுறுத்தியுள்ளனர்.

# பாம்புக்கடிக்கு இலக்கான சிறுமி வைத்தியசாலையில்

(சாவகச்சேரி நிருபர்)

சாவகச்சேரி மட்டுவில் கிழக்கு பகுதியைச் சேர்ந்த 9 வயதுச் சிறுமி ஒருவர் கடந்த சனிக்கிழமை இரவு பாம்புக்கடிக்கு இலக்காகியுள்ளார்.

மின்வெட்டு நேரத்தில் வீட்டிற்கு வெளியே சென்றபோது புடையன் பாம்பு தீண்டியதாகத் தெரிவிக்கப்படுகிறது.

பாம்புக் கடிக்கு இலக்கான சிறுமி உடனடியாக சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டு பின்னர் மேலதிக சிகிச்சைக்காக யாழ் போதனா வைத்தியசாலைக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளார்.

# உணர்வுபூர்வமான போராட்டங்களினால் ஆட்சியை இல்லாதொழிக்க முடியும்

## மத்திய மாகாண சபையின் முன்னாள் உறுப்பினர் ஸ்ரீதரன் தெரிவிப்பு



"கோட்டா கோ ஹோம்" என்ற கோஷத்துடன் ஜனாதிபதி செயலகத்துக்கு முன்பாக கடந்த மூன்று நாட்களாக முன்னெடுக்கப்பட்டு வருகின்ற உணர்வுபூர்வமான போராட்டமானது இன, மத நல்லிணக்கத்தை வலுபடுத்தியுள்ளது என்று தொழிலாளர் தேசிய சங்கத்தின் நிதிச் செயலாளரும் மத்திய மாகாண சபையின் முன்னாள் உறுப்பினருமான சோ. ஸ்ரீதரன் தெரிவித்துள்ளார்.

இவ்விடயம் தொடர்பாக அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:

"இரவு, பகல், மழை, வெயில், பனி, குளிர் என்று பாராமல் சகலரும் ஒன்றிணைந்து ஜனாதிபதியைப் பதவி விலகக்கோரி போராடிக்கொண்டு வருகின்றார்கள். இந்தப் போராட்டமானது, இலங்கை அரசியல் வரலாற்றில் முக்கியமானதொரு போராட்டமாக திகழப் போகின்றது.

20ஆவது அரசியலமைப்பின் ஊடாக சகல அதிகாரங்களும் கொண்டவராக இன்றைய ஜனாதிபதி இருக்கிறார். இவராகவே விரும்பி தனது பதவியைத் துறக்காவிட்டால் மக்களின் தொடர் போராட்டங்களின் ஊடாகவே இவர் பதவியிலிருந்து விலக நிர்ப்பந்திக்க முடியும்.

இதனை அடிப்படையாகக் கொண்டே ஜனாதிபதி செயலகத்தின் முன்னால் கடந்த மூன்று நாட்களாக மக்கள் ஒன்று திரண்டு போராடி வருகின்றனர். ஓரிரு நாட்களில் இந்த போராட்டம் முடிவுக்கு வரும் என்று ஆளுந்தரப்பு அரசியல்வாதிகள் கேலி செய்து வந்துள்ளபோதும் நேர்த்தியான போராட்டமாக இந்தப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது. நாடு பொருளாதார ரீதியாக வங்குரோத்து நிலையை அடைந்துள்ளது. மக்கள் வாழ வழியின்றி தத்தளிக்கின்றனர்.

இன, மத ரீதியாக பிரித்தாளும் தந்திரத்தைக் கையாண்டு ஆட்சிக்கு வந்த இந்த அரசாங்கத்தைச் சகலரும் ஒன்றிணைந்து வீழ்த்த வேண்டும் என்பதே பலரின் நிலைப்பாடாகும்.

எனவே, நாடெங்கும் முன்னெடுக்கப்படுகின்ற அரசுக்கு எதிரான போராட்டங்களுக்கும் கொழும்பு ஜனாதிபதி செயலகத்துக்கு முன்பாக முன்னெடுத்து செல்லுகின்ற தொடர் போராட்டத்திற்கும் தொழிலாளர் தேசிய சங்கம் தனது முழுமையான ஆதரவை நல்குகிறது" என்றார்.

# அரசுக்கு எதிராக போராட்டத்தில் குதித்த நுவரெலியா இளைஞர்கள்




(செ.திவாகரன்)

அரசாங்கத்திற்கு எதிராக இளைஞர்கள் படையொன்று இன்று நுவரெலியாவில் போராட்டம் ஒன்றை முன்னெடுத்துள்ளனர். இப்போராட்டம், "அத்தியாவசியப் பொருட்களின் விலை பல மடங்காக உயர்வு, வாழ்க்கை செலவு அதிகரிப்பு, பொருட்களுக்கான தட்டுப்பாடு" உள்ளிட்ட நாடு எதிர்நோக்கியுள்ள அனைத்து பிரச்சினைகளையும் முன்னிலைப்படுத்தி இந்தப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டுள்ளது. நுவரெலியா பிரதான பஸ் தரிப்பிடத்திற்கு முன்பாகவே போராட்டத்தில் ஈடுபட்டனர்.

மலையக செய்திகள்
thamilanmalayagam@gmail.com

# இடையூறு விளைவித்தவர்களை கைதுசெய்க! இல்லையேல் நாங்கள் வீதிக்கு இறங்குவோம்

## நுவரெலியா மாநகர முதல்வர் எச்சரிக்கை

(செ.திவாகரன்)

ஏப்ரல் வசந்தகால நிகழ்வின் ஆரம்ப வைபவத்தில் பலவந்தமாக நுழைந்து குழப்பத்தை உண்டாக்கி இடையூறு விளைவித்தவர்களுக்கு பொலிஸார் விரைந்து தகுந்த நடவடிக்கை எடுக்க வேண்டும். இல்லையேல், நுவரெலியா மாநகர சபை உறுப்பினர்கள், சபை ஊழியர்களுடன் இணைந்து வீதிக்கு இறங்க வேண்டியேற்படும் என நுவரெலியா மாநகர முதல்வர் சந்தனலால் கருணாரட்ன கடுமையான எச்சரிக்கை விடுத்துள்ளார்.



முதல்வர் மேலும் கூறுகையில், நுவரெலியா ஒரு சுற்றுலா நகரமாகும். இங்குள்ள வர்த்தகம் பெரிதும் சுற்றுலாத்துறையை நம்பியுள்ளது. பொதுவாக ஆறு மாதத்தில் வியாபாரம் செய்து பெறும் இலாபத்தினை ஏப்ரல் மாதத்தில் வியாபாரம் செய்து தேடிவிடுவார்கள். காரணம் ஏப்ரல் மாதத்தில் பெருந்தொகையான வெளிநாட்டு, உள்நாட்டு சுற்றுலாப் பயணிகள் நுவரெலியாவுக்கு வருகைதருவர்.

சுற்றுலாப் பயணிகளை நம்பி இம்முறையும் கலை, கலாசாரம், விளையாட்டு போட்டிகள் நடத்துவதற்கான ஏற்பாடுகள் நுவரெலியா மாநகரசபை ஏற்பாடுகளைச் செய்திருந்தது.

இதனை குழப்பியடித்தது சுற்றுலாத்துறையினரை அவமதிக்கும் செயலாகும். திடீரென்று நிகழ்வுகள் நடைபெற்ற இடத்திற்குள் நுழைந்து குழப்பம் விளைவித்து இடையூறு ஏற்படுத்தினர். ஆகையால் இச்சம்பவத்துடன் தொடர்புடையவர்கள் மீது நுவரெலியா பொலிஸார் தகுந்த தண்டனை வழங்கி நடவடிக்கை எடுக்க வேண்டும். இல்லாவிட்டால் வீதியில் இறங்கி போராட வேண்டிய நிலைவரும். யார் எதிர்த்தாலும் திட்டமிட்டபடி வசந்தகால நிகழ்வுகள் நடைபெறும் என்றார்.

# ஜனாதிபதிக்கு ஆதரவாக கண்டியில் ஆர்ப்பாட்டம்



(கண்டி நிருபர்)

ஜனாதிபதிக்கும் தற்போதைய அரசுக்கும் ஆதரவு தெரிவித்து கண்டியில் நேற்றுமுன்தினம் மாலை ஆர்ப்பாட்டம் ஒன்று முன்னெடுக்கப்பட்டுள்ளது.

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவுக்கு ஆதரவு தெரிவித்து கோஷங்களை எழுப்பினர்.

கண்டி ஸ்ரீதலதா மாளிகைக்கு முன் ஒன்று கூடி கோஷங்களை எழுப்பினர். தாம் அமைதியான ஆர்ப்பாட்டம் ஒன்றில் ஈடுபடுவதாகவும் தெரிவித்தனர். சுமார் 200- 300 பேர்வரையில் இதில் கலந்து கொண்டனர். மஹிந்தானந்த அளுத்கமகே மற்றும் அனுராதா ஜயரத்ன ஆகியோர்களுக்கும் ஆர்ப்பாட்டத்தில் கலந்துகொண்டோர் ஆதரவு தெரிவித்ததை அவதானிக்க முடிந்தது.

# உணவு அத்தியாவசியப் பொருட்கள் விநியோகத்தில் பெரும் வீழ்ச்சி

(ஏ.ஏ.எம்.பாயிஸ்)

பலாங்கொடை நகரம் மற்றும் கிராமப் பகுதிகளுக்கு விநியோகிக்கப்பட்டு வந்த மீன், மரக்கறி மற்றும் உணவுப் பொருட்களின் விநியோகத்தில் வீழ்ச்சி ஏற்பட்டுள்ளதாக வியாபாரிகளும் பொது மக்களும் தெரிவிக்கின்றனர்.

இத்தட்டுப்பாட்டு நிலைமையால் இப்பொருட்களின் விலைகள் பல மடங்கு அதிகரித்து விற்கப்படுவதாகவும் பொருட்களின் விநியோகத்தில் ஏற்பட்டு வரும் தட்டுப்பாட்டு நிலைமைகள் காரணமாக பொது மக்கள் அதிக விலைகள் கொடுத்தாவது தமக்கு அவசியமான பொருட்களைக் கொள்வனவு செய்ய நிர்ப்பந்திக்கப்பட்டுள்ளதாகவும் பொது மக்கள் தெரிவிக்கின்றனர்.

எனினும், எரிபொருள் மற்றும் போக்குவரத்துப் பிரச்சினைகள் காரணமாகவே இந்நிலைமை ஏற்பட்டுள்ளதாக வியாபாரிகள் தெரிவிக்கின்றனர். இதேவேளை எரிபொருள் தட்டுப்பாடு காரணமாக இரத்தினபுரி மாவட்டத்தில் சிறு தேயிலை தோட்ட உரிமையாளர்கள், இறப்பர் உற்பத்தியாளர்கள், வாழைச் செய்கையாளர்களும் பெரும் நெருக்கடி நிலைமைகளை எதிர்கொண்டு வருவதாக இத்தொழிற்றுறை சார்ந்தோர் தெரிவிக்கின்றனர்.

திகதி 10.04.2022 ஞாயிற்றுக்கிழமை உத்தியோகபூர்வ முடிவுகள் www.nlb.lk NLB

மஹஜன சம்பத
சீட்டிழுப்பு இலக்கம்: 4733
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ.9,331,320.00
ஆங்கில எழுத்து W வெற்றி இலக்கங்கள் 2 5 3 2 5 1
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ.23,423,883.00

ஜாதிக சம்பத
அச்சிடப்பட்ட திகதி 10.04.2022
சீட்டிழுப்பு இலக்கம் 1235
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 1,805,060.00
வெற்றி இலக்கினம் சிம்மம் வெற்றி இலக்கங்கள் 4 1 9 2 4 9
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ.10,957,394.00

தன நிதானய
சீட்டிழுப்பு இலக்கம் : 763
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 3,458,900.00
வெற்றி இலக்கினம் R வெற்றி இலக்கங்கள் 03 05 35 41
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 107,155,412.00

ராசீ சுப பலன் Handahana
சீட்டிழுப்பு இலக்கம்: 0042
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 3,845,720.00
இலக்கினம் மேஷம் வெற்றி இலக்கங்கள் 04 09 11 46
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ.2,692,342.60

கோடி 23 + Mega POWER மெகா பவர்
சீட்டிழுப்பு இலக்கம் 1081
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 3,103,240.00
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ.246,726,618.00
D 14 12 36 45 46
அடுத்த பவர் சுப்பர் பரிசு ரூ.10,000,000.00
அடுத்த கிராண்ட் சுப்பர் பரிசு ரூ.10,000,000.00

தேசிய லொத்தர் சபை National Lotteries Board
தொலைபேசி: 011-4607000, 011 - 4607001 - 2 Email : info@nlb.lk
பெக்ஸ்: 011-4669475 Web : www.nlb.lk

# இலங்கையில் மனித உரிமை, மனித நேயம் தொலைந்துவிட்டது

**கத்தோலிக்க மறைமாவட்ட ஆண்டகை வணபிதா யோசப் பொன்னையா**







(கனகராசா சரவணன்)

இலங்கையில் மனித உரிமை, மனித நேயம் தொலைந்துவிட்டது. மனித உரிமை மீறல்கள், அநியாயங்கள் மறையவேண்டும். எனவே, இப்படியான நிலை எல்லாம் மாறவேண்டும் என்றால் இதற்காக நாங்கள் போராடவேண்டும் என மட்டு. அம்பாறை கத்தோலிக்க மறைமாவட்ட ஆண்டகை வணபிதா யோசப் பொன்னையா தெரிவித்தார்.

மட்டக்களப்பு எகட் நிறுவனத்தின் அனுசரணையுடன் பல்சமய ஒன்றியத்தின் ஏற்பாட்டில் இறைவா எமது நாட்டை பொருளாதார வீழ்ச்சியில் இருந்தும் ஏனைய அழிவில் இருந்தும் பாதுகாத்தருளும். பல்இன பல்சமய மக்கள் ஒற்றுமையாக வாழ அருள்தருவாய் எனும் தொனிப்பொருளில் அரசுக்கு எதிராக கடந்த ஞாயிற்றுக்கிழமை (10) தாண்டவன்வெளி அந்தோனியார் ஆலயத்துக்கு முன்னால் இடம்பெற்ற ஆர்ப்பாட்டத்தில் கலந்துகொண்டு ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கையில் அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இன்று நாடு ஓர் இக்கட்டான நிலைக்கு சென்றுகொண்டிருக்கின்றது அமைதி, சமாதானம், மகிழ்ச்சி இல்லை அனைவரின் வாழ்விலும் சோகம் நிறைந்திருக்கின்றது. இதற்கு அடிப்படை காரணம் என்ன? எங்களை ஆண்டவர்கள், இப்போது ஆண்டுகொண்டிருப்போர், இனி ஆளாப்போபவர்கள் மக்கள் நலனில் அக்கறை இல்லை. இதனால் மக்கள் இன, மத வேறுபாடின்றி துன்பங்களையும் வேதனைகளை அனுபவித்துக் கொண்டிருக்கின்றார்கள்.

ஆயிரக்கணக்கான மக்கள் பசியால் பட்டினியால் துன்பத்தால் வாடிக்கொண்டிருக்க வேண்டியதில்லை. எல்லா நாளும் நிறைய உணவு கிடைத்துக்கொண்ட இந்த நாடு, எல்லா வளங்களும் உள்ள நாடு.ஆனால் இப்போது எரிபொருள் இல்லை. சாப்பாடு, மா, ரொட்டி இல்லை என இல்லை இல்லை என சொல்தான் வந்துகொண்டிருக்கின்றது.

எனவே, இது எப்போது முடிவடைய போகின்றது? மனிதன் மனிதனை மதித்து வாழவேண்டும். எங்களை ஆளுகின்றவர்கள் ஒவ்வொரு மனிதனையும் இன, மத வேறுபாடு இன்றி மதிக்கவேண்டும். அதற்காக இறைவனை பிரார்த்திப்போம்.

பயங்கரவாத தடைச்சட்டம் கொண்டுவந்து எத்தனையோ மக்களை காணாமலாக்கிவிட்டார்கள், போட்டோ வைத்திருந்தாலும் உடன் கைது செய்கின்றனர். எனவே, இவ்வாறான மனித உரிமை மீறல்கள் அநியாயங்கள் மறையவேண்டும் இப்படியான நிலை எல்லாம் மாறவேண்டும்.

அதேவேளை, மனிதனை மனிதன் மதிக்காமல் மனித உரிமையை கொடுக்காமல் வாழுகின்றான். இதனால் மனித உரிமை, மனித நேயம் தொலைந்துவிட்டது. அதனை நாங்கள் தேடவேண்டும் இதற்காக நாங்கள் போராடவேண்டும் - என்றார்.

## போடியார் புலம்பல்!



**போராட்டங்களுக்கு பயந்து கோட்டா மாத்தையா பதவி விலக மாட்டாராம் எண்டு தினேஷ் எம்பி சொல்லுறாரு. அப்ப புடரில புடித்து தள்ள சொல்லுறாரு போல.**

**வாக்குப்போட்ட சிங்கள சனங்களே திரண்டு “கோட்டா கோ கோம்” எண்டு தொண்ட கிழிய கத்தியும் அவர் விலகாட்டி எதிர்க்கட்சிகளில இருக்கிற எம்பிமார், ஆளும்கட்சில அவருக்கு எதிராக இருக்கிற எம்பிமார் எல்லாம் சேமணயனுகள் எண்டுதான் இந்த தினேஷ் எம்பித்தம்பி அச்சொட்டா நினைச்சது மெய்யா மெய்யா சரிதான்!**

கிழக்கு செய்திகள்
eastthamilan@gmail.com

# உப்புவெளியில் கைக்குண்டு மீட்பு



(ரவ்பீக் பாயிஸ்)

திருகோணமலை உப்புவெளி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பிரதேசத்தில் புதைக்கப்பட்டிருந்த நிலையில் கைக்குண்டு ஒன்று மீட்கப்பட்டுள்ளதாக உப்புவெளி பொலிஸார் தெரிவித்தனர்.

நேற்று (11) அதிகாலை குறித்த கைக்குண்டு கண்டெடுக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

சம்பவம் தொடர்பில் தெரிய வருவதாவது,

குறித்த கைக்குண்டு மீட்கப்பட்ட காணி உரிமையாளர் வடிகான் அமைப்பதற்காக வெட்டப்பட்ட குழியிலிருந்து குறித்த கைக்குண்டு கண்டுபிடிக்கப்பட்டதாகவும் பின்னர் பொலிஸாருக்கு தகவல் வழங்கியதாகவும் ஆரம்பகட்ட விசாரணையில் தெரியவந்துள்ளது.

குறித்த கைக்குண்டு செயலிழப்புக்காக திருகோணமலை சர்தாபுர விசேட அதிரடிப்படையினருக்கு தகவல்கள் வழங்கப்பட்டுள்ளதாகவும் குறித்த கைக்குண்டு மீட்கப்பட்ட பகுதியில் மேலும் கைக்குண்டுகள் இருக்கலாம் என்ற சந்தேகத்தின்பேரில் அகழ்வு நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காக நீதிமன்ற அனுமதி பெறுவதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக திருகோணமலை உப்புவெளி பொலிஸார் தெரிவித்தனர்.

# மின்வெட்டு நேரத்தில் பள்ளிவாசலில் திருட்டு

(மீராவோடை நிருபர்)

பள்ளிவாசல் ஒன்றிலிருந்த ஒலிபெருக்கி சாதனங்கள் திருடப்பட்டுள்ள சம்பவமொன்று நேற்று முன்தினம் (10) இடம்பெற்றுள்ளது.

வாழைச்சேனை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட காவத்தமுனை பகுதியிலுள்ள மன்னான் பள்ளிவாசலிலே இந்த திருட்டுச் சம்பவம் இடம்பெற்றுள்ளதாக பள்ளிவாசல் நிர்வாகத்தினர் தெரிவித்தனர்.

மின்சாரம் தடைப்பட்ட சந்தர்ப்பத்தை திருடர்கள் பயன்படுத்தி பள்ளிவாசலில் வைக்கப்பட்டிருந்த ஒலிபெருக்கி சாதனங்களை திருடிச் சென்றுள்ளனர்.

இதேபோன்று, சில நாட்களுக்கு முன்னர் குறித்த பகுதியிலுள்ள பதஹ் தைக்கா பள்ளிவாசலிலும் இவ்வாறு ஒலிபெருக்கி சாதனங்கள் திருடப்பட்டுள்ளன.

இந்தச் சம்பவம் தொடர்பாக வாழைச்சேனை பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடொன்று பதிவுசெய்யப்பட்டுள்ளதுடன், பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

# மட்டக்களப்பு மாவட்ட செயலகத்தில் ஏல விற்பனை




(மட்டக்களப்பு நிருபர்)

மட்டக்களப்பு மாவட்ட செயலகத்தில் பாவிக்கப்பட்ட பொருட்கள் நேற்று (11) பகிரங்க ஏலத்தில் விற்பனைசெய்யப்பட்டன.

மாவட்ட அரசாங்க அதிபர் கே.கருணாகரனின் ஆலோசனைக்கமைவாக மாவட்ட செயலக கணக்காளர் எம்.வினோத்தின் வழிகாட்டல்களுக்கமைவாக நடைபெற்ற இந்நிகழ்வில் பொதுமக்கள், வியாபாரிகள், அலுவலகர்கள் என பலரும் கலந்துகொண்டு பொருட்கள் கொள்வனவில் ஆர்வம் காட்டியதையும் அங்கு காணப்பட்ட அலுவலக பாவனைக் குட்படுத்தப்பட்ட பொருட்களை கொள்வனவுசெய்ததையும் அவதானிக்க முடிந்தது.

# கிழக்கு மாகாண ரக்பி சம்மேளனம் அங்குரார்ப்பணம்




(நிந்தவூர் நிருபர்)

இலங்கை ரக்பி சம்மேளனத்தின் ஏற்பாட்டில் கிழக்கு மாகாணத்தில் றக்பி சம்மேளனம் அங்குரார்ப்பணம் செய்து வைக்கும் நிகழ்வு கல்முனை ஸாஹிரா தேசியக் கல்லூரியில் அண்மையில் இடம்பெற்றது.

கிழக்கு மாகாணத்திலுள்ள அம்பாறை, மட்டக்களப்பு மற்றும் திருகோணமலை ஆகிய மாவட்டங்களில் றக்பி விளையாட்டை பிரபல்யப்படுத்தி கிராமப் புறங்களிலுள்ள சிறந்த றக்பி வீரர்களை அடையாளம் கண்டு அவர்களை தேசிய மட்ட றக்பி அணியில் இணைத்து மேலதிக பயிற்சிகளை வழங்கும் வகையில் இலங்கை றக்பி சம்மேளனத்தின் தலைவர் றிஸ்லி இல்யாஸ் ஆலோசனையில் கிழக்கு பல்கலைக்கழக விரிவுரையாளர் கலாநிதி சந்திரகாந்தா மகேந்திரநாதன் தலைமையில் இந்த நிகழ்வு ஒழுங்கு செய்யப்பட்டிருந்தது.

இந்நிகழ்வில் கல்முனை ஸாஹிரா தேசியக் கல்லூரியின் அதிபர் எம்.ஐ.ஜாபிர் பிரதித் தலைவராகவும், றக்பி பயிற்றுவிப்பாளர் லக்சிறி விக்ரமசிங்க, கிழக்கு மாகாண உடற்கல்வித்துறை பணிப்பாளர் ரோஹினி புவனசிங்கம், அம்பாறை மாவட்ட விளையாட்டு உத்தியோகத்தர் ஏ.எம்.றிஸாத், தென் கிழக்கு பல்கலைக்கழக உடற்கல்வித்துறை போதனாசிரியர் எஸ்.எம்.பி.அஸாத், மூதூர் அல் ஹிலால் வித்தியாலய உடற்கல்வி ஆசிரியர் ஏ.எச்.யஸீர் அறபாத், இறக்காமல் ஹாபி பாஸா வித்தியாலய உடற்கல்வி ஆசிரியர் கே.எல்.எம்.சக்கி ஆகியோர் உதவி தலைவர்களாகவும் நிந்தவூர் அல்-அஸ்றக் தேசிய பாடசாலை உடற்பயிற்சி ஆசிரியரும் தேசிய ஒலிம்பிக் குழுவின் உறுப்பினருமான அலியார் பைஸர் பொதுச் செயலாளராகவும் தென்கிழக்கு பல்கலைக்கழக தொழில்நுட்பவியல் பீட மாபா முதியசிங்க, திலான் நீலருவன் ஆகியோர் உதவி செயலாளர்களாகவும், பொத்துவில் அல்-கலாம் வித்தியாலய உடற்கல்வி ஆசிரியர் எம்.எச்.எம்.முஸ்பிக் நிர்வாக செயலாளராகவும் பாலமுனை மின்ஹாஜ் வித்தியாலய உடற்கல்வி ஆசிரியர் எம்.எச்.எம்.முஸ்பிக் பொருளாளராகவும் நிந்தவூர் அல்-அஸ்றக் தேசிய பாடசாலை உடற்கல்வி ஆசிரியர் எம்.ஐ.எம்.அஸாம் உதவிப் பொருளாளராகவும் கல்முனை ஸாஹிரா தேசியக் கல்லூரியின் உடற்கல்வி ஆசிரியர் எம்.எம்.றஜீப், பொறியியலாளர் எம்.ஐ.எம்.இம்தாத் ஆகியோர் கணக்கு பரிசோதகர்களாகவும் தெரிவு செய்யப்பட்டனர்.

போசகர்களாக இலங்கை றக்பி சம்மேளனத்தின் தலைவர் றிஸ்லி இல்யாஸ், ஓய்வுபெற்ற சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகரும் தேசிய றக்பி அணியின் முன்னாள் வீரருமான எம்.எம்.அப்துல் மஜீட் (SSP) ஆகியோரும், ஆலோசகர்களாக கிழக்கு மாகாண விளையாட்டுத்துறை பணிப்பாளர் என்.எம்.நௌபீஸ், கிழக்கு மாகாண கல்விப் பணிப்பாளர் திருமதி நகுலேஸ்வரி புள்ளநாயகம் ஆகியோரும், நிரந்தர உறுப்பினராக இலங்கை றக்பி சம்மேளனத்தின் உறுப்பினர் சமரத் பெர்னாண்டோ இவ்வமைப்பில் இடம்பெற்றுள்ளனர். கிழக்கு மாகாத்திற்கான றக்பி விளையாட்டுக்கான இணைப்பாளராக தேசிய ஒலிம்பிக் குழுவின் உறுப்பினர் அலியார் பைஸர் செயற்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# அலிக்கானின் ‘நெஞ்சில் பூத்த நெருப்பு’ தென்கிழக்கு பல்கலை உபவேந்தர் ரமீஸ் அபூபக்கரிடம் கையளிப்பு

(பொலிவேரியன் நிருபர்)

பல்துறைக்கலைஞர் என்.எம்.அலிக்கான் எழுதிய கன்னி கவிதைத்தொகுப்பான ‘நெஞ்சில் பூத்த நெருப்பு’ எனும் நூலினை தென்கிழக்குப் பல்கலைக்கழகத்தின் உபவேந்தர் பேராசிரியர் ரமீஸ் அபூபக்கரிடம் அவரது அலுவலகத்தில் வைத்து கையளித்தார்.

சமூகப் பிரச்சினைகளை எடுத்தியம்பி, அதனை சமூகத்துக்கு விழிப்புணர்வூட்டும் வகையில் இந்நூல் கவிதைகளாக தொகுக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

பல்துறைக் கலைஞரான இவர், கிழக்கு மாகாணத்தின் சாய்ந்தமருது எனும் ஊரைப் பிறப்பிடமாகக்கொண்டவர்.

இவரது கலைத்துறைப் பயணம் பாடசாலை படிக்கும் காலத்தில் இருந்தே ஆரம்பமாகியுள்ளது. பாடசாலை காலத்தில் பேச்சு, கவிதைப் போட்டிகளில் கலந்து கொண்டு நிறைய பரிசில்களைப் பெற்றுள்ளதோடு, நாடகத்துறையிலும் நிறைய பயிற்சிகளைப் பெற்றுக் கொண்டு மாவட்ட, மாகாண, தேசிய ரீதியிலான நாடகப் போட்டிகளில் பங்குபற்றி பரிசில்களைப் பெற்றுள்ளார்.



கவிதை எழுதுவது முதல் பாடல் அபிநயம், நாடகம், பாடல் பாடுதல், கதை எழுதுதல், ஆய்வு செய்தல் என பல்துறைகளில் தற்போதும் ஈடுபட்டு வருகிறார்.


கடந்த 40 வருடகாலம் சுகாதாரத்துறையில் பணியாற்றியவேளை, வைத்தியசாலைகளில் நடைபெறும் கலை - இலக்கிய விழாக்கள், வைத்தியர்கள், தாதியர்களின் பிரியாவிடை நிகழ்வுகள், வைத்தியசாலையில் நடைபெறும் விசேட வைபவங்களில் கலந்துகொண்டு கவிபடித்தல், பாடுதல், அபிநயம் செய்தல், நாடகம் நடித்தல், ஒளி-ஒலி செய்தல் என கலை அனுபவத்தை நிறையவே பெற்றுக்கொண்டுள்ளார்.

இவரது கவிதை ஆற்றலைக் கௌரவித்து கவியுக நாயகன் எனும் விருதை 2012 இல் கல்முனை அஷ்ரப் ஞாபகார்த்த வைத்தியசாலை வழங்கி கௌரவித்தது.

அகில இன நல்லுறவு ஒன்றியத்தினால் 2018 இல் சாமஸ்ரீ பட்டமும், விருதும் வழங்கப்பட்டதுடன், லக்ஸ்டோ மீடியா நெட்வேர்க் நிறுவனத்தினால் 2018 ஏப்ரலில் கலைச்சுடர் விருதும், அல்-மீஸான் பௌண்டேஷன் ஸ்ரீலங்காவினால் அபிநய நாயகர் விருதும், 2019 இல் கல்முனை அஷ்ரப் ஞாபகார்த்த வைத்தியசாலையினால் சிறந்த கவிஞருக்குரிய பாராட்டும் கலாசார அலுவல்கள் திணைக்கள அனுசரணையில் சாய்ந்தமருது கலாசார பிரிவினரால் நடத்தப்பட்ட கவியரங்கில் கலந்துகொண்டு பாராட்டு சான்றிதழையும் பெற்றுள்ளார்.

2020 இல் மருதம் கலைக்கூடலினால் பல்துறை கலைஞர் விருதும், இலங்கை தமிழ் எழுத்தாளர் சங்கத்தினால் சமூக தீபம், சமூக ஜோதி, சமூகச் சுடர், கலைமுத்து, கலை தீபம் விருதும் வழங்கி கௌரவிக்கப்பட்டதுடன், 2020 இல் சாய்ந்தமருது பிரதேச செயலகத்தினால் கலைஞர் சுவதம் விருதும் இவருக்கு வழங்கப்பட்டன.

# மட்டக்களப்பில் கிராமிய விவாக, பிறப்பு, இறப்பு பதிவாளர்களுக்கு நியமனம் வழங்கிவைப்பு

(மட்டக்களப்பு நிருபர்)

மட்டக்களப்பு மாவட்டத்தில் மிக நீண்ட காலமாக வெற்றிடமாக காணப்பட்ட 07 பதிவாளர் பிரிவுகளுக்கான கிராமிய விவாக, பிறப்பு, இறப்பு மற்றும் முஸ்லிம் விவாக பதிவாளர்களுக்கான வெற்றிடங்களுக்கான பதிவாளர் நியமனங்களை வழங்கும் நிகழ்வு நேற்று (11) மட்டக்களப்பில் இடம்பெற்றது.

மட்டக்களப்பு மாவட்ட செயலக மாநாட்டு மண்டபத்தில் கிழக்கு மாகாண பிரதி பதிவாளர் நாயகம் வீ.திருவருள் தலைமையில் நடைபெற்ற நிகழ்விற்கு பிரதம அதிதியாக மட்டக்களப்பு மாவட்ட அரசாங்க அதிபர் கே.கருணாகரன் கலந்துகொண்டு சிறப்பித்ததுடன், பதிவாளர்களுக்கான நியமனக் கடிதங்களையும் வழங்கியிருந்தார்.

இந்நிகழ்விற்கு மட்டக்களப்பு மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் திருமதி நவரூபரஞ்ஜனி முகுந்தன், பிரதம கணக்காளர் திருமதி இந்திராவதி மோகன், மண்முனை மேற்கு வவுணதீவு பிரதேச செயலாளர் எஸ்.சுதாகர் உள்ளிட்ட பதிவாளர்கள், பதிவாளர்களின் உறவினர்கள் எனப் பலரும் கலந்துகொண்டிருந்தனர்.

இதன்போது மட்டக்களப்பு மாவட்டத்தின் வாழைச்சேனை, ஏறாவூர், வவுணதீவு, களுவாஞ்சிக்குடி மற்றும் காத்தான்குடி ஆகிய பிரதேச செயலக பிரிவுளுக்கான 07 பதிவாளர்களுக்கான நியமனங்களே இதன்போது வழங்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

# தேசிய கமசமக பிலிசந்தர வேலைத்திட்டத்தின் கீழ் கல்முனையில் வாழ்வாதார உதவிகள் வழங்கிவைப்பு

(சர்ஜுன் லாபீர்)

ஜனாதிபதியின் சபீட்சத்தின் நோக்கு எண்ணக்கருவின் கீழ் தேசிய “கமசமக பிலிசந்தர” வேலைத்திட்டத்தின்கீழ் முதற்தொகுதியாக தெரிவுசெய்யப்பட்ட பயனாளிகளுக்கு வாழ்வாதார உதவிகள் வழங்கும் நிகழ்வு கல்முனை பிரதேச செயலாளர் ஜே.லியாக்கத் அலி தலைமையில் நேற்று (11) பிரதேச செயலகத்தில் இடம்பெற்றது.

“கமசமக பிலிசந்தர” வேலைத்திட்டத்தின் கீழ் வரவு-செலவுத்திட்டம் 2022இற்கான நிதி ஒதுக்கீட்டின் மூலம் அபிவிருத்தியின் பயன்கள் விரைவாக மக்களுக்கு சென்றடையும் வகையில் கிராம மட்ட பிராந்திய அபிவிருத்திகளுக்கு முன்னுரிமை வழங்க அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

2022ஆம் ஆண்டுக்கான வரவு-செலவுத் திட்டத்தின் மூலம் செயற்படுத்தப்படுகின்ற “கிராமத்துடன் உரையாடல்” கிராமிய அபிவிருத்தி வேலைத்திட்டத்தின்கீழ் அபிவிருத்தி கருத்திட்ட முன்மொழிவுகளை செயற்படுத்தல் மற்றும் ஒருங்கிணைத்தல் என்பவற்றை பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக்களினூடாக முழு வேலைத்திட்டத்தையும் முன்னுரிமை அடிப்படையில் வேலைத்திட்டமாக செயற்படுத்தப்படுகின்றது.



மேலும் கிராமிய மட்ட உட்கட்டமைப்பு வசதிகள், வீதிகள் என்பவற்றை உடனடியாக சீரமைத்து பிராந்திய ரீதியிலான புத்தெழுச்சியை கட்டியெழுப்புவதும் இதன் முதன்மை நோக்கமாகும்.

இவ்வேலைத்திட்டத்தின்கீழ் நடைமுறைப்படுத்தப்படும் அபிவிருத்தி கருத்திட்டங்கள் பின்வரும் பிரிவுகளின் கீழ் செயற்படுத்தப்படவுள்ளன.

வாழ்வாதார அபிவிருத்தி - 40%, பொது உட்கட்டமைப்பு அபிவிருத்தி - 40%, சுற்றாடல் மற்றும் நிலையான அபிவிருத்தி - 10%, சமூக நலன் மற்றும் சமூக அபிவிருத்தி - 10% மேற்படி கமசமக பிலிசந்தர வேலைத்திட்டத்தின் கீழ் வாழ்வாதார உதவிகள் வழங்கும் நிகழ்வில் கணக்காளர் யூ.எல்.ஜவாஹிர், உதவித் திட்டமிடல் பணிப்பாளர் எம்.ஜௌபர், நாடாளுமன்ற உறுப்பினர் எச்.எம்.எம்.ஹரீஸின் பிரத்தியேக செயலாளர் நௌபர் ஏ பாவா, அபிவிருத்தி ஒருங்கிணைப்பாளர் கே.எல்.யாஸின் பாவா, சிரேஷ்ட அபிவிருத்தி உத்தியோகத்தர் எஸ்.எம்.எம்.நியாஸ், எம்.எஸ்.ரியாஸ் மற்றும் பொருளாதார அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் எனப் பலரும் கலந்து சிறப்பித்தனர்.

# மட்டு. மாவட்டத்திலிருந்து தேசிய, சர்வதேச போட்டிகளில் பங்குபற்றியோரின் தகவல்களைத் திரட்டுவதற்கு நடவடிக்கை

(கல்லடி நிருபர்)

மட்டக்களப்பு மாவட்டத்திலிருந்து தேசிய மற்றும் சர்வதேச போட்டிகளில் பங்குபற்றி வெற்றியீட்டியவர்களின் தகவல்களை மட்டக்களப்பு மாவட்ட செயலகம் கோரியுள்ளது.

இதனடிப்படையில் மட்டக்களப்பு மாவட்ட அரசாங்க அதிபரும், மாவட்ட செயலாளருமான கணபதிப்பிள்ளை கருணாகரனின் ஆலோசனைக்கமைய மேற்படி விளையாட்டு வீர, வீராங்கனைகளின் விபரங்கள், 1990ஆம் ஆண்டிலிருந்து சர்வதேச மட்டத்தில் இலங்கை விளையாட்டுத்துறை அமைச்சின் அனுமதியுடன் பங்குபற்றிய போட்டிகள் அல்லது இலங்கை தேசிய அணி சார்பாக பங்குபற்றிய (தனி அல்லது குழு) விளையாட்டு நிகழ்வுகளில் இலங்கை அணி சார்பாக பங்கு பற்றியவர்கள் மற்றும் வெற்றியீட்டியவர்கள், 1990ஆம் ஆண்டிலிருந்து இலங்கை விளையாட்டுத்துறை அமைச்சினால் நடத்தப்பட்ட தேசிய விளையாட்டு விழாக்களில் முறையே முதலாம், இரண்டாம், மூன்றாம் இடங்களைப் பெற்றுக்கொண்டவர்கள் எனும் பிரிவுகளின் அடிப்படையில் ஆவணப்படுத்தும் நோக்கிலேயே விபரங்கள் கோரப்பட்டுள்ளன.

மேற்படி விபரங்களை உரிய சான்றிதழ்களின் பிரதிகளுடன் எதிர்வரும் 25ஆம் திகதிக்கு முன்பாக தங்களது விளையாட்டுப் பிரிவு உத்தியோகத்தர் ஊடாக பிரதேச செயலகங்களிலோ அல்லது மாவட்ட செயலகங்களிலோ நேரடியாக அல்லது தபால் மூலமாக ஒப்படைக்குமாறு தகமைகளைக் கொண்டுள்ள விளையாட்டு வீர, வீராங்கனைகளிடம் மாவட்ட செயலகம் கேட்டுள்ளது.

# அம்பாறை மாவட்டத்தில் எரிபொருள் இன்மையால் வயல்களில் சிறுபோக உழவு வேலைகள் தாமதம்

(நிந்தவூர் நிருபர்)

நாட்டின் நெல் உற்பத்தியில் பெரும் பங்களிப்பை வழங்கும் அம்பாறை மாவட்டத்தின் நிந்தவூர் விவசாய விரிவாக்கல் பிரிவு மற்றும் சம்மாந்துறை விவசாய விரிவாக்கல் பிரிவிற்குட்பட்ட ஆயிரக் கணக்கான ஏக்கர் வயல் நிலங்கள் நீர்ப்பாசன வசதியிருந்தும் எரிபொருள் தட்டுப்பாட்டினால் உழ முடியாத நிலைக்கு விவசாயிகள் தள்ளப்பட்டுள்ளனர்.

பொத்துவில், அக்கரைப்பற்று, வாங்காமம் போன்ற இடங்களில் விதைத்து பயிராக காட்சிதரும் வேளையில் ஏனைய இடங்களிலுள்ள வயல் நிலங்கள் உழுவப்படாமல் தரிசாக காணப்படுகின்றன.

நீர்ப்பாசனத் திணைக்களம் அம்பாறை சேனநாயக்க சமுத்திரத்திலிருந்து வழங்கும் நீரைக்கொண்டு சிறுபோக நெற்பயிர்ச்செய்கையில் ஈடுபடும் விவசாயிகள் காலதாமதமாவதால் நெல் அறுவடையின்போது பலவிதமான பிரச்சினைகளுக்கு முகங்கொடுக்க வேண்டியுள்ளது.

உழவு இயந்திரங்கள் எரிபொருள் இல்லாமல் பல நாட்களாக காத்திருப்பதனால் எரிபொருளை பெற்றுக்கொள்ளும் விவசாயிகளின் வயல் நிலங்கள் மட்டும் தற்போது உழவப்பட்டு விதைப்பு நடவடிக்கைகள் இடம்பெற்று வருகின்றன.

தற்போது அம்பாறை மாவட்டத்தின் பல இடங்களிலும் பரவலாக மழை பெய்வதால் வயல்களை உழுவதற்கு மிகவும் வசதியாக இருக்குமெனவும் காலம் தாமதித்தால் சிறுபோக வேளாண்மை செய்கையை கைவிடவேண்டிய நிலைமை ஏற்படும் என விவசாயிகள் மிகவும் கவலை தெரிவிக்கின்றனர்.

# வாச்சிக்குடா பஞ்சமுக ஆஞ்சநேயர் ஆலய ஸ்ரீ இராமநவமி 108 சங்காபிஷேக இலட்சார்ச்சனை





(வி.சுகிர்தகுமார்)

ஐந்து அடி கற்சிலை அமைந்துள்ளதும் பல நூறு வருடங்கள் பழமை வாய்ந்த மருத மரத்தை தல விருட்சமாகவும் கொண்ட அக்கரைப்பற்று வாச்சிக்குடா ஸ்ரீ இராம பக்த பஞ்சமுக ஆஞ்சநேயர் தேவஸ்தானத்தின் ஸ்ரீ இராமநவமி 108 சத அஷ்டோத்திர கல சங்காபிஷேக இலட்சார்ச்சனை நிகழ்வானது நேற்று முன்தினம் (10) இடம்பெற்றது.

ஐந்து முகங்களுடன் ஐந்தடி உயரத்தில் திருக்காட்சி தரும் ஸ்ரீ இராம பக்த பஞ்சமுக ஆஞ்சநேயரின் கற்சிலை அமைந்துள்ள ஆலயங்களில் முக்கியத்துவம் மிக்கதான இவ்வாலயத்தின் ஸ்ரீ இராமநவமி விசேட பூஜைகளானது கடந்த 01ஆம் திகதி ஆரம்பமாகி ஸ்ரீ இராமநவமி தினமான 10ஆம் திகதி இடம்பெற்ற 108 சத அஷ்டோத்திர கலச சங்காபிஷேகத்துடன நிறைவுற்றது.

அதிசயமிக்க இப்பெருமைமிகு ஆலயமானது குருதேவர் காயத்திரி சித்தர் ஆர்.கே.முருகேசு சுவாமிகளின் பரிபூரண ஆசீர்வாதத்துடன் அமைக்கப்பட்டதுடன், மலேசியாவைச் சேர்ந்த ராம்ஜி சுவாமிகளின் வழிகாட்டலுடன் நடைபெற்று வருகின்றது.

கடந்த 01ஆம் திகதி ஆரம்பமான ஸ்ரீ இராமநவமியை முன்னிட்டு நேற்று முன்தினம் வரையான 10 நாட்களும் காலை மாலை விசேட பூஜைகளும் நடைபெற்று வந்தன.

நேற்று முன்தினம் காலை குருபூஜை நடைபெற்றதுடன், ஆஞ்சநேயப் பெருமானுக்கு பாலாபிஷேகமும் நடைபெற்று விசேட பூஜைகளும் நடைபெற்றன.

தொடர்ந்து விசேட யாகபூஜைகள் ஆரம்பமாவதுடன், யாகபூஜையில் அடியவர்களினால் ஆகுதிகள் சொரியப்பட்டன. பின்னர் பிரதான கும்ப வெளிவீதி உலாவும் இடம்பெற்றது.

வெளிவீதி உலாவாக எடுத்துவரப்படும் பிரதான கும்பம் ஆஞ்சநேய சுவாமி மீது சொரியப்பட்டு 108 ஆஞ்சநேய மந்திர உச்சாடணமும் அலங்கார பூஜையும் நடைபெற்றதன் பின்னர் பூஜைகள் நிறைவுற்றது.

காயத்திரி சித்தர் ஆர்.கே.முருகேசு சுவாமிகளின் ஆசீர்வாதத்தோடு ஆலய பரிபாலகர் நல்லதம்பி கந்தசாமி தலைமையில் இடம்பெற்ற கிரியைகள் யாவற்றையும் கிரியாகலாநிதி வித்தியாசாதகர் வாமதேவ சிவாச்சாரியார் சிவஸ்ரீ புண்ணிய கிருஸ்ணகுமாரக் குருக்கள் மற்றும் ஆலய பிரதம குரு சிவஸ்ரீ த.குகனேஸ்வர சர்மா ஆகியோர் நடத்திவைத்தனர்.

# வந்தாறுமூலை பொதுச்சந்தை வளாகத்தில் வணிக நிலையம் அமைக்க அடிக்கல் நாட்டிவைப்பு





(வாழைச்சேனை நிருபர்)

மட்டக்களப்பு, ஏறாவூர்பற்று பிரதேச சபையால் வந்தாறுமூலை பொதுச் சந்தை வளாகத்தில் வணிக நிலையம் அமைப்பதற்கான அடிக்கல் நாட்டும் நிகழ்வு அண்மையில் நடைபெற்றது.

உள்ளூர் ஆதரவு அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் இத்திட்டம் முன்னெடுக்கப்பட்டுள்ளது.

இத்திட்டத்தின் மூலம் பிரதேசத்தில் வணிகத் தொழிலில் ஈடுபடுவோர் அதிகளவு நன்மை பயக்க வாய்ப்புள்ளது.

ஏறாவூர்ப்பற்று பிரதேச சபை தவிசாளர் சி.சர்வானந்தம், பிரதேச சபை உறுப்பினர்கள் மற்றும் பிரதேச ஊடகவியலாளர் இ.தேவப்பிரதீபன் ஆகியோர் இதற்கான அடிக்கல்லினை வைபவ ரீதியாக நாட்டி வைத்தனர்.

# அக்கரைப்பற்று ஆதார வைத்தியசாலைக்கு சுகாதார அமைச்சினால் திடீர் களவிஜயம்





(அட்டாளைச்சேனை மத்திய நிருபர்)

அக்கரைப்பற்று ஆதார வைத்தியசாலையின் சுகாதார பராமரிப்பு, தர முகாமைத்துவ செயற்பாடுகளை பகுப்பாய்வு செய்வதற்காக சுகாதார அமைச்சினது சுகாதார பராமரிப்பு, பாதுகாப்பு மற்றும் தரம் என்பனவற்றிக்கான மத்திய இயக்குனரகத்தினால் உத்தியோகபூர்வ விஜயம் மேற்கொள்ளப்பட்டிருந்தது.

வைத்தியசாலையின் வைத்திய அத்தியட்சகர் எம்.எச்.எம்.அஷாத் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில், சுகாதார அமைச்சின் சுகாதார தர முகாமைத்துவ நிபுணர் டாக்டர் நிமல் கரந்த கொடவினால் வைத்தியசாலையின் சுகாதார பராமரிப்பு மற்றும் தரம் பாதுகாப்புப் பிரிவினது வழிகாட்டலினூடாக இங்கு சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்ட நோயாளர்களுக்காக வழங்கப்பட்ட சுகாதார சேவைகள் மற்றும் வைத்தியசாலை சுகாதாரப் பணியாளர்களுக்காக வழங்கப்பட்ட நலனோம்பல் செயற்பாடுகள் தொடர்பான தரவுகள் சேகரிப்பு, பகுப்பாய்வு மற்றும் ஆவணப்படுத்தல் செயற்பாடுகள் தொடர்பாகவும் பரிசீலனைகள் மேற்கொள்ளப்பட்டதோடு, விடுதிகள் மற்றும் பிரிவுகளுக்குப் பொறுப்பான தாதிய மற்றும் ஏனைய பொறுப்பு உத்தியோகத்தர்களுக்குமான தெளிவூட்டல் கருத்தரங்கு பயிற்சி செயலமர்வுகளும் நடைபெற்றதோடு, முக்கிய பல பிரிவுகளுக்கும் நேரடி கள விஜயமும் மேற்கொள்ளப்பட்டது.

இதன்போது வைத்தியசாலையின் தர முகாமைத்துவப் பிரிவினது பொறுப்பு வைத்தியர் எம்.எம்.தாஸிம், திட்டமிடல் பிரிவிற்கான பொறுப்பு வைத்தியர் ஆகில் அகமட் சரீப்டீன், அரச மருத்துவ சங்கத்தின் வைத்தியசாலைக்கான தலைவர் சியாத் எம் இஸ்மாயில், பொது சுகாதாரப் பிரிவினது பொறுப்பு வைத்தியர் எம்.ஏ.எம்.முபாரிஸ் மற்றும் தாதிய பரிபாலகர் பி.ரி.நௌபர் உள்ளிட்ட பலரும் கலந்துகொண்டனர்.

# வெல்லாவெளி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பிரதேசங்களில் தொடர் திருட்டுச் சம்பவங்கள்

## பொதுமக்கள் அச்சத்தில்

(வீரமுனை நிருபர்)

வெல்லாவெளி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட தமிழ்க் கிராமங்களில் சமீபகாலமாக தொடரும் திருட்டுச் சம்பவங்களால் பொதுமக்கள் அச்சமடைந்துள்ளதுடன், உடைமைகளைப் பறிகொடுத்தோர் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடுகள் செய்துள்ள போதிலும் எத்தகைய நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படவில்லையெனவும் எவரும் கைதுசெய்யப்படவில்லையெனவும் பொதுமக்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.

போரதீவுப்பற்று பிரதேச செயலக வெல்லாவெளி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட ஆணைகட்டியவெளி, சின்னவத்தை, மாலையர்கட்டு, வெல்லாவெளி, பாலையடிவட்டை ஆகிய பிரதேசங்களிலுள்ள வீடுகள் மற்றும் கடைகளை உடைத்து குறிப்பாக இரவுவேளைகளில் ஜன்னல் மற்றும் கதவு வழியாக உள்நுழையும் திருடர்கள் பணம், நகை உள்ளிட்ட பெறுமதியான பொருட்களை களவாடிச் சென்றுள்ளதாக தெரியவருகிறது.

திருட்டுச் சம்பவங்கள் தொடர்பில் பாதிக்கப்பட்டவர்களினால் பொலிஸ் நிலையத்தில் முறையிடப்பட்டபோதிலும் இதுவரை எவரும் கைதுசெய்யப்படவில்லையென பொதுமக்கள் விரக்தியுற்ற நிலையில் கவலையுடன் அங்கலாய்க்கின்றனர்.

தொடர்ச்சியாக இவ்வாறான கொள்ளை திருட்டுச் சம்பவங்கள் தமிழ்க் கிராமங்களில் அரங்கேறி வருவதனால் பொலிஸார் திருடர்களை கைதுசெய்ய விரைந்து நடவடிக்கை எடுக்கவேண்டுமென பொதுமக்கள் கோரிக்கை விடுக்கின்றனர்.

கிழக்கு செய்திகள்
eastthamilan@gmail.com

# கிண்ணியாவில் மூன்றாவது சமுர்த்தி வங்கி திறந்துவைப்பு





(கிண்ணியா நிருபர்)

தூர இடங்களிலிருந்து கிண்ணியாவுக்கு சமுர்த்தி உதவிகளை பெற்றுக்கொள்வதற்காக வருகின்ற சமுர்த்தி பயனாளிகளின் நன்மை கருதி ஒன்பது கிராம உத்தியோகத்தர் பிரிவுகளை உள்ளடக்கியதாக சூரங்கள் கிராம உத்தியோகத்தர் பிரிவில் சமுர்த்தி வங்கி திறந்துவைக்கப்பட்டது.

கிண்ணியா பிரதேச செயலாளர் எம்.எச்.முஹம்மது கனி தலைமையில் மாவட்ட சமுர்த்தி பணிப்பாளர் எஸ்.சுதீஷ்னரினால் நேற்று முன்தினம் (10) மாலை திறந்துவைக்கப்பட்டது. மக்களின் சேவைகளை விரைவுபடுத்தவும் இலகுவான சேவை வழங்கலை மேற்கொள்ளும் பொருட்டும் இந்த சமுர்த்தி வங்கிக் கிளை திறந்து வைக்கப்பட்டது.

இதில் பிரதித் திட்டமிடல் பணிப்பாளர் ஐ.முஜீப், சமுர்த்தி தலைமை முகாமையாளர் ஏ.முஹ்சின், வங்கி முகாமையாளர்கள், சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்கள், சமுர்த்தி பயனாளிகள் எனப் பலர் கலந்துகொண்டனர்.

# ஏறாவூர் பிரதேசத்தில் 100 குடும்பங்களுக்கு உலருணவுப் பொருட்கள் வழங்கிவைப்பு





(பொத்துவில் நிருபர்)

கிழக்கு மாகாண முன்னாள் சுகாதார அமைச்சர் எம்.எஸ்.சுபையிரின் முயற்சியினால் ஏறாவூர் பிரதேசத்திலுள்ள பள்ளிவாசல்களில் கடமையாற்றும் உலமாக்கள், முஅத்தின்கள் உள்ளிட்ட 100 குடும்பங்களுக்கு உலருணவுப் பொருட்கள் வழங்கப்பட்டன.

குறித்த உலருணவுப் பொருட்களை கையளிக்கும் நிகழ்வு முஹம்மதிய்யா அரபுக் கலாசாலையில் அல்-ஹாபிழ் கபீர் இஹ்ஸானி தலைமையில் இடம்பெற்றது.

இந்நிகழ்வில் முன்னாள் சுகாதார அமைச்சர் எம்.எஸ்.சுபையிர், அஸிஸா பவுண்டேசன் பணிப்பாளரும், ஹஸன் மௌலவியின் புதல்வருமான ஸாதிக் ஹஸன், ஏறாவூர் நகர சபை உறுப்பினர் எம்.எஸ்.ஏ.கபூர்தீன் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் மட்டக்களப்பு மாவட்ட அமைப்பாளர் எஸ்.எம்.அறூஸ் உள்ளிட்ட பலர் கலந்துகொண்டனர்.

ஹஸன் மௌலவி நற்பணி மன்றத்தின் பணிப்பாளர் ஸாதிக் ஹஸனிடம் கிழக்கு மாகாண முன்னாள் அமைச்சர் சுபையிர் விடுத்த வேண்டுகோளுக்கிணங்க அஸிஸா பவுண்டேசன் ஊடாக மேற்படி உலருணவுப் பொருட்கள் வழங்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

# அரச அலுவலகங்களில் பணியாற்றுகின்ற மத்திய தர உத்தியோகத்தர்களுக்கான இரண்டாம் மொழி பயிற்சி





(கல்குடா நிருபர்)

அரச சேவைகள் மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சின் ஏற்பாட்டில் அரசகரும மொழிகள் திணைக்களத்தினால் அரச அலுவலகங்களில் பணியாற்றுகின்ற மத்திய தர உத்தியோகத்தர்களுக்கான 150 மணித்தியாலங்களைக்கொண்ட 25 நாள் தமிழ் பயிற்சி வகுப்பின் இறுதி நாள் நிகழ்வானது பொலன்னறுவை அரலகங்வில வியாய தேசிய பாடசாலையின் பிரதான மண்டபத்தில் இடம்பெற்றது.

திம்பு/அரல/விலயாய ஆரம்ப பாடசாலையின் முதல்வர் யூ.கே.ஜீ. கித் ஸ்ரீ அபேகுணரத்ன தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வின் கந்தளாய் கல்வி வலய பிரதிக் கல்விப் பணிப்பாளர் ஏ.ஜே.மர்சூக், கந்தளாய் கல்வி வலய பிரதிக் கல்விப் பணிப்பாளர் ஏ.சீ.எம்.தௌபீக், அரசகரும மொழிகள் திணைக்களத்தின் பொலன்னறுவை மாவட்ட இணைப்பாளர் டபிள்யூ.தரங்கனி ரசிகா, பொலன்னறுவை மாவட்ட ஒன்றிணைந்த அபிவிருத்தி உத்தியோகத்தர் பீ.ஏ.டீ.சுஜீவனி பிடிகல மற்றும் அரசகரும மொழிகள் திணைக்களத்தின் போதனாசிரியர்கள் உள்ளிட்ட அரச உயரதிகாரிகள் மற்றும் உத்தியோகத்தர்கள் எனப் பலரும் கலந்துகொண்டிருந்தனர்.

தமிழ்மொழியில் தேசிய கீதம் இசைக்கப்பட்டதனைத் தொடர்ந்து மங்கள விளக்கேற்றலுடன் ஆரம்பமாகிய நிகழ்வில் அதிதிகளின் சிறப்புரைகள் இடம்பெற்றதுடன், பயிற்சி வகுப்பில் கலந்துகொண்ட ஆசிரியர் களினால் கண்கவர் கலை, கலாசார நிகழ்வுகள் தமிழ்மொழியில் நிகழ்த்தப்பட்டன.

இப்பயிற்சி வகுப்பின் மூலம் ஆசிரியர்கள் தமிழ் மொழி ஆற்றலை விருத்தி செய்துகொள்வதுடன், தங்களது கற்றல் கற்பித்தல் செயற்பாடுகளையும் இலகுபடுத்திக்கொள்ள வழிவகுக்கின்றது.

அரசகரும மொழிகள் திணைக்களத்தின் சிரேஷ்ட போதனாசிரியர் எம்.எம்.செய்னுதீனால் இப்பாடநெறி நடத்தப்பட்டதோடு, தேசிய இன நல்லிணக்கத்தை ஏற்படுத்தல், தமிழ் மொழி மூலம் வேலைகளை திறம்பட மேற்கொள்தல் எனும் நோக்கத்துடனேயே இப்பயிற்சி வகுப்புகள் நடைபெற்று வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

# உலக செய்திகள்

## 48ஆவது நாளகவும் தொடரும் தாக்குதல்



# கார்கீவ் - மரியுபோலில் தப்பிச் செல்லும் அப்பாவி மக்கள் மீது ரஷ்யப் படை தாக்குதல்

## • கீவ் பகுதியிலிருந்து 1,200 சடலங்கள் மீட்பு
## • டினிப்ரோவின் விமான நிலையம் அழிப்பு

கார்கீவ், மரியுபோல் நகரில் தொடர்ந்து பொதுமக்களை குறிவைத்து ரஷ்யப் படையினர் தாக்குதல் நடத்தி வருகின்றனர்.

உக்ரைனில் ரஷ்யப் படையினர் தொடுத்துள்ள போர் இன்று 48ஆவது நாளாகவும் தொடர்கிறது.

**கீவ்வில் 1,200 சடலங்கள் கண்டெடுப்பு**

உக்ரைனின் தலைநகர் கீவ் பகுதியிலிருந்து 1,200 சடலங்கள் கண்டெடுக்கப்பட்டுள்ளதாக உக்ரைன் தரப்பில் தகவல் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ரஷ்ய தாக்குதலால் உக்ரைனின் பெரும்பாலான நகர்ப் பகுதிகள் அழிக்கப்பட்டுள்ளன. ரஷ்யா தரப்பிலும் ஆயிரக்கணக்கில் வீரர்கள் உயிரிழந்துள்ளனர்.

கடந்த வாரம் உக்ரைனின் கீவ் அருகே புச்சா பகுதியிலிருந்து 410 சடலங்கள் கண்டெடுக்கப்பட்டன. இது உலக நாடுகளிடையே அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது. உக்ரைன் மக்கள் ரஷ்ய வீரர்களால் துன்புறுத்திக் கொல்லப்பட்டமை அதில் தெரியவந்தது.

இந்நிலையில், கீவ் மற்றும் அதனைச் சுற்றியுள்ள பகுதியிலிருந்து 1,222 உடல்கள் கண்டெடுக்கப்பட்டுள்ளதாக அந்நாட்டின் அரச தலைமை வழக்கறிஞர் இரினா வெனெடிக்டோவா தெரிவித்துள்ளார். மேலும் புதை சாக்கடையிலிருந்து இரண்டு சடலங்கள் எடுக்கப்பட்டதாகவும் அவர் தெரிவித்தார்.

அதேநேரத்தில் உக்ரைனில் இதுவரை 1,793 பேர் உயிரிழந்துள்ளதாகவும் 2,439 பேர் காயமடைந்துள்ளதாகவும் ஐ.நா. தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

**உக்ரைனின் விமான நிலையம் ரஷ்யப் படைகளால் அழிப்பு**

உக்ரைன் மத்திய நகரமான டினிப்ரோவின் விமான நிலையத்தை ரஷ்யப் படைகள் குண்டுவீசித் தாக்கி முற்றிலுமாக அழித்து விட்டதாக உக்ரைன் தெரிவித்துள்ளது.

உக்ரைன் மீதான ரஷ்யாவின் இராணுவ நடவடிக்கை ஒரு மாதத்திற்கும் மேலாக நடைபெற்றுவரும் நிலையில், உக்ரைனின் பல்வேறு நகரங்களில் ரஷ்யப் படைகள் தொடர் தாக்குதல் நடத்தி வருகின்றன.

இந்நிலையில், லுஹான்ஸ்க் மற்றும் டினிப்ரோ பகுதியில் ரஷ்யப் படைகள் நடத்திய குண்டுவீச்சு தாக்குதலில் பயன்படுத்த முடியாதளவுக்கு விமான நிலையம் உருக்குலைந்துள்ளது.

இந்தத் தாக்குதலில் ஊழியர்கள் 6 பேர் காயமடைந்த நிலையில், தீயை அணைக்கும் பணி நடைபெற்றுவருவதாக அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

இதேவேளை, உக்ரைனின் தெற்கு பகுதி நகரான மைகோலைவ் மீது ரஷ்யப் படைகள் மிகப்பெரிய குண்டுவெடிப்புத் தாக்குதல் நிகழ்த்தியுள்ளன. இதனால் பொதுமக்கள் அச்சமடைந்துள்ளனர்.

**45 இலட்சம் பேர் அண்டைநாடுகளில் தஞ்சம்**

போரால் இதுவரை 45 இலட்சத்துக்கும் அதிகமானோர் அண்டைநாடுகளில் அகதிகளாக தஞ்சமடைந்துள்ளனர். இவர்களில் 26 இலட்சம் பேர் அண்டைநாடான போலந்துக்கும், 7 இலட்சம் பேர் ருமேனியாவுக்கும் சென்றுள்ளனர். 65 இலட்சத்துக்கும் அதிகமானோர் உள்நாட்டுக்குள்ளேயே இடம்பெயர்ந்துள்ளனர்.







இதற்கிடையே கிழக்கு உக்ரைனின் டான்பாஸ் பிராந்தியம் முழுவதையும் தன் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவருவதற்கான முயற்சியில் ரஷ்யா இறங்கியுள்ளது. உக்ரைனின் வேலிகீ புர்லக் வழியாக டான்பாஸ் பிராந்தியத்தை நோக்கி ரஷ்ய போர் வாகனங்கள் 13 கிலோமீற்றர் தொலைவுக்கு தொடர்ந்து செல்கின்ற காட்சியை மேக்சார் செயற்கைகோள் படங்கள் காட்டுவதாக ஊடக தகவல்கள் தெரிவிக்கின்றன.

மேலும், கிழக்கு உக்ரைனின் கிரமடோர்ஸ்க் நகரிலுள்ள ரயில் நிலையத்தின் மீது ரஷ்யப் படையினர் மேற்கொண்ட ரொக்கெட் குண்டு வீசி தாக்குதலில் அந்நகரை விட்டு வெளியேற, ரயில் நிலையத்தில் காத்திருந்த 5 குழந்தைகள் உட்பட 52 பேர் பலியாயினர். இது ரஷ்யாவின் கொடூரமான போர்க்குற்றம் என உக்ரைனும், உலக நாடுகளும் கண்டனம் தெரிவித்தன.

ஆனாலும், ரஷ்யப் படைகள் தொடர்ந்து பொதுமக்களை குறிவைத்து தாக்குதல் நடத்தி வருகின்றன. நேற்றுமுன்தினம் கார்கீவ், மரியுபோல் மற்றும் கிழக்கு உக்ரைன் பகுதிகளில் குடியிருப்புகளை குறிவைத்து தாக்கின. கார்கிவ் டெர்ஹாக்கி நகரில் ரஷ்ய வீரர்கள் நடத்திய தாக்குதலில் 2 பொதுமக்கள் கொல்லப்பட்டனர். இந்நகரில் 66 சிறிய ரக பீரங்கிக் குண்டுகள் வீசப்பட்டதாக குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது. இதேபோல், போரில் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ள மரியுபோல் நகரில் சிக்கியுள்ளவர்கள் வெளியேறிக்கொண்டிருக்கும் மனிதநேய வழித்தடங்களிலும் ரஷ்யப் படையினர் குண்டுவீசியுள்ளனர்.

இதனால், இவ்வழித்தடம் வழியாக மக்களை வெளியேற முடியாத நிலை ஏற்பட்டுள்ளதாக உக்ரைன் இராணுவம் தெரிவித்துள்ளது. தற்போது மரியுபோலில் சுமார் ஒரு இலட்சம் பேர் வரை சிக்கியுள்ளனர். இதேபோல் கிழக்கு உக்ரைனின் டொனெஸ்ட்க் பிராந்தியத்தின் வுக்லேடர், நோவோமிகைலோவ்கா நகரங்களில் குடியிருப்புகள் மீது வீசப்பட்ட குண்டுகள் வெடித்து, 5 பொதுமக்கள் பலியாகினர்.

கிழக்கு உக்ரைனில் ரயில் நிலையத்தின் மீதான ரொக்கெட் குண்டுவீச்சுக்குப் பின்னர், ரயில் மூலமாக மக்கள் வெளியேற அஞ்சுகின்றனர். இதனால் அதிகப்படியானோர் கார்களில் செல்கின்றனர். அதேசமயம், கார்கீவ்வின் கிழக்கு பகுதியில் ரஷ்ய இராணுவத்தின் பீரங்கிகள் சுமார் 13 கிலோமீற்றர் தூரத்திற்கு அணிவகுத்து நிறுத்தப்பட்டுள்ள செயற்கைகோள் புகைப்படங்களும் வெளியாகியுள்ளன.

**பொரிஸ் ஆயுத உதவி**

உக்ரைனின் தலைநகர் கீவ்வுக்கு சென்றிருந்த பிரித்தானிய பிரதமர் பொரிஸ் ஜோன்சன், அங்கு உக்ரைன் ஜனாதிபதி வொலோடிமிர் ஸெலென்ஸ்கியை சந்தித்து, கீவ் நகரில் போரால் பாதிக்கப்பட்ட பகுதிகளுக்கு நேரில் சென்று பார்வையிட்டார். இப்பயணத்தில் பொரிஸ் ஜோன்சன், உக்ரைனுக்கு போரில் உதவ 120 கவச வாகனங்களையும், அதிநவீன போர்க்கப்பல் எதிர்ப்பு ஏவுகணை அமைப்பையும், ரூ.1000 கோடி மதிப்பிலான உயர்ரக இராணுவ உபகரணங்களையும் வழங்குவதாக உறுதியளித்துள்ளார்.

மேலும், உலக வங்கியிலிருந்து கூடுதலாக ரூ. 3,750 கோடி கடனையும் பெற்றுத் தருவதாக ஸெலென்ஸ்கியிடம் தெரிவித்துள்ளார்.

## வட கொரிய ஜனாதிபதியாக கிம் பதவியேற்று 10 ஆண்டுகள் நிறைவு



வட கொரிய ஜனாதிபதியாக கிம் ஜோங் உன் பதவியேற்று 10 ஆண்டுகள் நிறைவடைந்ததை முன்னிட்டு நடைபெற்ற கட்சியின் தேசிய கூட்டத்தில் அவரது உருவப்படம் திறந்துவைக்கப்பட்டது.

அப்போது பேசிய முக்கிய அதிகாரி ஒருவர், வட கொரியாவின் அணுசக்தி திட்டத்தை கிம் ஜோங் உன் வெற்றிகரமாக நிறைவேற்றிவிட்டதாகத் தெரிவித்தார்.

இதுவரை வட கொரியா நிகழ்த்திய 6 அணுஆயுத சோதனைகளில் 4 சோதனைகள் கிம் ஜோங் உன்-னின் ஆட்சியில் நடத்தப்பட்டுள்ளன. மேலும் ஏராளமான ஏவுகணை சோதனைகளும் அண்மையில் நடைபெற்றதால் கொரிய தீபகற்பத்தில் பதற்றம் அதிகரித்துள்ளது.

## அலாஸ்கா மலைத்தொடரில் வானிலிருந்து வீழ்ந்த மர்மப்பொருள்



அமெரிக்கா அலாஸ்கா மலைப் பகுதியில், வானிலிருந்து நீண்ட குழாய் போன்ற மர்மப் பொருள் விழும் வீடியோ இணையத்தில் வேகமாக பரவி வருகிறது.

நீண்ட குழாய் போன்று மேகக் கூட்டத்திற்கு நடுவே காட்சியளிக்கும் மர்மப்பொருள் கொஞ்சம் கொஞ்சமாக மலைத்தொடரின் மீது விழுவதுபோல் வீடியோ வெளியாகியுள்ளது.

# பாக். புதிய பிரதமராக ஷெபாஸ் ஷெரீப் தெரிவு









பாகிஸ்தானின் புதிய பிரதமராக நவாஸ் ஷெரீப்பின் சகோதரரான ஷெபாஸ் ஷெரீப் தெரிவுசெய்யப்பட்டுள்ளார்.

பிலாவல் பூட்டோ புதிய வெளியுறவு அமைச்சராக பதவியேற்கவுள்ளார். இதற்காக பாகிஸ்தானின் தேசிய நாடாளுமன்றம் நேற்று பிற்பகல் 2 மணிக்குக் கூட்டப்பட்டுள்ளது.

இம்ரான் கான் தலைமையிலான அரசு மீது எதிர்க்கட்சியினர் கொண்டுவந்த நம்பிக்கையில்லாத் தீர்மானம் வெற்றி பெற்றதையடுத்து இம்ரான் கான் அரசு கவிழ்ந்தது. இந்நிலையில், புதிய பிரதமர் நேற்று முறைப்படி தெரிவுசெய்யப்பட்டுள்ளார்.

பாகிஸ்தான் மக்கள் கட்சியைச் சேர்ந்த பிலாவல் பூட்டோ வெளியுறவு அமைச்சராக தெரிவுசெய்யப்பட்டுள்ளார். ஷெபாஸ் ஷெரீப்பை பிரதமராகத் தெரிவுசெய்தால் அதிகளவில் இராஜினாமா செய்யப்போவதாக இம்ரான் கான் கட்சியைச் சேர்ந்த எம்.பிக்கள் தெரிவித்துள்ளனர்.


**இம்ரான் கானுக்கு ஆதரவாகப் போராட்டம்**

இதேவேளை, இம்ரான் கானுக்கு ஆதரவாக உள்நாடு, வெளிநாடு என அவரது ஆதரவாளர்கள் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர்.

ஆட்சிமாற்றத்தை ஏற்காத இம்ரான் ஆதரவாளர்கள் இஸ்லாமாபாத், கராச்சி, பெஷாவார, லாஹூர் உள்ளிட்ட பகுதிகளில் அலைகடல் என திரண்டு நகரங்களை முடக்கினர்.

உள்நாடு மட்டுமன்றி ஐக்கிய அரபு இராச்சியத்தின் டுபாயில் மீண்டும் இம்ரான் பிரதமர் பதவி ஏற்கவேண்டுமென நூற்றுக்கணக்கான மக்கள் திரண்டு போராட்டத்தில் ஈடுபட்டனர்.

## சொர்க்கத்தில் உன்னை சந்திக்கிறேன் அம்மா..!



போரில் தனது தாயை இழந்த உக்ரைன் சிறுமி, அவரது நினைவாக உருக்கமாக எழுதிய கடிதம் இணையதளத்தில் வைரலாகியுள்ளது.

அந்நாட்டின் போரோடியன்கா நகரில் பலியான பெண் ஒருவரின் நினைவாக அவரது 9 வயது மகள் எழுதிய கடிதத்தை உள்துறை அமைச்சரின் ஆலோசகரான ஆண்டன் ட்விட்டரில் பகிர்ந்துள்ளார்.

தனது தாய் உலகத்திலேயே மிகச்சிறந்த தாய் என்றும், தற்போது சொர்க்கத்தில் அவர் மகிழ்ச்சியாக இருப்பார் என நம்புவதாகவும் அந்தக் கடிதத்தில் சிறுமி குறிப்பிட்டுள்ளார்.

மேலும், நல்ல மனிதராக வாழ்வதற்கான அனைத்து முயற்சிகளையும் மேற்கொண்டு தான் சொர்க்கத்தில் இடம்பெற்று, அங்கு தனது தாயை சந்திப்பேன் என்றும் கடிதத்தில் கூறப்பட்டுள்ளது.

உக்ரைன் சிறுமியின் கடித்தை பலரும் சமூக வலைத்தளங்களில் பகிர்ந்து வருகின்றனர்.

இந்திய செய்திகள்

## மீனவர்களுக்கு பிணை வழங்க ரூ. ஒரு கோடி:


# உதவி செய்யும் இந்தியாவையே அபராதம் விதித்து அவமதிக்கிறது இலங்கை

### அன்புமணி ராமதாஸ் கண்டனம்

தமிழக மீனவர்களையும், படகுகளையும் மீட்க நடவடிக்கை எடுக்கவேண்டும் - என பா.ம.க. இளைஞரணித் தலைவர் அன்புமணி ராமதாஸ் வலியுறுத்தியுள்ளார்.

இது தொடர்பாக ராமதாஸ் தனது ட்விட்டர் பக்கத்தில்,

இலங்கை கடற்படையினரால் கடந்த மாதம் 24ஆம் திகதி கைதுசெய்யப்பட்ட தமிழக மீனவர்கள் 12 பேரை பிணையில் விடுவிக்க, அவர்கள் தலா ரூ. ஒரு கோடி செலுத்தவேண்டும் என்று இலங்கை நீதிமன்றம் ஆணையிட்டிருக்கிறது. இது எந்த வகையிலும் ஏற்றுக்கொள்ள முடியாததாகும்.




தமிழக மீனவர்கள் அறியாமல் எல்லை தாண்டியதைத் தவிர, வேறு எந்தக் குற்றமும் இழைக்கவில்லை. குறுகிய கடல் எல்லைகொண்ட பகுதிகளில் ஒரு நாட்டு மீனவர்கள் இன்னொரு நாட்டின் எல்லைக்குச் சென்று மீன் பிடிப்பது அடிப்படை உரிமையாக சர்வதேச அமைப்புகளால் அங்கீகரிக்கப்பட்டிருக்கிறது.

எல்லை தாண்டி மீன் பிடித்தால் ரூ. 25 கோடி அபராதம் விதிக்கப்படும் என்று மஹிந்த ராஜபக்ஷ காலத்தில் பிறப்பிக்கப்பட்ட ஆணையின்படியே இந்த அபராதம் விதிக்கப்படுவதாக தெரிகிறது. உதவி செய்யும் இந்தியாவையே அபராதம் விதித்து இலங்கை அவமதிப்பது கண்டிக்கத்தக்கது. ரூ. ஒரு கோடி அபராதம் செலுத்தினால்தான் பிணை என்றால் இலங்கை சிறைகளிலிருந்து தமிழக மீனவர்கள் விடுதலையாகவே முடியாது. எனவே, மத்திய, மாநில அரசுகள் இந்த விடயத்தில் தலையிட்டு தமிழக மீனவர்களையும், படகுகளையும் மீட்க நடவடிக்கை எடுக்கவேண்டும்'' - என்று பதிவிட்டுள்ளார்.

# தமிழ்தான் இந்தியாவின் இணைப்பு மொழி

### இசைப்புயல் ஏ.ஆர்.ரகுமான் தெரிவிப்பு



''தமிழ்தான் இந்தியாவின் இணைப்பு மொழி'' என இசைப்புயல் ஏ.ஆர்.ரகுமான் தெரிவித்துள்ளார்.

இந்நிலையில், சென்னை நந்தம்பாக்கத்தில் நடந்த தென்னிந்திய தொழில் கூட்டமைப்பு மாநாட்டில் பங்கேற்று பேசிய ஏ.ஆர்.ரகுமான், தமிழ்ப் படங்களை எங்கு பார்த்தாலும் நாம் பெருமை கொள்ளவேண்டும். இந்தியாவில் எங்கிருந்தாலும் இந்தியாதான். இதில் வடஇந்தியா தென்னிந்தியா என்று இல்லை.

தொடர்ந்து செய்தியாளர்களைச் சந்தித்த ஏ.ஆர்.ரகுமான், தமிழ்தான் இந்தியாவின் இணைப்பு மொழி என்று குறிப்பிட்டார்.




தமிழகத்தில் அவ்வப்போது ஹிந்தி தொடர்பான சர்ச்சைகள் ஓடிக்கொண்டே இருக்கின்றன. சில தினங்களுக்கு முன் மத்திய அமைச்சர் அமித் ஷா, ஆங்கிலத்திற்கு மாற்றாக இந்தியாவின் இணைப்பு மொழியாக ஹிந்தி இருக்கவேண்டும் எனத் தெரிவித்தார். இவரது கருத்துக்கு ஆதரவு தெரிவித்து பலரும் கருத்து பதிவிட்டனர். ஒரு மொழியை கற்க நினைப்பது அவரவர் இஷ்டம். இதை ஏன் தடுக்க வேண்டும் என பலரும் கருத்து பதிவிட்டனர். அதேசமயம் இதற்கு எதிர்ப்பும் கிளம்பியது.

ஒரு மொழியை கற்பது தவறல்ல, அதை திணிப்பதைத்தான் ஏற்கமாட்டோம் என பலரும் எதிர் கருத்து தெரிவித்தனர். முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் உள்ளிட்ட அரசியல் தலைவர்களும், இசையமைப்பாளர் ஏ.ஆர்.ரஹ்மான் போன்ற திரைப்பிரபலங்களும் ஹிந்திக்கு எதிராக தங்களது கருத்துகளை முன்வைத்தனர்.

# அ.தி.மு.கவிலிருந்து சின்னம்மா சசி நீக்கம்

### பொதுக் குழு தீர்மானம் செல்லும்: உரிமையியல் நீதிமன்றம் தீர்ப்பு



அ.தி.மு.க. பொதுச் செயலாளர் பதவியிலிருந்து தன்னை நீக்கிய பொதுக் குழு தீர்மானங்களை எதிர்த்து வி.கே.சசிகலா தொடர்ந்த வழக்கை நிராகரித்து சென்னை உரிமையியல் நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது.

முன்னாள் முதலமைச்சர் ஜெயலலிதா மறைவிற்குப் பின்னர், அ.தி.மு.க. பொதுச் செயலாளராக சசிகலா அறிவிக்கப்பட்ட நிலையில், 2017இல் அக்கட்சி பொதுக்குழுக் கூட்டத்தில் அவரை பதவியிலிருந்து நீக்கி தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

இதனை எதிர்த்து சசிகலா வழக்கு தொடர்ந்த நிலையில், அதனை நிராகரிக்கக் கோரி ஓ.பன்னீர்செல்வம், எடப்பாடி பழனிசாமி தரப்பில் மனு தாக்கல் செய்யப்பட்டது. அதில், சசிகலாவை கட்சியிலிருந்து நீக்கியதை உச்சநீதிமன்றம், தேர்தல் ஆணையம் ஏற்றதாக தெரிவிக்கப்பட்டது.

இதனைத் தொடர்ந்து, சசிகலாவை கட்சியிலிருந்து நீக்கியது செல்லும் என நீதிபதி உத்தரவிட்டார். இந்நிலையில், உரிமையியல் நீதிமன்ற தீர்ப்பை எதிர்த்து உயர்நீதிமன்றத்தில் மேல்முறையீடு செய்யவுள்ளதாக சசிகலா தெரிவித்துள்ளார்.

# தனுஷ்கோடியில் 19 அகதிகளை இறக்கிவிட்டு தப்பிய படகுகள்

இலங்கையிலிருந்து இரு படகுகளில், 19 அகதிகளை ஏற்றிச்சென்று தனுஷ்கோடியில் இறக்கி விட்ட படகுகள் தப்பியுள்ளன.

இலங்கையில் பொருளாதார வீழ்ச்சி, உணவு பொருள் விலை உயர்வு, 15 மணிநேர மின் தடை, வேலையின்மையால் மக்கள் உணவு, பணம் இன்றி பரிதவிக்கின்றனர். இச்சூழலில் மன்னாரிலிருந்து 19 அகதிகளை ஏற்றிவந்து, தனுஷ்கோடி முதலாம் மணல் தீடையில் ஒரு படகும், கோதண்டராமர் கோவில் கடற்கரையில் மற்றொரு படகுமாக இறக்கிவிட்டு, படகோட்டிகள் நால்வர் பத்திரமாக இலங்கை திரும்பியுள்ளனர்.

தீடையிலிருந்த அகதிகளை மெரைன் பொலிஸார் மீட்டு விசாரித்ததில், திருகோணமலை, யாழ்ப்பாணம், முல்லைத்தீவு பகுதிகளைச் சேர்ந்த ஆண்கள், பெண்கள், குழந்தைகள் என்பது தெரிந்தது. இவர்களை மண்டபம் அகதிகள் முகாமில் பொலிஸார் தங்க வைத்தனர். தலா 25 ஆயிரம் ரூபா கொடுத்து வந்ததாக அகதிகள் தெரிவித்துள்ளனர். கடலில் கண்காணிப்பையும் மீறி, அகதிகளை தமிழகத்திற்குள் விட்டுச்சென்றது, அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.



**சிறப்பு முகாம்களிலுள்ளோரை விடுதலைசெய்ய வேண்டும்**

இதேவேளை, ''சிறப்பு முகாம்களிலுள்ள இலங்கை அகதிகளை விடுதலைசெய்ய வேண்டும்'' என்று புலம்பெயர் தமிழர் பேரவை சார்பில் தமிழ்நாடு அரசுக்கு கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. சென்னையில் செய்தியாளர்களை சந்தித்த புலம்பெயர் தமிழர் பேரவை நிறுவுனர் ஜோன்சன் கோரிக்கை விடுத்துள்ளார்.

# குஜராத் இரசாயன தொழிற்சாலையில் வெடி விபத்து; 6 தொழிலாளர்கள் பலி



குஜராத்திலுள்ள இரசாயன தொழிற்சாலை ஒன்றில் ஏற்பட்ட திடீர் வெடி விபத்தில் சிக்கி 6 தொழிலாளர்கள் உயிரிழந்தனர்.

பரூச் மாவட்டத்தில் டஹேஜ் பகுதியில் அமைந்துள்ள இயற்கை இரசாயன தொழிற்சாலையில் நேற்றுமுன்தினம் இரவு தொழிலாளர்கள் வழக்கம்போல் பணிகளை செய்துகொண்டிருந்தபோது எதிர்பாராதவிதமாக வெடிவிபத்து நிகழ்ந்தது.

இதில் படுகாயமடைந்த 6 தொழிலாளர்களும் சிகிச்சை பலனின்றி உயிரிழந்தனர். வெடிவிபத்துக்கான காரணங்கள் குறித்து பொலிஸார் விசாரணை மேற்கொண்டு வருகின்றனர்.

# சீர்காழியில் வளர்ப்பு நாய்க்கு சீமந்தம்



சீர்காழியில் வளர்ப்பு நாய்க்கு சீமந்தம் செய்து அழகு பார்த்துள்ளனர் ஒரு குடும்பத்தினர்.

மயிலாடுதுறை மாவட்டம் சீர்காழி மதீனா நகரைச் சேர்ந்த தம்பதியரின் மகன்களான நிதீஷ்குமார் மற்றும் சிவராஜ் ஆகியோர் தங்களது உறவினர் வீட்டிலிருந்து நாய்க்குட்டி ஒன்றை தூக்கிவந்து தங்களது வீட்டில் வளர்த்து பராமரித்து வந்தனர்.

சிறுவர்கள் சுக்கி என பெயரிட்டு வளர்த்து வந்த நாய்க்குட்டி குடும்பத்தில் ஒரு அங்கத்தினராக மாறி பரிவுடன் வளர்ந்தது. வீட்டில் அனைவரிடமும் பாசமுடன் பழகிய நாய்க்குட்டி சுக்கி தற்போது கருவுற்றுள்ளது.

அதனை அறிந்த வீட்டிலிருந்த அனைவரும் நாய்க்குட்டிக்கு சீமந்தம் செய்ய முடிவு செய்தனர். அதன்படி அப்பகுதியைச் சேர்ந்த பொதுமக்களை தங்கள் வீட்டிற்கு அழைத்து தங்களது வளர்ப்பு நாய்க்கு சீமந்தம் செய்து மகிழ்ச்சியடைந்தனர்.

இந்நிகழ்ச்சியில் அப்பகுதியைச் சேர்ந்த திரளான பொதுமக்கள் கலந்துகொண்டு நாய்க்கு சந்தனம், மஞ்சள், குங்குமம் இட்டு சீமந்தம் செய்து மகிழ்ச்சியுடன் கொண்டாடினர்.

இந்த நிகழ்வை வீடியோவாக பதிவுசெய்து தங்களது உறவினர்கள் மற்றும் நண்பர்களுக்கு வட்ஸ்-அப் மூலம் அனுப்பிவைத்துள்ளனர்.

# பீகாரில் பாலத்தை திருடிய 8 பேர்கொண்ட கும்பல் கைது



பீகாரிலுள்ள ரோட்டாஸ் மாவட்டத்தில் ஒரு பாலத்தையே காணவில்லை என்று கிராம மக்கள் முறையிட்டதையடுத்து பொலிஸார் விசாரணை நடத்தி 8 பேரை கைதுசெய்துள்ளனர்.

கடந்த 5 ஆண்டுகளாக கட்டப்பட்டு பயன்பாட்டுக்கு திறக்கப்படாமல் இருந்த இரும்புப் பாலம் இரவோடு இரவாக காணாமல்போனதை யடுத்து கிராம மக்கள் அதிர்ச்சியடைந்தனர்.

சிலர் நீர்வளத்துறை அதிகாரிகள்போல் நாடகமாடி பாலத்தை பெயர்த்துவிட்டதாக ஊர்மக்கள் முறைபாடளித்துள்ளனர். இதையடுத்து நடவடிக்கையில் இறங்கிய பொலிஸார் அரசு அதிகாரியின் உதவியுடன் பாலத்தைத் திருடிய 8 பேரை கைதுசெய்தனர்.

அவர்களிடமிருந்து ஜேசிபி இயந்திரம், 247 கிலோ எடை கொண்ட இரும்புக் கம்பிகள் மற்றும் இதரப் பொருட்களை பறிமுதல் செய்துள்ளனர்



# ஐ.சி.சி. கிரிக்கெட் குழுவில் உறுப்பினரான மஹேல



இலங்கை கிரிக்கெட் அணியின் முன்னாள் வீரரான மஹேல ஜயவர்தன ஐ.சி.சி. ஆடவர் கிரிக்கெட் குழுவின் உறுப்பினராக இணைக்கப்பட்டுள்ளார். மொத்தம் ஐந்து பேர் அடங்கிய இந்த கிரிக்கெட் குழுவில் மஹேல, முன்னாள் கிரிக்கெட் வீரர் ஒருவரினை பிரதிநிதித்துவம் செய்யும் வகையில் உறுப்புரிமை பெற்றிருப்பது குறிப்பிடத்தக்கது.

கிரிக்கெட் சபை ஒன்றினை பிரதிநிதித்துவம் செய்யும் வகையில் இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபையின் செயலாளர் ஜெய் ஷா உறுப்புரிமை பெற்றுள்ளார். மேலும் நியூசிலாந்து கிரிக்கெட் பயிற்சியாளர் கேரி ஸ்டேட், மேற்கிந்திய தீவுகளைச் சேர்ந்த நடுவர் ஜோயல் வில்சன் மற்றும் மெர்லிபோன் கிரிக்கெட் கழகத்தினை பிரதிநிதித்துவம் செய்கின்ற ஜேமி கோக்ஸ் ஆகியோரும் இந்தக் குழுவில் இடம்பெற்றிருக்கின்றனர்.

ஐ.சி.சியின் கிரிக்கெட் குழுவானது சர்வதேச கிரிக்கெட் போட்டிகளுக்குத் தேவையாக இருக்கும் சில முக்கிய ஆலோசனைகளை வழங்கும் ஓர் அமைப்பாக காணப்படுகின்றது.

விளையாட்டு செய்திகள்

thamilansports@gmail.com

# யாழ். அணியை வீழ்த்தி நெஷனல் சுப்பர் லீக் சம்பியனான கண்டி அணி













இலங்கை கிரிக்கெட் சபையின் ஏற்பாட்டில் நடைபெற்ற நெஷனல் சுப்பர் லீக் தொடரின் இறுதிப் போட்டியில் யாழ்ப்பாண அணியை வீழ்த்தி கமிந்து மெண்டிஸ் தலைமையிலான கண்டி அணி சம்பியன் மகுடம் சூடியது. காலி சர்வதேச கிரிக்கெட் மைதானத்தில் நடைபெற்ற இப்போட்டியில் முதல் இன்னிங்ஸ் வெற்றியை பதிவுசெய்ததன் மூலம் கண்டி அணி சம்பியனாகத் தெரிவாகியது.

இறுதிப்போட்டியில் நாணய சுழற்சியில் வென்று முதலில் துடுப்பெடுத்தாடிய கண்டி அணி சகல விக்கெட்டுகளையும் இழந்து 444 ஓட்டங்களைக் குவித்தது. பதிலுக்கு தமது முதல் இன்னிங்ஸில் துடுப்பெடுத்தாடிய யாழ்ப்பாண அணி 227 ஓட்டங்களுக்கு சுருண்டுபோனது.

இதனையடுத்து 217 ஓட்டங்கள் முன்னிலையுடன் தமது இரண்டாவது இன்னிங்ஸை ஆரம்பித்த கண்டி அணி, மூன்றாம் நாள் ஆட்டநேர முடிவில் ஒரு விக்கெட் இழப்பிற்கு 52 ஓட்டங்களை எடுத்தது. போட்டியின் கடைசி நாளான நேற்று முன்தினம் முழுவதும் பெய்த பலத்த மழை காரணமாக போட்டியை ஆரம்பிப்பதில் தாமதம் ஏற்பட்டது. இதனையடுத்து மதியம் 1.45 மணியளவில் மைதானத்தை ஆய்வுசெய்த நடுவர்கள் போட்டியை கைவிடுவதற்கு நடவடிக்கை எடுக்க போட்டி சமநிலையில் முடிவடைந்தது.

இதன்படி, முதல் இன்னிங்ஸ் வெற்றியைப் பதிவுசெய்த கண்டி அணி சம்பியனானது. சம்பியனாகிய கண்டி அணிக்கு ரூ. 50 இலட்சம் பணப்பரிசும், இரண்டாவது இடத்தைப் பிடித்த யாழ்ப்பாண அணிக்கு ரூ. 25 இலட்சம் பணப்பரிசும் வழங்கப்பட்டன.

11 இன்னிங்ஸ்களில் 886 ஓட்டங்களை குவித்த கண்டி அணியின் தலைவர் கமிந்து மெண்டிஸ் தொடரின் ஆட்டநாயகன் விருதை வென்றார். இந்தத் தொடரில் நான்கு சதங்கள் மற்றும் நான்கு அரைச்சதங்களை அவர் பெற்றுக்கொண்டார். இதேவேளை, கண்டி அணியின் ஒஷத பெர்னாண்டோ சிறந்த துடுப்பாட்ட வீரராகவும், கொழும்பு அணியின் பிரபாத் ஜயசூரிய சிறந்த பந்து வீச்சாளராகவும் தெரிவானர்.

# முதலிடத்துக்கு முன்னேறிய சஹால்; ஐந்தில் ஒரேயொருவராக ஹஸரங்க




நடப்பு ஐ.பி.எல். தொடரில் அதிக விக்கெட்டுகள் எடுத்த வீரர்களின் பட்டியலில் உமேஷ் யாதவை விடவும் ஒரு விக்கெட் கூடுதலாக எடுத்து ராஜஸ்தான் ரோயல்ஸ் அணியின் சுழற்பந்துவீச்சாளர் யுஸ்வேந்திர சஹால் முதலிடத்துக்கு முன்னேறியுள்ளார்.

ஐ.பி.எல். தொடரில் இந்தியப் பந்துவீச்சாளர்களுக்கு நிகராக வெளிநாட்டுப் பந்துவீச்சாளர்களும் சிறப்பாக விளையாடி அதிக விக்கெட்டுகளை எடுப்பார்கள். ஆனால், ஐ.பி.எல். 2022 போட்டியில் அதிக விக்கெட்டுகள் எடுத்த வீரர்களின் பட்டியலில் முதல் 5 இடங்களில் 4 இந்திய வீரர்கள் உள்ளனர். இதில் ஒரேயொரு வெளிநாட்டு வீரராக இலங்கையைச் சேர்ந்த வனிந்து ஹஸரங்க 8 விக்கெட்டுகளை வீழ்த்தி 4ஆவது இடத்தில் உள்ளார்.

சனிக்கிழமை வரை அதிக விக்கெட்டுகள் எடுத்த வீரர்களின் பட்டியலில் வேகப்பந்து வீச்சாளர் உமேஷ் யாதவ் முதலிடத்தில் இருந்தார். ஆனால், நேற்று முன்தினம் நடைபெற்ற ஆட்டங்கள் நிலைமையை மாற்றிவிட்டன. சஹால், லக்னோ அணிக்கு எதிராக 4 விக்கெட் எடுத்ததால் அதிக விக்கெட்டுகள் எடுத்த வீரராக முதலிடத்துக்கு முன்னேறியுள்ளார்.




# ஐ.பி.எல். வரலாற்றில் முதல் முறை பதிவான சம்பவம்





RR vs LSG
போட்டியை காண

லக்னோ சுப்பர் ஜயண்ட்ஸ் அணியுடனான போட்டியில் ராஜஸ்தான் ரோயல்ஸ் அணியின் சகலதுறை வீரர் ரவிச்சந்திரன் அஸ்வின் ஆட்டமிழந்த விதம் பேசுபொருளாக மாறியுள்ளது.

நடப்பு ஐ.பி.எல். தொடரின் 20ஆவது லீக் போட்டியில் ராஜஸ்தான் ரோயல்ஸ், லக்னோ சுப்பர் ஜயண்ட்ஸ் அணிகள் மோதின. இந்தப் போட்டியில் இறுதிப்பந்து வரை போராடிய லக்னோ அணி 3 ஓட்டங்கள் வித்தியாசத்தில் தோல்வியை தழுவியது. முதலில் துடுப்பெடுத்தாடிய ராஜஸ்தான் ரோயல்ஸ் அணியில் சிம்ரொன் ஹெட்மையர் - ரவிச்சந்திரன் அஸ்வின் ஜோடி அணியை சரிவிலிருந்து மீட்டது.

இறுதியில் கடைசி இரு ஓவர்கள் மட்டுமே எஞ்சியிருந்தது. இதில் அதிரடி காட்டினால் மட்டுமே அணியால் 160இற்கும் மேற்பட்ட ஓட்டங்களை அடிக்க முடியும் என்ற நிலை இருந்தது. அப்போது ஆவேஷ் கான் வீசிய 19ஆவது ஓவரின் முதல் பந்தில் ஹெட்மையர் ஒரு ஓட்டம் எடுத்த நிலையில், அடுத்த பந்தில் அஸ்வின் ஒரு ஓட்டம் எடுத்துக்கொடுத்தார். இதனைத் தொடர்ந்து அஸ்வின் திடீரென்று பெவிலியன் திரும்பினார்.

என்ன நடக்கிறது என்பது புரியாமல் அனைவரும் திகைத்துப்போய் நின்றிருந்த நிலையில், அஸ்வின் ரிட்டயர்ட் அவுட்டாகிவிட்டார் என தகவல் வெளியானது. அஸ்வின் தொடர்ந்து ஓட்டங்களைக் குவிக்க முடியாமல் தடுமாறி வந்தார். மேலும், சோர்ந்துபோயும் இருந்ததால் பெரிய ஷொட்களை அடிப்பது கஷ்டம் எனத் தெரிந்துதான் ரியான் பராக்கை களமிறக்கியிருக்கிறார்.

ஐ.பி.எல். வரலாற்றில் ரிட்டயர்ட் ஹர்ட் முறையில் ஆட்டமிழப்பது இதுதான் முதல் முறையாகும். அஸ்வின் வரலாற்றில் இடம் பிடித்துவிட்டார் என்றே கூட சொல்லலாம். பொதுவாக டெஸ்டில், அதுவும் 'ஏ' அணிகள் பங்கேற்கும் ஆட்டங்களில்தான் ரிட்டயர்ட் ஹர்ட் அதிகமுறை நடக்கும். ஒருநாள் கிரிக்கெட்டில், வீரர்களுக்கு காயம் ஏற்பட்டால், ரிட்டயர்ட் ஹர்ட் முறையில் வெளியேறுவார்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

# விளையாட்டுத்துறையில் சாதித்துவரும் பூண்டுலோயா மாணவி சிநேகா








(இக்பால் அலி)

பூண்டுலோயா பி.சிநேகா என்ற மாணவி பல்வேறு விளையாட்டுத்துறைகளில் சாதனைகளை நிலைநாட்டிவரும் ஒருவர். இவர் 2021களில் தெற்காசிய விளையாட்டுப் போட்டி நேபாளம் காத்மண்டுவில் நடைபெற்றபோது 'அட்டையா பட்டையா' என்கின்ற விளையாட்டுப் போட்டியில் இலங்கை அணி சார்பாக விளையாடி நாட்டுக்குப் பெருமை தேடிக்கொடுத்தார்.

அட்டையா பட்டையா எனும் விளையாட்டு இலங்கையில் விளையாடும் கிளித்தட்டு விளையாட்டைப் போன்றதாகும். இலங்கை சார்பாக கலந்துகொண்ட மலையக அணி ஏனைய நாடுகளுடன் விளையாடி இறுதியாக இந்திய அணிக்கு எதிராக விளையாடியபோது இரண்டாவது சம்பியன் கிண்ணத்தைப் பெற்றுக்கொண்டது.

பூண்டுலோயா பி.சிநேகா மலையக கபடி விளையாட்டு அணியில் விளையாடிய ஒருவர். அந்த அணியினரே இந்த அட்டையா பட்டையா என்கின்ற விளையாட்டில் கலந்து கொண்டனர். இந்த விளையாட்டு கிளித்தட்டு விளையாட்டைப் போன்றது. இரு பக்கமும் எட்டுப் பெட்டிகள் போட்டிருப்பார்கள். கிளித்தட்டு விளையாட்டுப் பயிற்றுவிப்பாளர் அந்தோனி செபஸ்தியன்ராஜ்தான் இதற்கான பயிற்றுவிப்பாளராக கடமையாற்றியவர்.

இவ்விளையாட்டின் ஒழுங்குவிதிகள் சற்று வித்தியாசனமானது. கிளித்தட்டில் அடித்துவிட்டு ஓடுவார்கள். அட்டையா பட்டையாவில் அடித்துவிட்டு அப்படியே நிற்பார்கள். அடிக்கிற இடத்தில் அப்படியே நிற்கவேண்டும். இவ்விளையாட்டு வீராங்கனை மெய்வல்லுனர் விளையாட்டுக்களில் ஈடுபாடு காட்டிவருகிறார். இவர், 800, 400 மீற்றர் ஓட்டப் போட்டிகளில் கலந்துகொண்டு திறமைகளைக் காட்டியுள்ளார். யோகாசனக் கலையில் அதிக ஈடுபாடு காட்டி அதனை கற்று அதன்மூலம் திறன்பட செயற்பட்டுவரும் பி. சிநேகா விளையாட்டுத்துறையில் மென்மேலும் தம் ஆளுமைகளை நிலைநாட்ட வேண்டும் என்பது எமது எதிர்பார்ப்பாகும்.

# மட்டக்களப்பு இந்துக் கல்லூரியை வீழ்த்தி அடுத்த சுற்றுக்கு தகுதிபெற்ற கல்முனை ஸாஹிரா கல்லூரி





(நிந்தவூர் நிருபர்)

இலங்கை பாடசாலைகள் கிரிக்கெட் சம்மேளனம் நடத்தும் அகில இலங்கை பாடசாலைகளுக்கு இடையிலான டிவிசன் - 3 கடினபந்து கிரிக்கெட் போட்டியில் கல்முனை ஸாஹிரா தேசியக் கல்லூரி அணி 123 ஓட்டங்களினால் வெற்றிபெற்றது.

கல்முனை ஸாஹிரா தேசியக் கல்லூரி மற்றும் மட்டக்களப்பு இந்துக் கல்லூரி அணிகளுக்கு இடையிலான போட்டி அண்மையில் மட்டக்களப்பு சிவானந்தா தேசியக் கல்லூரி மைதானத்தில் இடம்பெற்றது. நாணய சுழற்சியில் வெற்றிபெற்ற கல்முனை ஸாஹிரா தேசியக் கல்லூரி அணி முதலில் துடுப்பாட்டத்தில் ஈடுபட்டு 50 ஓவரில் 9 விக்கெட்டுகளை இழந்து 282 ஓட்டங்களை பெற்றுக்கொண்டது.

பதிலுக்கு துடுப்பெடுத்தாட களமிறங்கிய மட்டக்களப்பு இந்துக் கல்லூரி அணியினர் 37.3 ஓவர்களில் 159 ஓட்டங்களுக்குள் சகல விக்கெட்டுகளையும் இழந்தனர். இப்போட்டியில் 106 பந்துகளுக்கு 5 சிக்ஸர்கள், 14 பவுண்டரிகள் உள்ளடங்கலாக 110 ஓட்டங்களைப் பெற்ற கல்முனை ஸாஹிரா தேசியக் கல்லூரி வீரர் அஸ்மத் ஸஹி ஆட்டநாயகனாக தெரிவு செய்யப்பட்டார்.

கல்முனை ஸாஹிரா தேசியக் கல்லூரியின் விளையாட்டுத்துறை ஆசிரியர் ஏ.எம். அப்ராஜ் றிலா, முஹம்மட் றஜீப் மற்றும் விளையாட்டுப் பயிற்றுவிப்பாளர் ஏ.எம். ஜப்ரான் ஆகியோரின் வழிகாட்டலில் இம் மாணவர்கள் தமது திறமைகளை வெளிக்காட்டியுள்ளனர்.

Printed by the Kalukodayawa, Malwana Press & Published by Liberty Publishers (Pvt.) Ltd. 91, Wijerama Mawatha, Colombo 7